ரிஜிஸ்டர் நெ. 2041 தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0	
6-மாத சந்தா ,,	— ,,	1--12	
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0	

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஸ்ரீமுக-ஸு சித்திரை-மீ 4-உ (16—4—1933) | மலர் 51.

Lenin and Religion

லெனினும், மதமும்.

இது ருஷியர்களின் மதப்பித்தையும், கடவுளுணர்ச்சியையும் ஒழித்து ஏழை பணக்காரன் என்கின்ற தன்மை அழித்து பொது உடைமைக் கொள்கையை நிலை நாட்டிய தனிப்பெரும் வீரர் தோழர் லெனின் அவர்களால் மதத்தைப் பற்றி எழுதியதாகும். இதைப் படிப்பதால் மதம் பணக்காரர்களுக்கும் முதலாளி அரசாங்கத்திற்கும் எவ்வளவு தூரம் உதவி செய்கின்றது என்பது விளங்கும்.

விலை அணா 0—1—0 சந்தாதாரர்களுக்கு விலை அணா 0—3—0

இந்தியாவின் குறைபாடுகள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

விசாலாட்சி அல்லது கட்டறுத்த காரிகை.

இது செட்டி நாட்டு வகுப்பில் நடந்த மாதிரியாய் செட்டிமார்கள் பழக்க வழக்கங்களையும் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது.

பிரதி ஒன்றுக்கு விலை அணா 0—4—0
சந்தாதாரர்களுக்கு ... ... 0—3—0

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"

பெரிய புத்தகம். விலை ரூ 2. (தபால் சார்ஜ் வேறு.)

சென்னை லோகல் போர்டு ஆக்டு.

(1930ம் ஸு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரு. 0—5—0

Ready for Sale! Ready for Sale!!

The Crux of the Indian Problem By Dr. Paranjpye M. A., D. Sc.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

"கடவுளும், பிரபஞ்சமும்"

கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதை சவிஸ்தாரமாக உதாரணங்களுடன் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். அதிக பக்கங்கள், குறைந்த விலை.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர்லால் நேரு எழுதிய ஆங்கில நூலின் நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

ஏழை, பணக்காரன், அடிமை ஆண்டான் என்ற உயர்வு, தாழ்வு, கற்பிக்காத—ஆண், பெண் சரிநிகர் சமானமாக வாழும் சோவியத் ருஷியாவுக்குச் சென்ற பண்டித நேரு, அங்கு பிரத்தியக்ஷமாகக் கண்டதையும், அறிந்ததையும், ஆராய்ந்ததையும் ஐயந்திரிபற இந்நூலில் தந்துள்ளார்.

இதில் சோவியத் ருஷியாவின் ஆட்சி முறையும், கல்விச் சீர்திருத்தமும், வியாபார—விவசாயப்பெருமிதமும், மக்கள் வாழ்க்கையும், அவசியமான விஷயங்களும் பல சித்திரப்படங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது.

மேலும் ருஷியாவின் சரித்திரத்தைச் சுருக்கமாகவும் அதன் ஒப்பற்ற தலைவர்களான மஹாத்மா, லெனின், அவர் மனைவியார் கிரப்ஸ்கீ அம்மையார் சர்வாதிகாரி ஸ்டாலின் முதலியோரின் படங்களையும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

சோவியத் ருஷியாவை சாங்கோபாங்கமாக அறிய விரும்பும் தமிழ் சோதரர்களுக்கு இதுவே முதல் நூலும் முதற் சந்தர்ப்பமுமாகும்.

"தமிழ் நாடு" ஆசிரியர்,
டாக்டர் பி. வரதராஜலு நாயுடு அவர்களின்
முகவுரையோடு கூடியது.

21 ஆப்டோன் படக்களுடன் கூடிய கிளேஸ் பதிப்பு.

விலை ரூ. 1—4—0 தபால் செலவு வேறு. வெளிநாட்டினர் தபாற் செலவுக்கும் சேர்த்து ரூ 1—10—0 அல்லது 3 ஷிலிங் அனுப்புதல்வேண்டும்.

ராட்டூர் வீரன் துர்க்கா தாஸ்

சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்.

வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திரலால் ராய் எழுதியது.

அவரது நாடகங்களனைத்திலும் இதுவே ஒப்பற்றதாகும்.

எல்லா ரசங்களும் பொருந்தியது! அனைவர் மதிப்புக்கும் ஏற்றது!! சுதேச பக்தியும், க்ஷத்திரிய வீரமும் ஒளிர்வது! அற்புத—ஆச்சரிய—ஆனந்த சம்பவங்கள் நிறைந்தது! தமிழ் நாடக மேடை உயர்வுக்கு இஃதோர் உபகரணமாகும். சிறப்பாக தமிழ் நாடக நடிகர்களும்—நடிகைகளும் பொதுவாக நடிகப் பிரியர்களுமே யன்றி யாவரும் இந்நூலை வாசிக்கவேண்டியதவசியம்.

இதன் விலை ரூ. 1—4—0. தபாற் செலவு வேறு.
வெளிநாட்டினர் தபாற் செலவுக்கும் சேர்த்து ரூ 1—10—0 அல்லது 3 ஷிலிங் அனுப்புதல் வேண்டும்.

தூங்கிக்கிடந்த தமிழ்நாட்டைக் கனப்பொழுதிலே கனன்றெழச் செய்த

கவிக் கனல்! சக்திமலை!! வீர விளக்கு!!!

சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

தமிழ் நாட்டின் தேசீய கவி.

(ஓர் விரிவான ஆராய்ச்சி நூல்)

இந்நூலின் கவியரசு பாரதியாரின் வாழ்க்கை வரலாறு கவிதா விலாசம், தேசவெறி, மதப்பற்று, காதற்போக்கு, கருணை விளக்கம், ஆத்ம சிந்தனை, இன்பரசனை முதலியவைகளோடு பாரதியாரைப்பற்றி இதுபரியந்தம், அச்சேறாத சில புதிய விஷயங்களும், கண்ணன் பாட்டு பாஞ்சாலி சபதம், குயிற்காதல் இவைகளும் சேர்க்கப்பெற்று தற்கால முற்கால பல தேசப் பெரியார்கள் கவியரசர்கள் இவர்களின் உயர்ந்த மேற்கோள்களோடு ஆராய்ச்சி செய்யப்பெற்றிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—0—0. தபாற் செலவு வேறு.
வெளிநாட்டினர் தபாற் செலவுக்கும் சேர்த்து ரூ. 1—6—0 அல்லது 2½ ஷிலிங் அனுப்புதல் வேண்டும்.

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

ஓ! பலங்குன்றியவர்களே! தாதுபுஷ்டியில்லாதவர்களே! கிழத்தன்மையடைந்தவர்களே!

இதோ சாப்பிடுங்கள்

தங்கபஸ்பம்

இதை 1½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார தாது புஷ்டியும், பசியும், ரக்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது; பத்தியமில்லை. நாட்பட்ட அல்லது புதிதாயுண்டான எல்லாவியாதிகளையும் நீக்கி ஆண்மைத்தனத்தை உண்டாக்கி தாதுபுஷ்டியைக்கொடுக்கும்.

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10.

குரு நாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆபரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும், சீழ் மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும் உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி 1-க்கு ரூ. 4.

தாளக பஸ்பம் - இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8 வித காசமும் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 4.

அப்ரேக் செந்தூரம் - நீரழிவுக்கு

ஜாஸ்திபோகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகலமேகமும் நீங்கும். தளுக்கற்றது. புட்டி 1-க்கு ரூ. 15. வி. பி. வேறு.

வைத்திய ஆசிரியர் **மலையப்பசாமி,**
வைத்தியசாலை, பழனி, S. I.,

மதமும் லெனினும்.

100 பக்கம் விலை அணா 0—4—0. 100 புத்தகம் 12-8-0 தபால் செலவு வேறு.

ஜார்ஜ் பெர்னாட்ஷாவின்,

அமெரிக்க சொற்பொழிவும், பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு அளித்த சேதிகளும்.

விலை அணா 0—1—0. 100 புத்தகம் 4—0—0. தபால் செலவு வேறு.

இவைகளில் 100 புஸ்தகங்களுக்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கட்கு மேற்கண்ட குறைந்த விலைக்குக் கொடுக்கப்படமாட்டாது. இதற்குக்கமிஷன் இல்லை.

விலாசம்:-- மானேஜர்
'குடி அரசு" ஈரோடு.

இந்தியாவின் குறைபாடு.

160 பக்கம் 0—8—0. 100 புத்தகம் 25—0—0. தபால் செலவு வேறு.

முன் பணம் வராத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது. தபால் செலவு சேர்த்தனுப்பாத ஆர்டர்களுக்கு தபால் செலவுக்காக வி. பி. எடுத்துக் கொள்ளப்படும்.

ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை பை-0-0-6 100-புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ. அனுப்பினால் 100-புத்தகம் தபால் கூலி யில்லாமல் அனுப்பப்படும்.

குடி அரசு எங்கும் துலங்குக! முடிஅரசு எங்கும் வீழ்க!!

1917-ம் வருஷத்திய ருஷ்யப் புரட்சி.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

மூன்றாவது நாள் வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் பலாத்காரத்தைக் கையாள ஆரம்பித்தனர். "வைபார்க்" ஜில்லாவில் அவர்கள் போலீஸ் ஸ்டேஷன்களைத் தன் வசப்படுத்தி அவற்றின் ஆயுதங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டார்கள். தெருக்களைப்பாதுகாக்க நிறுத்தப்பட்ட கோஷக் காவல் படை வீரர்கள் நடுநிலைமை வகித்து நின்றதோடு வேலை நிறுத்தக்காரர்களுக்கு அனுகூலமாகவும் இருந்தனர். மறுநாள் யுத்த அரங்கத்திலேயிருந்த "ஜார்" வேலை நிறுத்த இயக்கத்தை உடனே நசுக்கவேண்டுமென்று ராணுவ கவர்னருக்கு ஒரு தந்தியும், டூமா வைக்கலைக்கும்படியாகப் பிரதம மந்திரி காலிட்ஸினுக்கு ஒரு தந்தியும் கொடுத்தார். அவ்விருவர்களும் அப்படியே செய்தார்கள். அதற்காக 150 ஜனங்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இந்த அடக்குமுறையானது புரட்சி ஜனங்களுக்கு ஒரு புத்துணர்ச்சியும், வேகத்தையும்கொடுத்ததுடன்ஒவ்வொரு சிப்பாயுக்கும் அரசாங்கம் சனங்களைச் சுடும்படி உத்தரவு கொடுத்த போதிலும் நம் உடன் பிறந்தவர்களை நாம் சுடலாமா?" என்கின்ற ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்கி விட்டது. இதனால் பட்டாளத்தின் "ஒழுக்கம்" பாழ்பட ஆரம்பித்தது.

துப்பாக்கிகளால் குண்டு மழையைப் பொழிந்துவிட்டதினால்மட்டும் வேலை நிறுத்தத்தை ஒழிக்க முடியவில்லை. இந்நிலையில் இரண்டு பட்டாளங்களும் வேலை நிறுத்தக்காரர்களோடு சேர்ந்து கொண்டன. உடனே உண்மையான யுத்தம் அரசாங்கத்துக்கும், ஜனங்களுக்கும் ஆரம்பமாய் விட்டது. ராணுவ கவர்னர் "காபலாவ்" தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 சிப்பாய்களை அனுப்பி யுத்தத்தை அடக்கும்படி உத்திரவிட்டார். பெருங்கூட்டமாக சென்ற சைனியம் கொஞ்ச தூரம் சென்றதும், பல பிரிவாகப் பிரிந்து கலைந்து விட்டது. இதன் பின்னால் அனுப்பப்பட்ட பெரிய பெரிய பட்டாளங்கள் எல்லாம் கலகக்காரர்களைக் கண்டவுடன் கட்டித் தழுவி முத்தங்கொடுத்துக் கொண்டு உறவாடித் தங்களிடமிருந்த ஆயுதங்களை அவர்களுக்குக் கொடுத்து உதவி செய்ய ஆரம்பித்தனர். "ஜார்" யுத்த அரங்கத்திலிருந்து புதிய பட்டாளங்களை அனுப்புவதாகச் சொல்லியிருந்தார். மந்திரிகள் பாதுகாப்பில்லாமல் தவித்து ஒளிந்து கொள்வதற்கு ஓடினார்கள். ஆனால் ஜனங்கள் அவர்களைக் கைது செய்து சிறையிலிட்டார்கள். இவ்வாறுகத் தலைநகரத்தில் புரட்சிக்காரர்களுக்கு நிகரில்லாத வெற்றி ஏற்பட்டது. ஆயினும் ஜாரினுடைய வல்லமை முழுவதும் குறைந்து போய் விடவில்லை.

ஜனங்கள் "டூமா" சபை அங்கத்தினர்களிடம் சென்று புரட்சியைத் தலைமை வகித்து நடத்தும்படி வேண்டினார்கள். அவர்கள் ஜனங்களை அடக்கி நடத்தத்திறமையில்லாமல் மறுத்து விட்டார்கள். ஆனால் ஜாரினுடைய ஏதேச்சாதிகாரமும், அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இந்தத்தருணத்தில் விடுதலையடைந்த புரட்சித் தலைவர்கள் ஊர் ஊராகச்சென்று ஜனங்களை ஒழுங்கு படுத்தித் திரட்டி விட்டார்கள். மார்ச்சு மாதம் 1-ந்தேதி சோவியத் கமிட்டியமைக்கப்பட்டு முதல் கூட்டத்திற்கு 250 அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள். இதற்கு மூன்று வாரங்களுக்குப் பிறகு தான் லெனின் முன்வந்து எரிகின்ற புரட்சிக்கு எண்ணை வார்த்தார், அவருடைய கருத்து இடையில் என்ன சமாதானம் ஏற்பட்ட போதிலும் யுத்தத்தை நிறுத்தாமல், தொழிலாளர்களுக்குப் பூர்ண வெற்றி கிடைக்கும் வரை நடத்த வேண்டுமென்பதே. டூமா அங்கத்தினர்கள் சோவித் கமிட்டியைக் கலந்து கொண்டு தற்காலிகமாக ஒரு ஆட்சியை ஏற்படுத்திவிட வேண்டுமென்று முயன்றார்கள். இந்தச் சமயத்தில் ஜாரையும், அவருடைய குடும்பத்தாரையும் என்ன செய்யவேண்டுமென்ற பிரச்சினை எழுந்தது. "டூமா" அங்கத்தினர்கள் குடியாட்சி ஏற்படாமல் இருக்கவேண்டுமென்பதற்காக ஜார் குடும்பத்தாரைக் காப்பாற்றி அவருடைய குமாரனுக்கு முடி சூட்டவேண்டுமென்று எண்ணினார்கள். "ஜார்" தன்னுடைய மகனுக்கு ஆபத்து வந்துவிடுமென்று பயந்து தம்முடைய சகோதரர் "மெக்கேல்" பட்டம் தரிக்கும்படி அனுப்பினார். அங்கத்தினர்கள் அதை விரும்பவில்லை. இதற்கிடையில் சோவியத்தினுடைய மகிமை அளவுக்கு மீறி வளர்ந்து விட்டது. "ஜார்" தம்மை எப்படியும் உயிரோடு இங்கிலாந்து போகும்படி தப்பித்து விட்டால் போதுமென்று பிரார்த்தித்தார். பொதுவுடமைக்காரர்கள் ஜார் குடும்பத்தாரை உடனே கைது செய்ய வேண்டுமென்று கூறினார்கள். புதிய மந்திரிகள் நேரில் சென்று ஜார் குடும்பத்தாரை கைதிசெய்து சிறைப்படுத்தினார்கள். இந்நிலையில் புரட்சிக்காரர்களுக்குப் பட்டாளத்தின் உதவி அவசியமாயிற்று. அவர்கள் சிப்பாய்களினுடைய உரிமைகளைப் பாதுகாப்பது தங்களுடைய கடமையென்று விளம்பரப்படுத்தினார்கள். இதனால் சேனையின் உதவி கிட்டியது.

ஐரோப்பிய யுத்தமும், புரட்சியும்.

ருஷிய டூமா (பார்லிமெண்ட்) சபை அங்கத்தினர்கள் ஐரோப்பா யுத்தத்தை நிறுத்தாமல் நடத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் நேச தேசங்களுடன் ஏற்கனவே ரகசியமாகச் செய்து கொண்டிருந்த ஒப்பந்தப்படி மறுபடியும் யுத்தம் செய்வதென்று தீர்மானித்தார்கள். ஆனால் புரட்சிக்காரர்கள் யுத்தத்தை நடத்த கொஞ்சங்கூடப்பிரியப்படவில்லை. எப்படியாவது சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்பதே அவர்களது விருப்பம். அதாவது "எங்களுக்குப் புதிதாக ஒரு ராஜ்யமும் வேண்டாம். எங்களிடமிருந்து நீங்களும் ஒன்றும் கேட்காதீர்கள்" என்று புரட்சிக்காரர்கள் ஒரு சமாதான விளம்பரத்தை வெளியிட்டு விட்டார்கள். பிறகு ரகசியமாய்ச் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளைத் தகர்த்தெரிய வேண்டுமென்றும், அவர்கள் வற்புறுத்தினார்கள். மந்திரிகளையும் தங்களுடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தினார்கள். ஆனால் மந்திரிகளோ எல்லா நாடுகளிலும் சுதந்திரம் ஏற்பட்டு நிலையான ஒரு சமாதானம் ஏற்படவேண்டுமென்பதே ருஷியாவின் நோக்க" மென்று தெரிவித்தார்கள். இந்த விஷயங்களை நேச தேசங்களுக்கு அனுப்பிய அன்னிய நாட்டு மந்திரி, தமது கடிதத்தில், ரகசியமாக ருஷ்யா யுத்தத்தை நடத்த ஆக்ஷேபனையில்லை யென்றும் குறிப்பும் எழுதி விட்டார். இது எப்படியோ பொதுஜனங்களுக்குத்தெரிந்து மீண்டும் கலகம் ஆரம்பித்தது. ஆனால் சோவியத் அதிகாரிகள் பட்டாளங்கள் இருப்பிடத்திலேயே இருக்கவேண்டுமென்றும், மூன்று நாளைக்குப் பொதுக் கூட்டங்கள் ஊர்வலங்கள் நடத்தக்கூடாதென்றும் கட்டுப்பாடு செய்தார்கள். ஜனங்கள் உடனே கீழ்படிந்து நடந்தார்கள். சோவியத் தலைவர்கள் இதிலிருந்து பொதுஜனங்களிடம் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை அறிந்துகொண்டார்கள். இதனால் ஒரு உள்நாட்டுக்கலகம் தடுக்கப்பட்டுவிட்டது. பிரதம மந்திரி "லூவோஸ்" சோவியத்காரர்கள் சர்க்காரை ஏற்று நடத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். யுத்த மந்திரி "குச்கோவ்"வும் ஒருவித சக்தியுமில்லாமல் நாங்கள் அதிகாரத்திலிருக்கிறோம் "சக்தியுள்ள சோவியத்து அதிகாரத்தை வகிக்காமல் வெளியே நிற்கிறது. ஆதலால் சக்தியில்லாத எங்களுக்கு இந்தப்பதவி வேண்டாம்" என்று ராஜிநாமாச் செய்தார். இதன் பிறகு ஒரு கலப்பு கவர்ன்மெண்டு அமைக்கப்பட்டது.

இந்தச் சமயத்தில் ஒரு அபாயமான சம்பவம் நடந்தது. அதென்னவென்றால் புதிய யுத்த மந்திரி "கிரன்ஸ்கி" நேச தேசத்தாருடைய ஆலோசனையைக் கேட்டுக்கொண்டு காலிஷ்யா வென்றவிடத்தில் ஜெர்மனியர்களை எதிர்த்து போராடும்படி ருஷ்யத் துருப்புகளுக்கு உத்திர விட்டார். இது மிகவும் பயித்தியக்காரத்தனமாக முடிந்தது. ஏனெனில் ருஷ்யத் துருப்புகள் அப்பொழுது யுத்தத்திற்குத் தயாராக இல்லாத சமயமாயிருந்ததோடு அநேக பட்டாளங்கள் சண்டை செய்ய மறுத்தே விட்டன. ஜூலை மாதம் முதல் தேதி அன்று சண்டை செய்த சில பட்டாளங்களும் சில நாட்களில் முற்றிலும் முறியடிக்கப்பட்டு சிதைக்கப்பட்டுப் போயின.

லெனினும், அவர் தோழர்களான போல்ஷ்விக்காரர்களும் பெரும் பிரசாரம் செய்து ஒரு கலகத்தை கிளப்பிவிட்டார்கள். அதில் 400 உயிர்கள் சேதமாயும் வெற்றி ஒன்றும் கிடைக்கவில்லை. போல்ஷ்விக் கூட்டத்தார் இந்தக் கலகத்தில் தங்களுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லையென்று கூறிவிட்டார்கள். ஆனால்,

அவர்களுடைய விரோதிகள் அவரை (லெனினை) ஜர்மனியோடு சேர்ந்த ஒரு ஒற்றன் என்று கதை கட்டி விட்டார்கள். ஆகையால் லெனினும் அவர் தோழர்களும் வெளிக்குத் தெரியாமல் மறைந்து கொள்ளவேண்டியதாயிற்று. டிராட்ஸ்கி முதலானவர்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள்.

கிரன்ஸ்கியும், மற்ற மந்திரிகளும் சேர்ந்து கொண்டு ருஷ்யாவை ஒரு குடியரசென்று விளம்பரப்படுத்தும்படி பிரதம மந்திரியைக் கட்டாயப்படுத்தினார்கள். முதல் மந்திரி அதற்குச் சம்மதியாமல் ராஜிநாமாச் செய்து விட்டார். உடனே கிரன்ஸ்கி அந்த ஸ்தானத்திற்கு வந்து குடியரசை ஸ்தாபித்தார். அந்த நேரத்தில் சேனாதிபதியான கார்னிலும் தன்னுடைய பட்டாளங்களை வைத்துக் கொண்டு, எல்லா குழப்பங்களையும் அடக்கிவிட வேண்டுமென்று முன் வந்தார். கிரன்ஸ்கியும் அவருடன் சேர்ந்து கொண்டு ஒத்துழைக்க ஆரம்பித்தார். ஆனால் கார்னிலும் அதிகார முழுவதையும் தன் கையில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று விரும்பியதை அறிந்தவுடன் அவர் விலக்கிக்கொண்டார்.

கார்னிலும், தலைநகரில் புரட்சிக்காரர்களை யடக்க ஒருப்பட்டாளத்தை அனுப்பியிருந்தார். போல்ஷ்விக்கத் தலைவர்கள் அந்த சமயத்தில் விடுதலையாகி அந்தப்பட்டாளத்தைக்கண்டு பேசி அதைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். கடைசியில் கார்ன்லோவினுடைய எண்ணம் பலிக்காது போயிற்று. அவரும் (கார்னிலும்) சிறைப்படுத்தப்பட்டார்.

பிறகு தேச முழுவதிலும் அதிகாரிகளுக்கு விரோதமாக துவேஷம் கொழுந்து விட்டு எரிந்தது. அதிகாரிகள் பற்பல இடங்களில் கொலை செய்யப்பட்டார்கள். பின்லாந்தில் கப்பலோட்டிகள் தங்களுடைய மேலதிகாரிகளைக் கடலில் தூக்கி எறிந்து கப்பலால் மோதி அடித்துக்கொன்றார்கள். போல்ஷ்விக்கர்கள் சோவியத் காங்கிரஸ் கமிட்டியை நம்பக்கூடாதென்றும் விளம்பரப்படுத்தினார்கள். எங்கும் அராஜகம் பரவியிருந்தது. நகரங்களிலே உணவுக்காகக் கலகங்கள் செய்யப்பட்டன. கிராமங்களிலே நிலங்களுக்காக கலகம் செய்யப்பட்டது. உழவர்கள் பணக்காரர்களுடைய நிலங்களைத் தங்களுக்கென்று கைப்பற்றிக்கொண்டார்கள்! கால்நடைகளை அவிழ்த்து வெளியே துரத்தி விட்டார்கள். பல வீடுகளை இடித்தும், தோட்டங்களை அழித்தும் குழப்பம் செய்தார்கள். இவ்வாறு போல்ஷ்விக்கர்களுடைய ஆதிக்கம் எங்கும் உன்னத நிலையில் இருந்தது.

பட்டாளத்தில் எங்கு பார்த்தாலும் குழப்பம் உண்டாயிற்று. ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை அதிகமாயிற்று. பட்டாளத்தலைவர்களுக்கும், சிப்பாய்களுக்கும் மனஸ்தாபம்பெருகிற்று. சிப்பாய்கள் போட்ட உத்திரவைத்தவிர மற்ற காரியங்களைச் செய்து வந்தார்கள். இந்த வேலையில் ஜெர்மனியர் படையெடுத்து வந்து பால்டிக் மாகாணங்களில் பிரவேசித்தார்கள். எசல் என்ற தீவையும் பிடித்துக் கொண்டார்கள். தலைநகரான "பிட்ரோகிராட்" சீக்கிரம் தாக்கப்படக்கூடிய நிலைமையில் இருந்தும் மந்திரிகள் தலைநகரை மாஸ்கோ பட்டணத்திற்கு மாற்றிவிட எண்ணங்கொண்டார்கள். பிட்ரோகிராட் நகரத்தில் தான் மிக அதிகமான வெடி மருந்து வைக்கப்பட்டிருந்தது. அதனால் போல்ஷ் விக்கர்கள் மந்திரிகளுடைய யோசனையைக் கண்டித்து அவர்களைத் தேசத்துரோகிகள் என்றும், அயோக்கியர்கள் என்றும் பழித்தார்கள். அவர்கள் பொதுஜனங்களிடத்திலும், தொழிலாளர்களிடத்திலும் சர்க்காருக்கு விரோதமாக துவேசத்தைப் புகட்டிவந்தார்கள். ஆபத்துவந்த காலத்தில், சர்க்கார் ஜனங்களைப்பாது காக்காமல் பயந்து ஓடுவதைக் கண்டித்தார்கள். பிரதம மந்திரி கிரன்ஸ்கி மீண்டும் பிட்ரோகிராட் நகரத்திலேயே தங்குவது என்று தீர்மானித்து விட்டார்.

பிட்ரோகிராட் நகரத்தில் டிராட்ஸ்கி என்ற புரட்சித் தலைவர் தங்கியிருந்தார்- இவர் லெனினுடைய தோழர். அபார சாமார்த்தியமுடையதளகர்த்தர். புரட்சியைத் தலைமைவகித்து நடத்துவதில் அவருக்குச் சமமாக சிலர்தானுண்டு. அவர் பிட்ரோகிராட் சோவியத்துக்குத் தலைமை வகித்து வெளியேறித் துருப்புகளைக் கண்டு, புரட்சியை அடக்கச்சொல்லக்கூடாதென்று தடுத்து விட்டார். அக்டோபர் மாதம் 26ம் தேதி சோவியத் தலைவர்கள் தலைநகரத்தில் ஒரு ராணுவக் கலகக் கமிட்டியை ஏற்படுத்தினார்கள். இது போல்ஸ்விக் புரட்சிக்கு அஸ்திவாரமாகும். டிராட்ஸ்கி நாலா பக்கத்திலும் சென்று, கொஞ்சங் கூட மறைவில்லாமல், வெளிப்படையாகப் பட்டாளத்தைச்சர்க்காருக்கு விரோதமாகச் சேர்க்கலானார்.

இரண்டாவது சோவித் காங்கிரஸ் நவம்பர் மாதம் 7 தேதி கூட்டப்பட்டது. ஒவ்வொரு சோவியத் சபையிலும் போல்ஷ்விக்கர்களே மெஜாரிட்டியாக இருந்தனர். தீவிர எண்ணமுள்ளவர்களாகிய இவர்களுக்கு எதிராகச் சிறுபான்மையோர் தான் இருந்தனர். சோவியத் காங்கிரஸ் கூடுவதற்கு முன்னால் அநேக மாகாண, ஜில்லா காங்கிரசுகள் கூடின. அவைகளெல்லாம் கூட்டு அரசாங்கத்தை ஒழித்து, சோவியத் சர்க்காரை அமைத்து அதன் மூலம் யுத்தத்தைச் சமாதானம் செய்து விவசாயிகளுக்கு நிலங்களைப் பிரித்துக் கொடுத்து, தொழிற்சாலைகளையெல்லாம் தொழிலாளர் ஆதிக்கத்திற்குள்ளாக்கி, பணக்காரர்கள் களஞ்சியங்களில் குவித்து வைத்த தானியங்களைப் பிடுங்கி, ஏழைகளுக்குக் கொடுத்துப் பஞ்ச நிவாரணம் செய்யவேண்டுமென்று தீர்மானித்தன. இந்த தீர்மானங்கள் அரசாங்க டெலிபோன் மூலமாகவே ருஷ்யா முழுவதிலுள்ள ஜனங்களுக்கும், பட்டாளங்களுக்கும் அறிவிக்கப்பட்டன.

நவம்பர் மாதம் 8ந்தேதிபிரதம மந்திரி கிரன்ஸ்கி மத்திய சோவியத் கமிட்டியிடம் இத்தீர்மானங்களை வாபீஸ் வாங்கவேண்டுமென்று கேட்டார். கமிட்டி அதைப்பொருள்படுத்தாமல், தங்களுடைய தலைமை ஸ்தலமான ஸ்மோன்லி மாளிகையைப் பாதுகாப்பதற்காகப் பட்டாளங்களையும், தொழிலாளர் கூட்டங்களையும் அனுப்பிவைத்தது. கிரன்ஸ்கி புரட்சியை நசுக்குவதற்குத் தமக்குச் சர்வாதிகாரம் கொடுக்கவேண்டுமென்று பார்லிமெண்டிடத்தில் கேட்கச் சொன்னார். பார்லிமெண்ட் அதை மறுத்துப் பொதுஜனப் பாதுகாப்பிற்காக ஒரு சங்கத்தையமைத்தது. இதற்கிடையில் போல்ஷ்விக்கர்கள் ஒரு நிமிஷத்தைக்கூட வீணுக்காமல், அமைதியாகவும், உறுதியாகவும், கட்டுப்பாடாகவும் தங்கள் வேலைகளை நடத்தி வந்தார்கள். அவர்கள் ஒரு குண்டுகூட போடாமல், தந்தி, டெலிபோன் முதலிய எல்லா அரசாங்க ஸ்தாபனங்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். "மாரிகால மாளிகை" என்ற இடம் மட்டும் பிடிபடவில்லை. அன்றிரவே அதுவரை ஒளிந்துக் கொண்டிருந்த லெனின் வெளியேறி, பிட்ரோகிராட் சோவியத் கூட்டத்திற்குச் சென்றார். அங்கே அவர் புதிய சந்தர்ப்பத்தை ஆரம்பித்ததற்காகச் சோவியத் கமிட்டியைப் பாராட்டிப் பேசினார். அதற்கு மறுநாள் அகில ருஷ்ய சோவியத் (காங்கிரஸ்) மகாநாடு கூடுவதாயிருந்தது. அந்தக் காங்கிரஸ்தான் புதிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு அதிகாரமுள்ளது. ஆனால் சோவியத் கமிட்டியோ புதிய அரங்கத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னால் முதல் தினமே தீர்மானித்து விட்டது. இது சட்டவிரோதமான காரியம் தான். ஆயினும் லெனின் பின்னால் நியாயமான சமாதானம் ஏற்படுவதற்கு இது அவசியம்தான் என்று கூறினார்.

நவம்பர் மாதம் 11ந்தேதி காலையில் "கிரான்கி" புதிய துருப்புகளை யழைத்து வருவதற்காக யுத்த அரசாங்கத்திற்குச் சென்றார். மற்ற அரசாங்க அங்கத்தினர்கள் மாரிகால மாளிகையில் இருந்தனர். புரட்சிக்காரர்கள் அம்மாளிகையைத்தாக்கி அவர்களைச் சரணமடையும்படி கட்டளையிட்டார்கள். மறுநாள் காங்கிரஸ் கூடியது. அப்போது சிறுபான்மைக் கமிட்டியார் போல்ஸ்விக்கர்களுடைய சட்ட விரோதமான காரியங்களைக் கண்டித்து உரைத்தார்கள். யுத்த அரங்கத்திற்குச் சென்ற கிரன்ஸ்கியின் வேண்டுகோளை சேனைத்தலைவர்களும், சிப்பாய்களும் நிராகரித்து விட்டார்கள். ஆனால் ஒரு கோஷாக் பட்டாளத்தை மட்டும் அழைத்துக்கொண்டுவர அவரால் முடிந்தது. அந்தப் பட்டாளம் தலைநகரிலிருந்து பத்தாவது மைலிலிருந்த "கச்சினு" என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தது. தங்களுக்குப் பலம் வந்து விட்டதென்று தெரிந்துகொண்டு, பொதுஜனப்பாதுகாப்புச் சங்கத்தார் ராணுவக் கலாசாலையதிகாரிகளை ஏவி, ராணுவக் கலகக்கமிட்டியாரையும், சோவித் ஸ்தாபனங்களையும் தாக்கி கைது செய்யும்படியாயும், டிராட்ஸ்கியினுடைய கலகப் பட்டாளத்தை நசுக்கும்படியாயும் அனுப்பினார்கள். அவர்கள் தாக்கியதில் போல்ஷ்விக்காரர்களே வெற்றி பெற்றார்கள். அப்பொழுது டிராட்ஸ்கி இரத்தம் சிந்துவது தர்மமாகிய கொள்கையில்லையென்றும் ஆனால் சிந்தவேண்டிய அவசியம் ஏற்பட்டால் பின்வாங்கப் போவதில்லையென்றும் விளம்பரப்படுத்தினார். இந்த ஒரு வாக்கியத்தின் மூலமாகவே வரப்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

தஞ்சை ஜில்லா 3-வது சுயமரியாதை மகாநாடு, நாகபட்டணம்.

எங்கும் “சமதர்ம” வாக்கியங்கள்.

தோழர்களின் வீர உரைகள்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

தஞ்சை ஜில்லா 3-வது சுயமரியாதை மகாநாடு 8, 9-1-33 சனி, ஞாயிற்றுகிழமைகளில் நாகை வெளிப்பாளையம் கோர்ட்டுக்கெதிரில் அமைத்திருந்த சமதர்மபந்தலில் நடைபெற்றது. மகாநாட்டுக்கு 3000 பேர்வரை விஜயம் செய்திருந்தார்கள். நிகழ்ச்சிக்குறிப்பில் குறிப்பிட்டபடி 8-ம் தேதி காலை9-30மணிக்கு வரும்புகைவண்டியில் மகாநாட்டின் அக்கிராசனர் தோழர் கே. முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்களும், இயக்கஸ்தாபகர் தோழர் ஈ. வெ. ராமசாமியும், மற்றும் மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் 300 பேர்வரை வந்திறங்கினார்கள். குறிப்பாக தோழர்கள் எம். ஜி. நடராஜன் (மன்னார்குடி) ஈ.வெ.ரா. நாகம்மாள், எஸ். ஆர். கண்ணம்மாள், நீலாவதி, ராஜம், ஏ. பொன்னம்பலம், பி. ஜீவானந்தம், கே. வி. அழகர்சாமி, ராமசுப்பையா, வாசுதேவன், எம். தருமலிங்கம், சி. நடராஜன், கே. ராமையா, முதலியோர் வந்திறங்கினார்கள்.

புகைவண்டியில் மகாநாட்டுக்கு விஜயம் செய்யும் பிரதிநிதிகளை திருவாரூர்ஸ்டேஷனிலும், சிக்கல் ஸ்டேஷனிலும் வரவேற்று அவ்வூர் பிரமுகர்கள் மலர்மாலை சூட்டினார்கள். மகத்தான ஆர்வத்துடன் மலர்மாலை சூட்டிய தோழர்களிடத்தில் மாலை சூட்டுவதிலிருக்கும் அர்த்தமற்ற தன்மையையும், வருங்காலம்விரும்பி நிற்பதற்கு மாலையோடுவது ஒரு பெரும் முட்டுக்கட்டையாகுமென்றும் தெரிவித்தார்கள். இயக்க ஸ்தாபகர் தோழர் ஈ. வெ. ராமசாமி மேல் நாடு சுற்றுப்பிரயாணத்திற்குப் பிறகு முதலாவதாக விஜயம் செய்யும் மகாநாடு இதுவேயாதலால் தஞ்சை ஜில்லாவாசிகளில் இரண்டாயிரம் பேருக்கு அதிகமாகவே ஸ்டேஷனில் சுயமரியாதைத்தோழர்கள் வருகையையெதிர்நோக்கியே நின்றார்கள். எவ்வித ஆடம்பரமுமில்லாமல் சுயமரியாதைத் தோழர்களை ஆர்வத்துடன் வரவேற்க நிற்கும் ஜில்லாவாசிகள் வண்டியில் இறங்கிய எல்லோரையும் அன்புடன் அழைத்தார்கள். இம்மகாநாட்டுக்கு ஆதிதிராவிட சமூகத்தினர் ஒருவர் வரவேற்புக் கழகத்தலைவராக இருப்பதை முன்னிட்டு மறைமுகமாக தூஷணை புரிந்து வந்தவர்கள் எல்லாம் 8-ந்தேதி ரயில் நிலையம் இருக்கும் நிலையும், சுயமரியாதைத் தோழர்கள் அன்புடன் அளவளாவி பழகும் பரந்த மனப்பான்மையும் கண்டு ஒருவாறு மனந்திரும்பினார்கள். கூட்டத்திலும், மகாநாட்டிலும் இரண்டு தினங்களும் கலந்துகொண்டார்கள். முஸ்லிம்களில் சிலர்வெளியூர் சூழ்ச்சி கடிதத்தை நம்பி தங்கள் மதத்தை அழிக்க சுயமரியாதைக்காரர்கள் வருகிறார்கள். அதைத்தடுக்க வேண்டும். இல்லையேல் கலகம் நடக்குமென்று சர்க்காருக்கு முறையிட்டுக்கொண்டவர்களும் மொத்தம் 200 பேர்வரை இரண்டுதினமும் மகாநாட்டின் போக்குகளைக் கவனித்தார்கள். சகத்தோழர்களான தாழ்த்தப்பட்டவர்களென்பார்களின் தப்பு, தப்பட்டை, கொம்பு, மேளம், போன்ற கோஷத்தினிடையே எல்லாப்பிரதிநிதிகளையும் வரவேற்றார்கள். வரவேற்று முக்கால் மைல் தூரத்திலுள்ள மகாநாட்டுப்பந்தலுக்கு அழைத்துச்சென்றார்கள். மகாநாட்டுக்குப் போகும் வழிநெடுக கீழ்கண்ட “சமதர்ம” வாக்கியங்களடங்கிய தட்டிகள் கட்டப்பட்டிருந்தது.

“எப்பொருளும் யாவர்க்கும் இப்புவியில் சொந்தமென இப்பொழுதே புரட்சி செய எழுகுவீர் இளைஞர்களே!

வாலிபர் உலகில் வீறுகொள் உணர்ச்சியை வையகத்திலெவ்வரசும் வழிமறிக்க இயலாது.

பரிபக்குவமடையாத புரட்சி பயனடையாது. புரட்சி என்பது கொல்லுவதும் கொல்லப்படுவதுமல்ல. (எஞ்சல்ஸ்.)

தனிமனிதனுக்குணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்.

பணக்காரனும், பார்ப்பானும் பாமர மக்களின் பரம விரோதிகள். (லெனின்.)

கூழுக்கு நித்தம் கூக்குரல் இடுகிறான் தொழிலாளி, பாலுக்கு சர்க்கரை பத்தாதென்கிறான் முதலாளி.

கடவுள் மனிதருக்கு அடிமையேயன்றி, மனிதர் கடவுளுக்கு அடிமையல்ல. (இங்கர்சால்.)

சோற்றுக்கில்லாதவனுக்கு கடவுளில்லை, அவனுக்கு கடவுள் சோறேயாகும். (காந்தி.)

பாட்டாளி மக்களை பட்டினிபோட்டு பணத்தை பெருக்காதே! ஏ! பணக்காரனே!!

புரட்சி ஓங்குக! பொதுவுடமை தோணுக!!

எல்லாமவன்செயலென்றெண்ணினால் உலகில் கொல்லுதல், திருடுதல் குற்றமதாமோ,

மதத்தை ஒழிப்பது உயர்வுதாழ்வை ஒழிப்பதாகும்.

நாடு நிலம் பண்படுத்தி பாடுபடும் தோழரெல்லாம் கேடுகெட்ட மாந்தர்களாய் கீழ்நிலையில் இருப்பதேன்

தொழிலாளி துயரம் தொலைந்திடல்வேண்டும், முதலாளி ஆதிக்கம் முறியடல்வேண்டும்.

என்ற வாக்கியங்கள் கொண்டபல தட்டிகள் ஏராளமாகக்கட்டிதொங்கப் பட்டிருந்தது. மகாநாடு கொட்டகையும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மகாநாடு ஆரம்பம்.

மகாநாடு சரியாக 10-30 மணிக்கு ஆரம்பமாயிற்று. மகாநாட்டிற்கு வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள் அது வருமாறு:—

தோழர்கள். ஈ. வி. ராமசாமி, ஈ. வி. ஆர். நாகம்மாள், எஸ். ஆர். கண்ணம்மாள், பொன்னம்பலனார், பி. ஜீவனந்தம, சி. நடராஜன், எம். ஜி. பி. நடராஜன், ராமசுப்பையா, பாபுசாமி, நடேசன், வி. ராமசாமி, திருச்சி வாசு, கே. வி. அழகர்சாமி, எம். தர்மலிங்கம், என். பி. காளியப்பன், நாகை எம். குஞ்சிதபாதம், டி. கிருஷ்ணமூர்த்தி, ஆர். வாசு, பி தம்பிதுரை. எம். ஆர். ஜி. மாணிக்கம், எம். நாகரத்தின முதலியார், எஸ். பி கே. சோமசுந்திரம் பிள்ளை, டி. எம். ராஜகோபால், நடராஜன், கந்தசாமி பிள்ளை ரெத்தினம்பிள்ளை, கார்குடி ஆர். சி. ரத்தினம், லக்காஸ் புதுவை, வித்வான். மயில்சாமி, ச. ம. சி. பரமசிவம், அழகப்பா, அண்ணாமலை கோட்டையூர், ராம பெரிச்சியப்பா கோணப்பட்டு, செல்லையா கல்லல் நாராயணசாமி கருப்பணசாமிகும்பகோணம், துரைசாமி, ரெத்தினசாமி, எ. சுப்பிரமணியம், ரா மமிர்தம் லக்ஷப்பா, முத்துக்குமாரசாமி, ராமலிங்கம், சீர் காழிநாராயணசாமிப் பெரியார், எல் சம்பந்தம், சாமி, சிதம்பரனார், முதலியவர்களாகும்.

தோழர்கள் அழகர்சாமி, சரவணை, அம்மைநாதன், எம். குஞ்சிதபாதம் வி. சாமிநாதன் முதலியவர்கள் சமதர்மக் கீதங்களும், பொதுவுடமைக் கீதங்களும் பாடினார்கள். மகாநாட்டை திருச்சி தோழர் எஸ். நீலாவதி அம்மையார் ஆரம்பித்து தனது நீண்ட பிரசங்கத்தைப்படித்தார். (இப்பிரசங்கம் சென்ற வாரத்தில் வெளியாகிவிட்டது.) வரவேற்புக் கழகத்தலைவர் தனது பிரசங்கத்தை பின்னர் படித்தார். (அப்பிரசங்கம் சென்றவார குடி அரசில் வந்திருக்கிறது. அதில் சில திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பதால் அதன் விபரம் அடுத்தவாரத்தில் வெளிவரும்.)

தலைவர் தேர்தல்.

மகாநாட்டின் தலைவரை நடமுறைக்கு ஒப்பாக தோழர் கே. முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ., பி. எல்., எம். எல். சி. (புதுக்கோட்டை) அவர்களை தலைமை வகிக்கவேண்டுமாய் தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, அ. பொன்னம்பலம், எஸ். நீலாவதி, ராமசுப்பையா, ப. ஜீவானந்தம், டி. பி. ஆறுமுகம், இவர்களால் ஆதரித்துப் பேசியபின் மத்தியான சாப்பாட்டுக்காக மகாநாடு கலைந்தது.

மாலை மகாநாடு.

மீண்டும் மத்தியானம் 3-30 மணிக்கு மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் தனது தலைமை உரையைப்படித்தார் (முற்பகுதி முதல் வாரத்தில் வந்ததுபோக பிற்பகுதியின் சாரம் பின்வருமாறு.

தலைவர் சொற்பொழிவு.

8 வயதிற்குட்பட்டகுழந்தைகள்10 லக்ஷம்பேர் கைம்பெண்களாயிருக்கின்றனர். தம் கணவர்களின் முகமறியாத இளங்கைம்பெண்களும், முதிர்ந்த கைம்பெண்களும் 1கோடிப் பேர் இருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்துறையிலும், அரசியல் துறையிலும், அவர்களுக்குள்ள செல்வாக்கும், பங்கும் கிடைக்கும்வரை அவர்கள் வாளாவிருக்கமாட்டார்கள். அவர்கள் துயர்செறிந்த பயனற்ற வாழ்க்கையைக்குறித்து நம் நாட்டின் இளைஞர் வருந்துகின்றனர்.

முடிவுகட்டுவதில் முதியவர்களுக்கென்ன வேலை?

“முதியவர்களைவிட இளைஞர்களுக்கு மிக முக்கியமானதான தேசியவிஷயங்களைக்குறித்த பிரச்னைகள் சம்பந்தமாக முதியவர்களே முடிவு கட்டுமாறு இளைஞர்கள் அனுமதித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்”, என செண்ட் ஆண்ட்ரூஸ் சர்வகலாசாலை மாணவர்களுக்கு சர்ஜேம்ஸ் பர்ரி கூறிய மொழியின் தத்துவத்தை இளைஞர்கள் உணர்ந்தனர். தற்போதைய செயல்களை நடத்துவிக்க தமக்குள்ள ஆற்றலையும், உரிமையும் நிலைநாட்ட தைரியம் கொண்டிருக்கின்றனர். தக்கதோர் புரட்சி ஏற்பட்டாலொழிய, சமூகம் ஸ்தம்பிப்பதிலும் அதைப்போன்று அரசியல் பழைமைத்திலும் விளையக்கூடிய பேராபத்தைத்தடுக்க இயலாது போய்விடவும் கூடும் என்று வாதித்தனர். பழைய முறைத்தவறு எனத்துணிந்து கூறி அறைகூவுகிறார்கள். ஆந்திர சர்வகலாசாலை மாணவர்களுக்கு சர். ராதாகிருஷ்ணன் ஆற்றிய சொற்பெருக்கில் இளைஞர்களின் உண

ர்ச்சி ததும்புகிறது. அது வருமாறு:- "நமது பிற்கால வாழ்வு உன்னதமாயிருக்கவேண்டுமானல், பண்டையப்பழக்க வழக்கங்களென்னும் பிசாசுகளை அகற்றவேண்டும். இவை நம் மனத்தைக் கவர்ந்து கொண்டிருக்கின்றன. எனவே அவைகளைக் கொல்லவேண்டும். சமூகத்துறையிலும், விஞ்ஞானத்துறையிலும், அறிவுத்துறையிலும் ஊடுறவிப் புரட்டிப்பார்க்க வேண்டியதுதான், தற்போதைய இன்றியமையாத வேலையாகும்.

சோவியத்தை எதிர்த்த பலவீனமுள்ள முதலாளிகள்

அனைத்திலும், தொழிலாளிக்குத்தான் வெகுவாக விரைவில் விமோசனம் தேவை. "முதலாளிகளின்வாழ்க்கையை வீழ்த்துவதில் படிப்படியாகத் தம் உரிமைகளைத் தொழிலாளிகள் நிலைநாட்டாத நாடு உலகத்திலேயே கிடையாது. மகாயுத்தத்திற்குப்பிறகு மன்னர்கள் ஏதேச்சதிகாரத்திற்கும், சமதர்மக்கொள்கைக்கும் கடுமையான போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மகாயுத்தம் ருஷியாவில் ஒரு பெரும் புரட்சியையுண்டு பண்ணிவிட்டது. இத்தகைய புரட்சி உலகிலேயே இதுவரை ஏற்பட்டதுகிடையாது" சோவியத்ருஷ்யக்கொள்கைகளை எதிர்த்து வந்த முதலாளிகளின் சாம்ராஜ்யங்களெல்லாம் தமது பலவீனத்தையும், தாம் ஆற்றிவந்த அநீதிகளையும் இப்போது உணர்ந்தன. தோழர் எச். ஜி. வெல்ஸ் என்பவர் கூறியுள்ளதாவது:- "நாம் வாழ்ந்துவரும் நாகரீகம் வெகு விரைவாக சிதைந்துகொண்டிருக்கிறது. முதலாளித்தன்மை அழிந்து கொண்டுவருகிறது. இந்த உணர்ச்சி இந்தியாவிற்குள் புகுந்தது மட்டுமன்றி, மக்களுக்கு மிக அவசியமென மனதில் தைத்து விடும்படிச்செய்தது. ஆகவே ஆதிக்கம் முதலாளிகள் வசமிருந்து தொழிலாளிகளுக்கு மாறுவது விகசிதம்.

போல்ஷ்விக் கொள்கைகளை நாம் ஏற்றுக்கொள்ளவுல்லை. ஆனல் இப்போது சோவியத்ருஷ்யாவில் செய்யப்படும் ஆராய்ச்சியானது உலகவாழ்க்கையை வெகுவாக ஏற்றுக்கொள்ளுமாறு செய்யுமென்பது மட்டும் உண்மை. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை நாம் கவனிக்கும்போது, முதலாளித்வத்திற்கும், ஏதேச்சாதிகாரத்வத்திற்கும் விரோதமாக ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்படுவதைக் களக்க மறக்காணலாம். ஏதேச்சாதிக்காரத்வத்திற்கும், சமூதாயத்திற்கும், அல்லது முதலாளித்வத்திற்கும், சமூதாயத்திற்கும் போர் எப்போழுதேனும் நிகழத்தான் செய்யும். இப்போதுள்ள துர்க்குறிகளை போக்கினல், இந்தப்போராட்டமானது சுலபமாக முடியுமென்று தோன்றவில்லை. போல்ஷ்விக் புயற்காற்றின் வேகத்தைத்தடுக்க வேண்டுமானல், உலகிலுள்ள எல்லாவகை மக்களுக்கும், குறிப்பாகத் தேவை மிகுந்துள்ள இந்தியமக்களுக்கும் அவரவர் உரிமைகளை உடனே தாமதமின்றி வழங்கவேண்டும். இல்லையேல் கொள்ளைகொடுத்து அதிருப்தியுற்றிருக்கும் நாடுகள் போல்ஷ்விக் உணர்ச்சிக்கு உறைவிடமாக விருக்கும். இந்தியநாடு அதனிமங்கள் வயப்படவேண்டும். அவர்களுடைய நிலைமையானது சரியாக எதிர்பார்க்கப்படும்வரை பாமரமக்களுடைய நியாமான கோரிக்கை திருப்தியளிக்காத வரையில் கொடுமையாளனுக்கும், கொடுமைப்படுவோனுக்கும்; ஆதிக்கக்காரருக்கும் சார்ந்திருப்போருக்கும், ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும்; தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும்; மிராசுதாரர்கும் பண்ணையாளுக்குமுள்ள போரானது மோசமான நிலையை அடைய எவ்வளவு காலம் பிடிக்குமென்ற கேள்விதான்.

நலிவுற்றவர்களை வர்ணிப்பதும், முதலாளி வர்க்கத்தை பாதுகாப்பதுமே காங்கிரஸ்!

இந்த நிலையைச்சமாளிக்கக் காங்கிரஸுக்குத் தைரியமும், ஆற்றலுமில்லை. பிரிட்டிஷாரை இந்தியாவினின்று ஓட்டிவிடுவதுடன் மட்டும் அதன் நோக்கமிருந்துவருகிறது. இந்திய முதலாளிகளான மில்காரர்களையும், நிலங்களுக்கு அதிபதிகளான ஜமீன்தார்களையும், பலவகை வகுப்பு பேதங்களையும், தீண்டாமையையும் இலக்கியங்களாகக் கொண்ட தீமை விளைவிக்கவல்ல மதங்களையும் பாதுகாக்க அது வெகுவாகப்பாடுபடுகிறது. ஆனல், குருமாரும், முதலாளிகளும், ஏழைகளையும், தொழிலாளிகளையும் கொள்ளை கொள்வதைத்தடுக்க எவ்வித முயற்சியோ, திட்டமோ வகுக்கவில்லை. பிரிட்டிஷ் முதலாளிகளுக்குப் பதிலாக இந்திய முதலாளிகளை ஏற்படுத்துவதனல் நாட்டிற்கு எத்தகைய நலமேனும் உண்டா? தாழ்த்தப்பட்டவர்களைக்குறித்தும், தொழிலாளர்களைக்குறித்தும், வாயளவில் இரக்கங்கூறுவதும், கண்ணீர் வடிப்பதும், ஏழைகளின் நலிவுற்ற நிலையைப்பற்றி பரிதாபகரமாக வர்ணித்துக் கூறுவதும் தவிர, வேறெவ்விதத்திலும் இப்பிரச்னைகளுக்கு முடிவு காண, காங்கிரஸின அடிப்படையான தத்துவங்கள் சக்தியற்றிருக்கின்றன. காங்கிரஸ் மேற்கொண்டுள்ள கொள்கைப்படி தனி உரிமைக் கொள்கை காப்பாறறப்படவேண்டுமாம். தொழிலாளிகளுடைய உழைப்பில்பணம் திரட்டும் முதலாளிகள் பாதுகாக்கப்படவேண்டுமாம்! தாம் ஒரு வேலையும் செய்யாது தமக்கென ஏழைத்தொழிலாளர்கள் இலவசமாக வேலைசெய்யுமாறு செய்யும் ஜமீந்தார்களும் காப்பாற்றப்பட வேண்டுமாம்! தொழிலாளர்களுக்கும், ஏழைகளுக்கும் காங்கிரஸ் தொண்டாற்ற வேண்டுமானல், முதலாவதாக அதற்கு இப்போது ஆதரவளித்து வரும் முதலாளி வர்க்கத்தின் கொடுமையை அகற்ற ஆயத்தப்படவேண்டும். இங்ஙனம் செய்யாது போனல், காங்கிரஸினுடைய தனது வளர்ச்சி தொழிலாளிகளாலும் விவசாயிகளாலும் தடைப்படுத்தப்படுமென்பது உறுதி.

நாம் எங்கு சென்று கொண்டிருக்கிறோம்!

நாம் அத்தகைய சமூகத்துறையிலும், பொருளாதாரத்துறையிலும், அரசியல் துறையிலும் மிக நெருக்கடியான அந்த நிலைக்கே நாம் இப்போது சென்று கொண்டிருக்கிறோம். இரண்டு விஷயங்களைக்குறித்து சுயமரியாதைக்காரர்களுக்கு நன்கு தெரியும். அதாவது:-(1) மத சம்பந்தமாக நடுநிலைமை வகிக்கும் கொள்கையைக்கொண்டு பிரிட்டிஷ் சர்க்கார், நாடுமுழுவதையும் குருக்கள் கொள்ளைகொள்ள அனுமதித்து மக்கள் மத அடிமைகளாகச் சதாகாலமும் வாழும்படி செய்து விட்டனர். (2) நாட்டின் பொருளாதார நிலைகளெல்லாவற்றையும் பிரிட்டிஷ் சர்க்கார் தெட்டிக்காரத்தனமாகக் கொள்ளை கொண்டது மட்டுமன்றி இந்தக்கொள்ளையை நிரந்தரப்படுத்தவேண்டி வேறு பல முயற்சிகளையும் செய்திருக்கிருர்கள். இப்போது நடைபெறும் போராட்டமெல்லாம் பசிப்பிணியால் வாடிவருந்தும் கோடிக்கணக்கான ஏழைமக்களின் நிலையைக்குறித்து சர்க்கார் ஆராய்ச்சி செய்யாமலிருப்பதனல் தான் திருவோட்டைக்கையிலேந்தி அவர்கள் தலைவாசலில் 'பிச்சாந்தேகி' எனக் கூவி அவர்களிடம் பிச்சைக்குக் காத்திருந்தோம். கோரப்படும் உரிமைகளில் சிறு மாற்றங்களோ, அல்லது பொது மாறுதல்களோ ஏற்பாடுத்த அவர்கள் இசைந்திருக்கலாம்.

மதத்தையும், முதலாளியையும் பாதுகாப்பதே வெள்ளைக்காகிதம்

ஆனல் சாதாரண நீதிபாலிக்க அவர்கள் தயாராயில்லை. அன்னியர் ஆதிக்கத்தையும், முதலாளிகள் கொள்ளும் கொள்ளையையும், மதக் கொடுமையையும், நிரந்தரப்படுத்துவதைத் தவிர வேறெதுவும் வெள்ளைக் காகிதத்தில் காணக்கிடைக்கவில்லை. ஆட்சிபுரியும் மன்னர்களுக்கும், ஆளப்படும் குடிகளுக்கும் உள்ள பேதம் மேலும் அதிகப்படுகிறது. வெள்ளைக்காகிதத்தில் வகுக்கப்பட்டுள்ள திட்ட மூலமாகத்தான் பொது ஜனங்களுக்கு விமோசன முண்டு என்ற எண்ணம் மக்களிடையே உண்டாகும் வண்ணம், அதைப்பரிஷீக்குமாறு பொதுஜனங்கள் முன்வர அறை கூவி அழைக்கும் அரசியலாளரையும், சீர்திருத்தக்காரர்களையும் காணும்போது நமக்கு நகைப்பும் துக்கமும் ஏககாலத்தில் உண்டாகின்றன. மக்கள் சமூகம் பின்பற்ற வேண்டி, தொன்று தொட்டு, சட்டங்களையும், விதிகளையும் மத குருக்களும், சமூக சீர்திருத்தக்காரர்களும், அரசியல் வாதிகளுந்தான் ஆக்கித் தொகுத்து வந்திருக்கின்றனர் இக்காலத்திலோ, அவசரச்சட்டங்களும், பாது காப்புக்களும் முளைக்கின்றன. உள்ள விதிகளும், பாதுகாப்புக்களும் நம் நாட்டிற்குப் போதாவா? பெண்களும், இளைஞர்களும், எளியவர்களும், தொழிலாளர்களும் விடுதலையும் விமோசனமும் பெற உறுதிகொண்டிருக்கின்றனர். அவர்கள் தம் வாழ்க்கைக்காரணமாகச் சலித்துப்போயிருக்கின்றனர். எனவே எதிர்ப்பையோ, தாமதத்தையோ, சமாதானத்தையோ அவர்கள் பொறுக்கமாட்டார்கள். பலவகைச் சடங்குகள் மிக்க மதச்சுமைகளினின்றும், முதலாளிகளின் தன் நலங்காரணமாகத்தோன்றும் கடும்பிடிகளினின்றும், வியாபார ஆதிக்கமிக்க அன்னியரின் தளைகளினின்றும் இந்திய சமூகத்தை மீட்க வல்லது எது? சிறுதும் தளர்வுறாத பழைய உணர்ச்சியோடு இப்புதிய உணர்ச்சிசெய்யும் போராட்டத்தினல் இந்தியாவில் எத்தகைய புதிய புரட்சி ஏற்படுமென்றே, இந்தப்புரட்சி காரணமாக இந்தியாவின் பிற்கால நிலை எவ்வனமிருக்குமென்றே பழைய தேச சரித்திரங்களைக்கொண்டு கூறுதற்கில்லை. இந்தியா வன்மைமிக்க இளமைவாய்ந்தது. எனவே பிறர் அதைப்பலவீனமான நாடெனக்கருதிப்பராமரிப்பதை அது சகிக்காது. ஆனல் கொடுமைகளையும், அடக்கு முறைகளையும் கவனிக்கிறபோது மனம் பின்னடைகிறது.

கோரமான குழப்பத்தை சுயமரியாதை இயக்கம் விரும்பவில்லை,

இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்திலே இனி ஏற்படப்போகும் பெருங்கேடுகள் நிகழாவண்ணம் தடுத்துக்கொள்ள தக்க தோர்வழி காண்பதற்கு தங்கள் போக்காகவே சுயமரியாதைக்காரர்கள் விரும்புகிருர்கள். அதாவது, அவர்கள் ஆற்றும் சமூகத் தொண்டுமட்டுமன்றி, தனிப்பட்ட அரசியல் வாழ்க்கைகான தோர் திட்டத்தையும் வகுத்து நடத்தும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளலாம். சுயமரியாதை இயக்கத்தின் வாழ்கையிலேயே இது மாறுதலுக்குரிய காலம். சமூதாயப் புனருத்தாரனத்துக்குத் தக்க அனுகுணமாக அரசியல் புனருத்தாரனமும் ஏற்பட்டாலொழிய பயனின்று. எனவே இந்த மாறுதல் ஏற்பட்டுதான் தீரும். "ரிவோல்ட்" பத்திரிகையின் முதன் மலரின் முதலிதழில் இந்த இயக்கக்கர்த்தாவான தோழர். ஈ. வெ. இராமசாமியும் தோழர், எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்களும் குறிப்பிட்டுள்ளதும், அடிப்படையானதுமான கொள்கைகளை கண்டிப்பாக சுயமரியாதைக்காரர்கள் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். சௌகரியத்தை முன்னிட்டு அக்குறிப்பை இங்கே எடுத்துரைப்பாம்.

"(சுயமரியாதைக்காரர்களாகிய) நாம் அமைதியையே நாடுகிறோமெனக்கூறவிரும்புகிறோம். பலாத்காரமின்மையே

தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க.

கடவுள்.

(கல்கி எழுதியது)

கடவுளைப் பற்றிய பிரச்சனைகளில் மிகவும் முக்கியமானது, கடவுள் உண்டா, இல்லையா என்பதுதான். மனிதன் தோன்றின காலத்திலிருந்து இந்தப் பிரச்னையும் இருந்து வருகிறது. ஒரு சாரார் "கடவுள் உண்டு" என்கிறார்கள். இன்னொரு சாரார் "கடவுள் இல்லை" என்கிறார்கள். ஆனால் இரு சாராரும் கடவுள் இல்லாதது போலவே காரியம் செய்கிறார்கள்!

கடவுள் இருந்தாலும் சரி, இல்லாமற்போனாலும் சரி, அவர் மனிதனுடைய காரியங்களில் தலையிடுவதாகத் தெரியவில்லை. அப்படி தலையிட்டாலும் தம்மிஷ்டப்படி தலையிடுகிறாரே யன்றி, மனிதனுடைய வேண்டுகோளை முன்னிட்டுத் தலையிடுவதாகக் காணப்படவில்லை. ஒரு சமயம் ஒரு பாட்டி பின் வருமாறு பிரார்த்தனை புரிந்துகொண்டிருந்ததை நான் கேட்டேன்:— "சுவாமி! பகவானே! ஊரெல்லாம் காலராவும், வைசூரியுமா யிருக்கிறதே! என் பெரிய நாட்டுப்பெண்ணுக்கு ஒரு காலரா வந்து கொண்டு போகாதா? அவள் இன்றைக்குச் செத்தால் இன்னும் மூன்று மாதத்துக்குள் இரண்டாயிரம் ரூபாயும் பெண்ணுமாய் என் பிள்ளைக்குக் கலியாணம் பண்ணி வைப்பேனே?" பகவான் ஒருவர் இருந்தால், இந்தப் பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பர் என்று நினைக்கிறீர்களா?

கடவுள் மேற்சொன்னது போன்ற தீய பிரார்த்தனைகளை நிறைவேற்ற மாட்டார். நல்லபிரார்த்தனைகளைத்தான் நிறைவேற்றுவார் என்று சொல்லலாம். அப்படியும் காணப்படவில்லை. ஆங்கிலேயர் பாடும் தேசிய கீதத்தில் "கடவுளே! எங்கள் அரசரைக்காப்பாற்றும்; அவருடைய சத்துருக்களை நிர் மூலம் செய்யும்; எங்களுக்கு வெற்றியைக் கொடும்!" என்று பிரார்த்தனை செய்து வருகிறார்கள். சென்ற 300வருஷ காலமாக ஆங்கில ஜாதியாரின் மேற்படி பிரார்த்தனை ஏறக்குறைய நிறைவேறியே வருகிறது! ஆனால் ஏழை இந்தியர்களாகிய நாம் "சுவாமி! எங்கள் தேசத்தில் நாங்கள் இராஜ்யம் நடத்த அருள் புரியுங்கள்" என்றுதான் கேட்கிறோம் இந்தப் பிரார்த்தனைக்கு பகவான் செவிடாயிருக்கிறார்.

சமீபத்தில் திருவண்ணாமலையில் நடந்த கோர சம்பவத்தைப் பாருங்கள். ஆறுமனித உயிர்களை கொலை செய்து விட்டுத் தானும் உயிரைப் போக்கிக்கொண்டான் ஒருமனிதன். இவ்வளவையும் "கடவுளுக்குப்பிரீதி" யாகச்செய்தான். பகவான் தலையிட்டுத்தடுக்க வேண்டிய சம்பவம் ஏதேனும் ஒன்று உண்டானல் அது இதுதான் என்று சொல்லலாம். ஆயினும் அண்ணாமலை யப்பன் கண் மூடி மௌனியாய் உட்கார்ந்திருக்கிறார்!

ஃ ஃ

கடவுளுக்கு மனிதன் நன்றி செலுத்த வேண்டுமா? அப்படியானால் எதற்காக?—"மனிதனைக் கடவுள் படைத்ததற்காக" என்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த விஷயத்தில் கடவுள் தான் மனிதனுக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். மனிதனைப் படைத்தது கடவுள் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை; கடவுளை மனிதன் சிருஷ்டித்தது என்னவோ மலைகளையும், பூகம்பங்களையும், பிளேக்காலராக்களையும், தேள் பாம்புகளையும், ஏன் படைத்தார்.

"மனிதன் சாப்பிடுவதற்கென்று பகவான் நெல்லைப் படைத்திருக்கிறார்" என்பது சாக பக்ஷணிகளின் எண்ணம், அதை நெல்லாக ஏன் படைக்கவேண்டும்? அரிசியாகவே விளையும்படி செய்திருந்தால் மனிதனுக்கு எவ்வளவு உழைப்பு மீதி?—



நாகையில் நடந்த தஞ்சை ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாட்டின் தலைவர் தோழர்

K. முத்துசாமிவல்லத்தரசு அவர்கள் B.A.B.L., M.L.C.

நிச்சயம். ஆனல் மனிதன் தம்மைப் படைத்ததற்காகக் கடவுள் அவனிடம் நன்றி செலுத்துவார் என்று தோன்றவில்லை. தம் பெயரால் உலகில் நடக்கும் கோர கிருத்யங்களைப் பார்க்கும்போது அவருக்குத் தம்மைப்படைத்த மனிதன்மேல் கோபம் உண்டாகுமென்றே தோன்றுகிறது.

"மலைகளையும், நதிகளையும், மரங்களையும், தானியங்களையும் பகவான் மனிதனுக்காகப் படைத்திருக்கிறாரே?" என்று சிலர் சொல்கிறார்கள். சூரியனும், சந்திரனுங்கூட மனிதன் உபயோகத்துக்காக பகவான் படைத்தவைதான் என்பது அவர்கள் கருத்து. இருக்கட்டும்; மேற்கண்டவைகளை யெல்லாம் மனிதனுக்காகப் படைத்த பகவான் எரிமலைகளையும் ... உண்மை யென்னவென்றால், உலகம் மனிதனுக்காக சிருஷ்டிக்கப்பட்டது என்பதைப்போன்ற அகம்பாவமான கொள்கை வேறொன்றுமில்லை. படைப்பில் மனிதன் அற்பத்திலும் அற்பமானவன். சிருஷ்டி இரகசியத்தை ஒருவரும் அறிந்ததில்லை. எவரேனும் அறிந்தபோதிலும் வெளியிட்டுச் சொன்னது கிடையாது. கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்.

ஃ ஃ

சுவாமிக்கு வேண்டுதல்செய்து கொள்வதில் எவ்வளவோ விநோதங்கள் இருக்கின்றன. "திருப்பதி வெங்கடாசலபதி! என் பிள்ளைக்கு நூறுரூபாய்சம்பளத்தில்உத்தியோகம் ஆகட்டும்,உன் உண்டியலில் ஒருரூபாய்போடுகிறேன்" என்று தாயார் வேண்டிக்கொள்கிறாள். இங்கே கடவுள் உத்தியோகத் தரகர் ஆகிறார். ஒருபர்சென்டு அவருக்குக் கமிஷன். உத்தியோகஸ்தர் ஒருவர் தமக்கு 'மேல் வரும்படிக்கெல்லாம் ரூபாய்க்குக் காலணாவீதம் உண்டியல்சேர்ப்பிக்கிறார். இதன் மூலம் லஞ்சம் வாங்கிறபாவத்தை முழுதும் பகவான் மேலேயே போட்டு விடுவதாக அவர் எண்ணம்!

சௌந்தரத்தாச்சியின் உயில்விஷயம் எனக்கு ஞாபகம்வருகிறது. அங்காடிக் கடைவைத்து நல்லபணம் சேர்த்திருந்தாள் சௌந்தரதாச்சி. உயிலில் தங்கை, தமக்கை, சுவீகாரப்பிள்ளை, மாமன் மகள் முதலிய எல்லோருக்கும் உசிதப்படி சொத்தும், ரொக்கமும் எழுதி வைத்தாள். கடைசியில்,"ஷண்முகசுந்தரம் செட்டியின் புரோநோட்டு ஆயிரம் ரூபாய் வட்டியும் முதலும் வசூலானல் ஸ்ரீ அர்த்தநாரீசுவர ஸ்வாமிக்குச் சேர்ப்பிக்க வேண்டியது" என்று எழுதச் செய்தாள். ஷண்முகம் சுந்தரம் செட்டி இன்ஸால் வெண்ட்டாகி ஐந்து வருஷம் ஆயிற்று! புரோநோட்டு காலாவதியாகிமூன்று வருஷம் ஆயிற்று! ஆச்சி செய்தது சரியென்று உங்களுக்குத் தோன்றவில்லையா? அர்த்தநாரீசுவர சுவாமிக்கு உண்மையில் பணம் வேண்டுமென்றிருந்தால், காலாவதிப் பத்திரமானாலும் அவர் ஏன் வசூலித்துக் கொள்ளக்கூடாது? அவ்வளவு சக்தி அவருக்கு இல்லாவிட்டால் அவருக்கு எதற்காகப் பணம் எழுதிவைப்பது? "நூறு ரூபாயும் ஒரு தம்பிடியும் அகப்பட்டால், ஒரு தம்பிடிக்கு சூடம் வாங்கி ஏற்றுகிறேன்" என்று வேண்டிக் கொண்டவன் மகா புத்திசாலி யென்றே எனக்கு தோன்றுகிறது. எனக்கு "100ரூபாய்கொடுக்கும்பிள்ளையார் தமக்குஒருதம்பிடியும் கொடுத்துக் கொள்ளட்டுமே!" என்று அவன் நினைத்ததில் தவறு என்ன?

ஃ ஃ

இதனாலெல்லாம் "கடவுள் வேண்டாம்" என்று நான் சொல்வதாகத்தயவு செய்து நினையாதீர்கள். அதற்கு மாறாக' கடவுள் மிகவும் உபயோகமானவர் என்று நினைப்பவர்களில் நான் ஒருவன்.

முதலாவதாக, கடவுள் நம்பிக்கை யுள்ளவன் ஆயுள் இன்ஷியூரென்ஸ் செய்யவேண்டியதில்லை. இது எவ்வளவு பெரிய சௌகரியம் பாருங்கள்! எத்தனையோ இன்ஷியூரென்ஸ் ஏஜண்டுகளுக்கு நான் டிமிக்கி கொடுத்து வந்திருப்பதெல்லாம், கடவுளிடம் எனக்குள்ள நம்பிக்கையினால்தான். ஏஜண்டு தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பிக்கும்போதே நான் அவருடைய வாயை அடைத்து விடுவேன். "நான் நாஸ்திகனல்ல, சுவாமி! பகவான் ஒருவர் இருக்கும்போது நான் என் பெண்டாட்டி பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படவேண்டும்? மரம்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

அதிர்ஷ்டம்—தூக்கம்.

எடிசன் அபிப்பிராயம்.

(தோழர் மதிவண்ணன்)

1933ம் ஆண்டு பிப்ரவரிமாதம் மாடர்ன்ரிவ்யூவில் "பிரபுத்தபாரதா" என்னும் பத்திரிகையிலிருந்து எடுத்து வரையப்பட்டது:—

மின்சாரசக்திக்குத் தந்தை (Fatherof Electricity) என்று சொல்லப்படுபவரான அமரிக்கதேசத்து எடிசன் (Edision) அதிர்ஷ்டத்தைப்பற்றியும், தூக்கத்தைப்பற்றியும் கூறுவதாவது:—

எடிசனுடைய தோழனும், துணை ஆராய்ச்சியாளருமான தோழர் எம். ஏ. ரசஜெல் என்பவர் எடிசன், தன்னுடைய வெற்றிகளின் இரகசியத்தைப்பற்றிக்கொண்டுள்ள அபிப்பிராயத்தைத்தெரிவிக்கிறார்:—

ஒரு நாள் கிழட்டுத்தோழர் (எடிசன்) அரட்டைக்கு என்றே சிறிது உட்காரவே, நானும் அவரும் எங்கள் மனம் விட்டு அன்யோன்யமாய்ப்பேசிக்கொண்டிருந்தோம்.

அதிர்ஷ்டம்:—

அதிர்ஷ்டம் அல்லது யோகம் என்பதில் உனக்கு நம்பிக்கை உண்டா? என்று என்னை அவர்கேட்டார். அதற்கு நான் உண்டு, இல்லை, என்றுசொல்ல வேண்டியவனாயிருக்கிறேன். எனது ஆராய்ச்சியும், பகுத்தறிவும் அதிர்ஷ்டம் என்னும் மூடநம்பிக்கையை தீவிரமாக மறுக்கின்றன. ஆனால் எனது மூடத்தனமான பொறுக்கத்தன்மை அதில் நம்பிக்கையுடன் அவ்வெண்ணத்தை இறுகப்பிடித்துக்கொண்டிருக்கிறது. என்றேன். என்னைப்பொறுத்தவரையில் நான் அதிர்ஷ்டம், யோகம் என்பதை நம்புவதே கிடையாது. அப்படி அதிர்ஷ்டம் என்று ஏதாவது ஒன்று இருக்குமானால் உலகத்திலேயே மிகவும்துரதிர்ஷ்டசாலியான ஆசாமி நானே தான் எனது வாழ்நாளிலேயே நான் ஒரு தரங்கூட அதிர்ஷ்டத்தின் முகதரிசனமாவது கண்டறியேன். நான் ஏதாவது ஒன்றை விரும்பி, தேடிச்சென்றால், அதுஒன்றைத்தவிர, உலகத்திலுள்ள, எனக்கு வேண்டாத மற்ற எல்லா நாசமாய்போன பொருள்களும் ஒன்றன்பின் ஒன்றாக எதிரிடுகின்றன. நான் விரும்பாதவைகளாகவே 99வஸ்துக்கள் குறுக்கே நான், நான் என்று வந்து விழுகின்றன. 100ம்நம்பராக அதுவும் கடைசி கடைசியாக கிடைத்தபோதுதான் நான் அதுவரைதேடித்தேடி அலைந்த வஸ்துவாக முடிகிறது. இதைப்பெரிய துரதிர்ஷ்டம் என்று சொல்வாய் அல்லவா? ஆனால்நான் உனக்கு அழுத்தந்திருத்தமாய்ச்சொல்லுவது என்னவென்றால் நான் நல்ல அதிர்ஷ்டத்திலோ, துரதிர்ஷ்டத்திலோ ஒரு சிறிதுங்கூட நம்புவதில்லை. பெரும்பான்மையோர் சிலதடவை முயற்சி செய்து பின்னர் முயற்சி செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். ஆனால் நானோயான் கோரிய காரியம் கைகூடும்வரை அதை விடுவதேயில்லை. அதுதான் அதிர்ஷ்டசாலி என்று கருதப்பட்ட எனக்கும், துரதிர்ஷ்டவான்கள் என்று தங்களை நினைத்துக்கொண்டிருக்கும் பேர்வழிகளுக்கும் உள்ள வித்தியாசம் மேலும், அநேகம்பேர், என்னிடமுள்ள ஏதோ, அபூர்வ ஞானத்தால், நான் பல காரியாதிகளைச்சாதித்துள்ளேன் என்று என்னை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் கூட உண்மையல்ல. ஏனெனில், சுறுசுறுப்பும் ஊக்கமும் உள்ள வேறெந்த மனிதனும் என்னால் அடையப்பட்ட சகல காரியசித்திகளையும்பெறலாம். ஆனால் அவன் அவ்விஷயங்களை உடும்பைக்கட்டிப் பிடித்தாற்போல் பற்றிக்கொண்டே இருக்க வேண்டும். மேலும் சிறிதாவது பிரயோஜனம் ஆகக்கூடிய எக்காரியமும், நம்மை திருப்திப் படுத்துவதற்கென்று தானாக வந்து அமைந்துகொள்ளாது, என்பதையும், நாம் அச்சனியினை பெருமுயற்சியுடன் நடந்தேறச் செய்தது தான் ஆகவேண்டும் என்பதையும் நினைவில் கெட்டியாய் வைத்திருக்கவேண்டும். அபூர்வ ஞானம் (Genius) அல்லது அமைப்பு என்பது 100ல் ஒரு பாகம் தானே உதிப்பதும், 99பாகம் வியர்வை சொட்ட உழைப்பதும்தான்? என்ற என்னுடைய உண்மை வாக்கியத்தை, ஜனங்கள் திருப்பித் திருப்பிச் சொல்லுவதை நீ கேட்டிருக்கலாம், என்று சொன்னார்.

ஆம், ஐயா, அவை முழுவதும் கடின உழைப்பின் பலன்தான், என்று கூறிவிட்டு, அவரைப்பார்த்து நான், எடிசனே! எது எப்படி இருப்பினும் உமது விடாமுயற்சியும், பொறுமையும் அசாதாரணமானவையல்லவா? என்று வினவினேன்.

'ஓ!! ஆமாமாம், எனக்கு வண்டிவண்டியாய் பொறுமை இருக்கிறது, என்று விடையிறுத்தார்.

தூக்கம்:—

தூக்கத்தைப்பற்றி எடிசன் கொண்டிருந்த கொள்கையும் மிகருசிகரமானது. இக்கொள்கையின் பலத்தினால் தூக்கமேயில்லாமலும், ஏறக்குறைய முழுத்தூக்கமின்றியும் இரவு இரவாய் அவர் உழைக்க முடிந்தது போலும்!!

அவர் மிக கிளர்ச்சியுடனும் விருப்பத்துடனும் பேசுவது அவருடைய இந்தத்தூக்கத்தைப்பற்றிய கொள்கையேயாம். இதைப்பற்றியே திரும்பத்திரும்ப பேச்செடுப்பார் அவர், தூக்கமும் என்பது செயற்கையாய் நாம் கற்றுக்கொண்டதொருபழக்கம் தேக அணுக்கள் தூங்குவதே கிடையாது. மீனினங்கள் இரவிலும் நீரில் நீந்திக்கொண்டே இருக்கின்றன. அவை தூங்குவதேயில்லை. எந்தக்குதிரையும் தூங்குவதில்லை. அது ஆடாமல் அசைவற்று நின்று இளைப்பாறுகிறது. எந்த மனிதனுக்கும் சிறிது தூக்கமும் அவசியமேயில்லை, நீ இதைப் பரீக்ஷித்துப்பார், பகல் முழுதும் வேலைசெய்ய பின்னர் தொடர்ச்சியாக இரவு முழுதும் வேலை செய் கடைசியாக அதிகாலையில் அரைமணி நேரம் கண்துயில் பிறகு சடக்கென, எழுந்து குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவிக்கொண்டு மறுபடியும் உன் தொழிலைத் துவக்கு. நீ பறவைபோல பரபரப்புடனும் உற்சாகமாகவும் இருப்பதைக் காண்பாய், என்றார்.

போலீஸ் புலிகளின் அட்டூழியம்.

நாகபட்டணம் மகாநாட்டிலிருந்து தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, வல்லத்தரசு, கே. ராமையா, ஜீவானந்தம், பொன்னம்பலம், காரைக்குடி சுப்பையா, காளியப்பன், தர்மலிங்கம் முதலியவர்கள் 10—4—33 காலை நீடாமங்கலத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு அன்று மாலையில் அங்கு ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்கு தோழர் வல்லத்தரசு தலைமை வகித்தார். சுமார் 1500 பேர்கள் வரை ஆண்களும் பெண்களுமாய் விஜயம் செய்திருந்தார்கள். இதில் சுமார் 200 பேர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள். கூட்ட முதலில் தோழர் ஜீவானந்தமும் பிறகு பொன்னம்பலமும் பிறகு ஈ. வெ. இராமசாமியும் பேசினார்கள்.

பிறகு கூட்டம் 9 மணிக்கு முடிந்து எல்லோரும் சாப்பிட்டு விட்டு வெளியில் வந்து நிலாவில் காவேரி ஆற்றின் மணலில் போய் உட்காரலாம் என்று கருதி செல்லும்போது சிலர் கோவிலில் ஏதோ உற்சவம், வேடிக்கை நடப்பதாய் தெரிந்து அங்கு சென்றார்கள். ஒரு எட்டு, ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஒரு கான்ஸ்டேபிள் ஆகிய இவர்கள் கோவில் பக்கம்சென்று அங்குவெளியில்நின்று கொண்டிருந்த இருவர்களில் ஒருவரை இழிவாய் பேசி அடித்து கழுத்தைப் பிடித்து ஒருவர் தள்ளியதும் மற்றவர்ஏனய்யாஎன்று கேட்டதும் அவரையும் 2 அடி கொடுத்து தள்ளிகொண்டு வந்தார்கள். இது சங்கதி சிறிது தூரத்தில் இருந்த தோழர் ராமையா அவர்களுக்கு தெரிந்து உடனே பக்கத்தில் வந்து என்ன சங்கதி எதற்காக அவர்களை அடித்துத்தள்ளுகிறீர்கள் என்று கேட்டார். உடனே எட்டும் கான்டேபிளும் இருவருமாய் ராமையாவை கீழே தள்ளி நன்றாய் புடைத்தும் அடித்தும் தொந்திரவு செய்து தள்ளிகொண்டே போனார்கள். பக்கத்தில் இருந்த சப் இன்ஸ்பெக்டர் "மற்ற ஆட்களையும்பிடித்துசரியான உதை கொடுங்கள்" என்றுசொன்னாராம்.

இரவு 11 மணிக்கு போலீசு லாக்காப்பில் அடைத்து எந்தவிதமான கேசு செய்வது என்று கருதி ஒரு நாள் எல்லாம் யோசனை செய்து பிறகு கோயிலுக்குள் பார்ப்பனர்கள் சாப்பிடும் இடத்தைப்பார்த்ததாக ஏதோ ஒரு ஏற்பாடு செய்து இரண்டு நாள் அடைத்து வைத்து மூன்றாவது நாள் மேஜிஸ்ரேட் கோர்ட்டில் நிருத்தி மேஜிஸ்ரேட்டால் தலைக்கு 3-நாள் தண்டனை யிட்டார்கள்.

தண்டிக்கப்பட்டவர்கள் விசாரணையில் கலந்துகொள்ளமுடியாது என்றுசொன்னதுடன் அபராதமும் கொடுக்கமுடியாது என்றும் சொல்லிவிட்டார்கள்.

11—4—33.

தோழர் ஈ. வெ. ராமசாமி, அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தம் முதலியவர்கள் 11-ந்தேதி காலையிலேயே போலீஸ் நடவடிக்கை எப்படியோ நடக்கட்டும் என்றும் கேசு விஷயத்தில் ஒன்றும் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை என்றும் நடக்கிறபடி நடக்க தாராளமாய் விட்டு விடுங்கள் என்றும் சொல்லிவிட்டு மற்ற சுற்றுப்பிரயாணங்களை மாற்றி மன்னார்குடிக்கு புறப்பட்டுவிட்டார்கள். மன்னார்குடியில் ஆற்றில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது கூட்டத்திற்கு சுமார் 2000 பேர்கள் வந்திருந்தார்கள் நீடாமங்கலம் ஆறுமுகம் அவர்கள் தலைமை வகித்தார். 6-மணி முதல் 8-30 மணிவரை தோழர் ப. ஜீவானந்தம், ஈ. வெ. ராமசாமி பேசினார்கள்.

12—4—33.

பிறகு மறுநாள் காலையில் மன்னார்குடியில் இருந்து இரண்டு பிரிவாய் பிரிந்து ஒருபிரிவு தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, நடேசன் தஞ்சைக்கும் மற்றொரு பிரிவு தோழர்கள் பொன்னம்பலம் ஜீவானந்தம், காளியப்பன், முத்துப்பேட்டை தர்மலிங்கம் முதலியவர்கள் திருத்துறைப்பூண்டிக்கும் சென்றார்கள்.

தஞ்சையில் பெரிய கோவில் மைதானத்தில் தோழர் மருதமுத்து மூப்பனார் பி. ஏ. பி. எல், அவர்கள் தலைமையில் மாலை 5-30 மணிக்கு ஒரு மீட்டிங்கு நடந்தது தோழர் ஈ. வெ. ராமசாமி 2-மணி நேரம் பேசினார். கூட்டம் வாலிபர்களும் பெரியோர்களுமாக சுமார் 1500பேர்கள் வந்திருந்தார்கள்.

மறுநாள் காலையில் தோழர் எஸ். ஆர். கண்ணம்மாள் மாயவரத்திலிருந்து வந்து சேர்ந்ததும் எல்லோரும் திருச்சிக்குப் புறப்பட்டுவிட்டார்கள். பிறகு அன்று இரவு ஈரோட்டிற்கு புறப்பட்டார்கள். எல்லாக்கூட்டமும் சுயமரியாதைச்சங்கத்தின் சார்பாகவே நடந்தது. தோழர் ஈ. வெ. ரா. நாகம்மாள் மாயவரத்தில் இருக்கிறார்கள்.

பொதுவுடைமைக் கட்சி.

இங்கிலாந்தில் பொதுவுடைமைக் கட்சியின் செல்வாக்கு.

இங்கிலாந்து பார்லிமெண்ட் அங்கத்தினரான கர்னல் வாட்ஸ் மார்க்கன் என்பவர் இறந்து போனதால் அவருக்குப் பதிலாக சவுத் வேல்ஸ் தொகுதிகள் ஒன்றில் சென்ற மாதம் மறுதேர்தல் நடந்தது. அத்தேர்தலுக்கு மூன்று கட்சிக்கு மூன்று அங்கத்தினர்கள் போட்டி போட்டார்கள்.

அதாவது தோழர் ஹார்னர் என்பவர் பொதுவுடைமைக் கட்சிக்கும், தோழர் மெயின் வார்னிங் என்பவர் தொழில் கட்சிக்கும், தோழர் தாமஸ் என்பவர் லிபரல் கட்சிக்கும் நின்றார்கள். இவற்றுள் தொழில் கட்சி அபேக்ஷகர் 14100 ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். பொதுவுடைமைக்கட்சி அபேக்ஷகர் தோற்று இருந்தாலும் கூட அவருக்கும் 11200 ஓட்டுகள் கிடைத்திருக்கின்றன. ஆகவே ஜெயித்தவர் பெற்றதில் 100க்கு 80 வீதம் ஓட்டுகள் பொதுவுடைமைக் கட்சியாருக்குக் கிடைத்திருக்கிறதைப் பார்க்கும் போது இங்கிலாந்தில் பொதுவுடைமைக் கட்சிக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கின்றது என்பது விளங்கும். இந்தியாவிலோ பொதுவுடைமை என்றால் வாய் வெந்துபோகும் என்று பயப்படுகின்றார்கள்.

ஏனென்றால் இந்தியாவில் இன்னமும் பணக்காரர்களுடையவும், சோம்பேறிப் பார்ப்பனர்களுடையவும் ஆட்சி பலம் பெற்றிருப்பதோடு அவர்களது சூட்சியையும் மோசத்தையும் ஜனங்கள் அறியாததுமே யாகும்.

அதாவது பணக்காரர்களுடைய ஆட்சி என்பது ஜஸ்டிஸ் மிதவாதக் கட்சி ஆட்சியாகும். மற்றும் பார்ப்பனர்கள் ஆட்சி என்பது காங்கிரஸ் கட்சி ஆதிக்கமாகும். இவ்விரு கூட்ட ஆட்சிக்கும் என்று சாவுமணி அடிக்கப்படுகின்றதோ அல்லது அவைகளின் வண்ட வாளங்கள் முழுவதும் என்று வெட்ட வெளிச்சமாகின்றதோ அன்று தான் பொதுவுடைமைக் கட்சி இந்தியாவில் செல்வாக்குப் பெற முடியும். உண்மை அறியாத மூடங்கள் சர்க்கார் பேரில் மாத்திரமே குற்றம் சொல்லி "சர்க்கார் பொதுவுடைமைக்கு விரோதிகளாய் இருக்கிறார்கள்" என்று சொல்லவரலாம். இதை முழுதும் உண்மை என்று ஒப்புக்கொள்ள முடியாது.

காங்கிரசின் ஆதிக்கத்தையும், ஜஸ்டிஸ், மிதவாதம் ஆகிய கட்சிகளின் ஆதிக்கத்தையும், சர்க்கார் தங்களுக்கு அனுகூலமாகக்கொண்டு பொதுவுடைமைக்காரர்களை மிரட்டலாம், பூச்சாண்டிகாட்டலாம். ஆனால் இங்கிலாந்தில் சர்க்கார் பொதுவுடைமைக்காரர்களிடம் சென்றால் பூசை தான் விழும். அங்கு பொதுவுடைமைக் கட்சி வெகு செல்வாக்குப்பெற்று இருக்கின்றதுடன் லண்டனில் மாத்திரம் அது சம்பந்தமாக அக்கொள்கைகொண்ட சுமார் 20-க்கு மேல்பட்ட ஸ்தாபனங்கள் உண்டு. ஏறக்குறைய மொத்த தொழிலாளிகளில் 100-க்கு 30 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் அந்த ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்குப் பொதுஜன ஆதரவும் உண்டு பொதுவுடைமை கொள்கை சம்பந்தப்பட்ட அனேகசங்கங்களிலும், பத்திரிகாலயங்களிலும், பெண்கள் காரியதரிசிகளாக இருப்பதுடன் பெரும்பான்மை கூட்டங்களுக்கு பெண்கள் தலைவர்களாகவும் பிரதம உபன்யாசகர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் பொதுவுடைமை மீட்டிங்குகளுக்கு தொந்திரவுகள் கொடுக்க பாதிரிகளும், இரக்ஷண்ணிய சேனையைச் சேர்ந்த பெண்களும்தான் வந்து பக்கத்தில் நின்று மதத்தின் பேரால் பாடியும் பிரசங்கம் செய்தும் தொல்லைவிளைவிக்கலாமே ஒழிய சர்க்காரோ—போலீசோ கிட்டத்தில் நாடுவதே இல்லை. ஒவ்வொரு பிரசங்கத்திலும் பொதுவுடைமைக்காரர்கள் அதிகாரத்தில் இருக்கும் நபர்களைப்பற்றியும், அதிகார போக்கைப்பற்றியும் எடுத்துக்கண்டித்துப்பேசும் வார்த்தைகளுக்கு அளவே இல்லை. மற்றும் அங்கு பார்லிமெண்டில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் கவர்ன்மெண்டிலுள்ள வியாபார சம்பந்தங்களைப்பற்றியும் தொழில்சாலைகள் வைத்து கவர்மெண்ட் சலுகையின் பேரில் கொள்ளை அடிக்கும் ரகசியங்களைப்பற்றியும் ரயில்வே லேவாதேவி முதலிய விஷயங்களில் சர்க்கார் சலுகையை தப்பு வழியில் உபயோகித்துக்கொள்வதைப்பற்றியும் மந்திரிமார்கள் முதல் மந்திரி முதல் அனேகமாய் எல்லோருமே முதலாளிகளுக்கு அனுகூலமாய் உள் உளவாய் இருப்பதைப் பற்றியும் மற்றும் பிரபுக்கள் சபையார்கள் செய்யும் சுயநலக்காரியங்களைப்பற்றியும் சாங்கோபாங்கமாய் பொதுவுடைமைக்காரர் புள்ளி விபரங்களோடு எடுத்துச் சொல்லுவதை எப்படிப்பட்டவர்களும் வந்து தடுக்கவே முடியாது. சர்க்கார் தரப்பையோ, அதிகாரத்திலிருக்கும் கட்சியாகிய மந்திரி தரப்பையோ மாத்திரமல்லாமல் எதிர் கட்சியில் இருந்துகொண்டு அதிகாரத்தில் இருக்கும் கட்சியை குறைகூறி ஜனங்களை ஏமாற்றி அடுத்த தடவைக்கு ஆதிக்கம் பெற நாக்கில் தண்ணீர் சொட்டவிட்டுக்கொண்டு தொட்டதை எல்லாம் குற்றம் சொல்லக்காத்திருக்கும் கட்சியாகிய இப்போதைய தொழில் கட்சி அதாவது தோழர் லான்ஸ்பரியைத் தலைவராகக் கொண்ட (அதாவது நமது இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி போன்ற) கட்சியையும் கூட தாக்ஷண்ணியம் பார்க்காமல் அவர்களுடைய சூட்சிகளையும் சுயநலங்களையும் முன்பு ஒரு காலத்தில் அவர்கள் அதிகாரத்தில் இருக்கும் போது எப்படி நடந்து கொண்டார்கள் என்பதையும் புள்ளி விபரங்களுடன் எடுத்துச்சொல்லுகையில் எந்த தொழிற்கட்சித் தலைவரோ அங்கத்தினரோ எவரும் அந்தப்பக்கம் நடக்கவே மாட்டார்கள். பொதுவுடைமைக்காரர்கள். இவ்வளவோடு விடுவதே இல்லை.

மற்றும் அங்குள்ள இன்னும் ஒரு கட்சியாகிய அதாவது டிரேட் யூனியன் என்கின்ற ஒரு கட்சியையும் வெளிப்படுத்தி சின்னா பின்னமாக்கி விடுவார்கள். இங்கிலாந்தில் டிரேட் யூனியன் கட்சி என்பது தொழிலாளிகளின் நலத்துக்காகவே நேர்முகமாக பாடுபடுவதாய்ச் சொல்லிக்கொள்ளும் கட்சியாகும். இதில் அநேக தொழிலாளர்கள் மெம்பர்களாயும் இருப்பார்கள்.

அன்றியும், செல்வவான்களும் முதலாளிமார்களும் இதில் மெம்பர்களாக இருக்கமாட்டார்கள். ஆனாலும் தங்கள் கையில் பணமில்லாமலும் பாடுபட முடியாமலும் எவ்வித கிளர்ச்சிகள் ஏற்பட்டாலும் அவைகளில் தங்கள் பெயர்களை விளம்பரப் படுத்திக் கொண்டிருப்பவர்களுமாகிய ஒரு வகை சோம்பேறிக் கூட்டம்—பொதுநலத்தின் பேரால் வாழ்க்கை நடத்தும் கூட்டம் இதில் பிரதானமாக இருப்பார்கள். (இதற்கு உதாரணம் சொல்லவேண்டுமானால் சென்னை தொழிலாளர்கள் சங்கங்களின் தலைவர்கள் போன்றாரையும் தோழர் சத்தியமூர்த்தி போன்ற கூட்டத்தார்களைப்போன்றார்களையும் சொல்லலாம்) இங்கிலாந்து பொதுவுடைமைக்காரர்கள் இவர்களையும் விடமாட்டார்கள். பல ஞானமற்ற தொழிலாளிகளும், சுயநலமே பிரதானமாய்க்கொண்ட தொழிலாளிகளும் இந்தக் கூட்டங்களை ஆதரித்தாலும்—சில தொழிலாளிகள் ஞானமில்லாமல் பொதுவுடைமையை எதிர்த்தாலும் அவற்றைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் இந்த டிரேட் யூனியன் தலைவர்கள் காரியதரிசிகள் ஆகியவர்களின் சூழ்ச்சிகளையும், தக்க சமயத்தில் ஒன்றும்தெரியாதவர்கள் போல் முதலாளிகளுக்கு அனுகூலமாயிருந்து விட்டுக்கொடுத்து தொழிலாளிகளை மோசம் செய்து வருவதையும், போலி நம்பிக்கையும் குருட்டு உற்சாகத்தையும் தொழிலாளிகளுக்கு உண்டாக்கி விட்டு சௌகரிய மற்ற சமயங்களிலும் பந்தோபஸ்து உண்டாக்கிக்கொள்ளாத நிலையிலும் வேலை நிறுத்தங்களை உண்டாக்கி இரகசியத்தில் முதலாளிகளுக்கும், சர்க்காருக்கும் நல்ல பிள்ளையாகி பயன் பெற்று தொழிலாளிகளை திண்டாட்டத்தில்—ஆபத்தில்விட்டு அவமானப்படுத்தி பல குடும்பங்களைக்கெடுத்ததையும் இதனால் இந்தத்தலைவர்களின் இனத்தாருக்கும், சொந்தக்காரருக்கும் அண்ணன், தம்பி பிள்ளைகளுக்கு உத்தியோகம், அனுகூலம் ஆகியவை பெற்றதையும், இந்த தலைவர்கள் பார்லிமெண்ட் முதலிய சபைகளுக்கு தொழிலாளர்கள் பிரதிநிதிகளாய் போனதையும், அங்கு போய் முதலாளி கூட்டத்திற்கு அனுகூலமாய் இருந்து காரியங்கள் செய்திருப்பதையும், புள்ளி விவரப்படி எடுத்துச் சொல்லுவார்கள். இந்தக்கூட்டங்களில் இந்தத்தலைவர்களுடைய கூலிகளாகிய சில தொழிலாளர்கள் வந்து எதிர்த்துப்பேசிக் கலகம் செய்வார்கள், இவைகளை யெல்லாம் லட்சியம் செய்யாமல் பொதுவுடைமைக்காரர்கள் தாங்களும் கைக்குத்துக்குத் தயாராகிக்கொண்டு முன்னிலும் அதிகமாய் புள்ளி விபரம் கட்டிச் சத்தம் போடுவார்கள். அப்போது இந்தக் கூலித்தொழிலாளிகள்—சுயநலத்தொழிலாளிகள் என்பவர்கள் தலைகுனிந்து கொண்டு மறைந்து போவார்கள்.

இப்படியெல்லாம் பல வழிகளிலும் பொதுவுடைமைக் கட்சி இங்கிலாந்தில் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது.

எப்படியிருந்த போதிலும் எலக்ஷன் சூழ்ச்சிகளும் கையில் போதிய பணமில்லாத காரணங்களும் முதலாளிகளின் தாக்ஷண்ணியங்களும் அதிகாரத்திலிருப்பவர்களின் அடக்குமுறை பயமும் சேர்ந்து தேர்தல்களில் இந்த பொதுவுடைமைக் கட்சியார் வெற்றிபெற முடியாமல் போய் விடுகின்றது.

இந்த இப்படிப்பட்ட நிலையிலும் கூட சென்ற மாதம் சவுத் வேல்சில் நடந்த ஒரு பார்லிமெண்ட் எலக்ஷனில் ஜெயித்தவருடைய ஓட்டுகளில் 100க்கு 80 வீதத்துக்கு மேல் வாங்க முடிந்தது என்றால் அக்கட்சிக்கு உள்ள உண்மை செல்வாக்கும் தொழிலாளர் கட்சியின் சாதாரண நிலைமையும் நன்றாய் விளங்கும்.

அன்றியும் தொழிலாளர்கள் பேரால் நடத்தப்படும் தொழில்கட்சிகள் என்பது பெரிதும் முதலாளிமார்களுக்கு அனுகூலமாய் இருந்து வருவதும் உண்மையாகத் தொழிலாளிகளுக்கு அனுகூலமாய்ப் பாடுபடும் கட்சி பொதுவுடைமை கட்சி தான் என்பதும் விளங்கிவிடும்.

ஆகவே உண்மைத்தொழிலாளி மக்களும், ஏழைமக்களும்பொதுவுடைமைக் கொள்கையையே ஆதரிக்கவேண்டும் என்பதையும், பொதுவுடைமை என்றால் யாரும் பயப்படவேண்டியதில்லை என்பதையும் இதிலிருந்து அறியலாம்.

குடி அரசு.

ஈரோடு 1933 ஏப்ரல் மீ 16-உ

தஞ்சை ஜில்லா மகாநாடு.

——:0:——

இம்மாதம் 8, 9 தேதிகளில் தஞ்சை ஜில்லா மூன்றாவது சுயமரியாதை மகாநாடு நாகபட்டணத்தில் சிறப்பாக நடைபெற்ற விபரம் மற்றொரு பக்கம் காணலாம். அதை ஊன்றிப்பார்ப்பவர்களுக்கும், நேரில் மகாநாட்டு நடவடிக்கைகளைக் கவனித்தவர்களுக்கும் தமிழ் நாட்டில் எந்த இயக்கத்தை எப்படிப்பட்ட கொள்கையை மக்கள் ஆண், பெண், இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் முதலியவர்கள் விரும்புகின்றார்கள்? எதில் ஊக்கமாய் இருக்கின்றார்கள்? என்பது விளங்கும்.

மகாநாடு நாகையில் நடைபெற வொட்டாமல் செய்ய வெளியிலிருந்து செய்யப்பட்ட சில சூட்சிகள் மகாநாட்டுக்கு எதிர்பார்த்த அளவுக்கு மேல் கூட்டம் சேர்த்துக் கொடுத்து அதிவிமரிசையாய் அதாவது ஒரு மாகாண மகாநாடு போல் நடத்திக்கொடுத்து விட்டது. ஆகையால் அத்திருக்கூட்டத்தாருக்கு மகாநாடு நடத்தியவர்களின் நன்றியறிதல் உரியதாகவேண்டும் என்பதில் குற்றம் இல்லை. மகாநாடு நடக்க 2, 3 நாட்கள் இருக்கும் போது சுமார் 150 கையெழுத்திட்டுக்கொண்ட விண்ணப்பம் ஒன்று அவ்வூர் கலெக்டருக்குச்சமர்ப்பித்து மகாநாட்டை நிறுத்த 144 உத்திரவு போடவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதே போல் இதற்கு முன் 1931ம் வருஷம் நடந்த நாகை மகாநாட்டிலும் பலர் பொதுஜனங்களிடம் விஷமப்பிரசாரம் செய்ததும், தெருக்களில் காலித்தனம் செய்ததும், அது சம்மந்தமாய் அடிதடி நடந்து கிரிமினல் கோர்ட்டுகளில் விசாரணைகள் நடந்ததும் பலருக்கு ஞாபகமிருக்கலாம். அப்படியெல்லாம் இருந்தும் அம்மகாநாடு தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியரவர்கள் தலைமையில் விசேஷமாய் நடைபெற்றதும் ஞாபகமிருக்கலாம்.

அதுபோலவே இந்த மகாநாட்டுக்கும் மேல் குறிப்பிட்டபடி பல தடுப்புகள் செய்ய முயற்சிகள் பல செய்யப்பட்டிருந்தாலும் அவ்வூர் ஸ்தல அதிகாரியாகிய கலெக்டர் அவர்கள் உள்ளூர் இந்து முஸ்லீம் கிறிஸ்தவ பிரமுகர்கள் பலரை அழைத்துத்தனியே விசாரித்து உண்மை இன்னது என்று அறிந்த பின்பு 144 உத்திரவு போட மறுத்ததுடன் மகாநாடு சிறப்பாய் நடக்கவேண்டுமென்று சோருவதாகவும், வெளிப்படையாய் தெரிவித்துக்கொண்டாராம். அதுபோலவே அங்குள்ள போலீஸ் அதிகாரிகளும், சில காங்கிரஸ் தொண்டர்களும், சில முஸ்லீம் பிரமுகர்களும், சில கிறிஸ்தவ நண்பர்களும் 2 நாளும் மகாநாட்டுப் பந்தலில் இடைவிடாது கூடவே இருந்து மகாநாட்டை உற்சாகப்படுத்தி ஆனந்தித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் ஒரு விசேஷம் என்னவென்றால் இரண்டொரு முக்கிய அதிகாரிகள் மற்ற ஜனங்களுக்குத் தெரியாமல் கூட்டத்திற்கு வந்து விஷயங்களைக் கவனித்துச் சென்றதாகவும் இரண்டொரு பிரசங்கங்களைப்பற்றி தாங்கள் இதுவரை இப்படிப்பட்ட கருத்துக்கள் கொண்ட பிரசங்கங்கள் கேட்டதில்லை என்றும், அவற்றில் கடுகளாவது குற்றம் சொல்ல இடமில்லை என்றும், இதுதான் இனி இந்தியாவுக்கு வேண்டியதும், நடைபெறப்போவதுமான தென்றும் சொன்னதாகவும் திருப்திகரமாய் தெரியவந்ததாகும்.

கூட்டத்திற்கு சுமார் 250 முஸ்லீம்களுக்குக் குறையாமல் இரண்டு நாள் 4 வேளைகளில் இருந்ததும், பெண்கள் 100 பேர்கள் வரை சதா கூடியிருந்ததும், கலப்பு மணம், விதவை மணம், கல்யாண ரத்து மணம், புரோகித மற்ற மணம் ஆகியவைகளுக்கு அங்கேயே பல பேச்சு வார்த்தைகள் தனித்தனியே பிரமுகர்களிடத்தில் நடைபெற்றதும் சில கல்யாணப்பேச்சுகள் முடிவு பெற்றதும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க வந்த தோழர் வல்லத்தரசு அவர்களையும். மகாநாட்டுக்குத் துவக்குவிழா வாற்ற வந்த தோழர் நீலாவதி அம்மையாரையும், மேல்நாட்டுக்குச் சென்றுவிட்டு நாகைக்கு முதல் முதல் வரும் தோழர் ராமசாமியையும் பார்க்கவும் அவர்களுடைய சொற்பொழிவைக் கேட்கவும் என்று தஞ்சை ஜில்லாவிலும் தென்னாற்காடு ஜில்லாவில் உள்ள கிராமங்களிலும் முக்கிய பட்டணங்களிலுமிருந்து வந்த வாலிபர்கள் சுமார் 1000 பேர்களுக்கு மேலாகவே இருப்பார்கள் என்பதுடன் அவர்களுக்கு அங்கு காணப்பட்ட உற்சாகத்திற்கு அளவு கூறவேமுடியாது என்று சொல்வதில்சிறிதும் அதிகமில்லை. ஆனால் ஒரு விஷயம், சென்ற வருஷத்திற்கு முந்திய வருஷ மகாநாடுகளில் காணப்பட்டதான செல்வவான்கள் உத்தியோகஸ்தர்கள், ஸ்தலஸ்தாபனங்களின் தலைவர்கள் என்கின்ற கூட்டங்கள் பூதக்கண்ணாடி வைத்துத்தான் தேடிப்பார்க்கவேண்டி இருந்தது. கூடுமானவரை மறைந்துகொள்ளவே முயற்சித்திருக்கிறார்கள் என்றும் தெரியவந்தது. என்றாலும் வாலிபர்களாய் உள்ள செல்வவான்களும் வாலிபர்களாய் உள்ள சில உத்தியோகஸ்தர்களும் வந்து இருந்ததுடன் தங்களை தைரியமாகவும் உறுதியாகவும் மகாநாட்டு நடவடிக்கைகளில்காட்டிக்கொண்டார்கள். ஆகவே மேற்கண்டகாரியங்களில்இருந்து சுயமரியாதைஇயக்கத்தின்போக்கு இன்னது என்பதும் அது எந்த தன்மையில் விளங்குகின்றது என்பதும் வாசகர்களுக்கு ஒருவாறு விளங்கக்கூடும் என்றே கருதுகின்றோம். தவிர மகாநாட்டு தலைவர் தோழர் வல்லத்தரசு அவர்களது தலைமை உபன்யாசம் சற்று நீண்டதாய் இருந்தாலும் அவ்வுபன்யாசமானது சுயமரியாதை இயக்கத்தின் 4, 5 வருஷ சரித்திரத்தை ஒருவாறு விளக்கி அதன் படிப்படியான விருத்தியையும், முற்போக்கையும் சுட்டிக்காட்டுவதாய் இருக்கின்றது என்பதுடன் வாலிபர்களுக்கு உற்சாகத்தையும் பிற்காலத்தில்பலமான நம்பிக்கையையும் உண்டாக்கும் தஸ்தாவேஜாயிருக்கிறது.

மகாநாட்டுக்கு துவக்க விழாவாற்றிய தோழர் நீலாவதி யம்மையாரின் உபன்யாசம் ஆண்களைத்திடுக்கிடச் செய்தும் பெண்கள் நிலைமையை எடுத்துக்காட்டி ஆண்மக்களை வெட்கி தலைகுனியச்செய்தும்விட்டது. அதுபோலவே வரவேற்புத்தலைவர் தோழர் சிவராமசாமி அவர்கள் சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர் ஆனாலும், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் ஆனாலும் தைரியமாய் முன்வந்து இந்தப் பொறுப்புள்ள பதவியை ஏற்றுக் கொண்டதோடு பலதத்துவங்கள் கொண்ட உபன்யாசமானது போற்றத்தக்கதேயாகும்.

நிற்க அங்கு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒரு முக்கிய தீர்மானமாவது:—

> “சென்னை மாகாணத்தில் தஞ்சை ஜில்லாவை ஒரு “மாடல் ஏரியாவாக” (பகுதியாக) எடுத்துக்கொண்டு சுயமரியாதை இயக்க ஜில்லா, தாலூகா, கிராமங்களை ஏற்படுத்தி நமது வேலைத்திட்டத்திற்கண்ட துறைகளிலும் வேலை செய்து காண்பிக்க ஒரு கமிட்டி நியமிக்க இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது” என்பதாகும்.

இது அன்று அங்கு கூடியுள்ள இளைஞர்கள் ஊக்கத்தாலும் வேகத்தின் உணர்ச்சியாலும் ஏற்பட்டது என்று சொல்லக்கூடுமானாலும் உண்மையிலேயே தஞ்சை ஜில்லாவானது இது சமயம் இயக்க சம்பந்தமான, எந்த அபிப்பிராயத்துக்கும் தலை சிறந்து விளங்கத் தயாராயிருக்கின்றது என்பதில் ஆக்ஷேபணை இல்லை. ஆனாலும் தஞ்சை ஜில்லாவிலுள்ள பார்ப்பனர்களைவிட மிகக் குறுகிய நோக்கமே அந்த ஜில்லா மிராசுதார்களும், செல்வவான்களும் பார்ப்பனரல்லாத வக்கீல்களில் பலரும் ஸ்தலஸ்தாபனங்களில் கலந்துள்ளவர்களுமானவர்களின் மனப்பான்மை இருந்து வருகின்றது என்பதை ஒழிக்காமல் சொல்லித்தீரவேண்டியதாய் இருக்கின்றது.

தஞ்சை ஜில்லாவில் இதுசமயம் பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சி மேற்கண்ட கூட்டத்தார்களில் முன் இருந்ததில் 100க்கு 25 பாகம் கூட இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இதற்குக் காரணம் பார்ப்பனர்கள் தங்கள் ஜாதி உயர்வு போய் விட்டால் தங்கள் நிலைமோசமாகி விடும் என்று எப்படிப் பயப்படுகின்றார்களோ அதேபோல்பார்ப்பனரல்லாத மிராசுதாரர்கள் முதலியவர்களும் தங்களுக்குள் ஏற்பட்ட கட்சிப்பிணக்கால் பார்ப்பனர் விரோதம் வந்தால் தாங்கள் கவிழ்ந்து விடுவோம் என்ற பயமும் பணக்காரத்தன்மைக்கு உண்டான உயர்வும், மதிப்பும்போய்விட்டால் தங்கள் நிலை மிகமோசமாய்ப் போய் விடுமே என்ற கவலையும் சேர்ந்து அவர்களை உலக நடப்பில் இருந்தே தள்ளி ஒதுக்கி வைத்து விட்டதுடன் சதாகாலமும் உத்தியோகம், பதவி, பணக்கொள்ளை என்கின்ற

"பேய்கள்" பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கின்றன.

இதன் பயனுய் அந்த நாட்டு பிராசுதாரர்கள், பெரிய மனிதர்கள், ஸ்தலஸ்தாபன தலைவர்கள் என்பவர்கள் பார்ப்பனரல்லாதாராய் இருந்தாலும் ஏழை மக்களின் தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மைகளுக்கும், விடுதலைகளுக்கும் பார்ப்பனர்களைப் போலவே பெரிய எதிரிகளாகவும் முட்டுக்கட்டையாகவும் தான் இருக்கிறார்கள்.

எனவே தஞ்சை ஜில்லாவை சுயமரியாதை மாடல் சென்டராக ஆக்குவது என்பது அந்த ஜில்லாவில் உள்ள மேல்கண்ட கூட்டத்தாரின் யோக்கியதையை வெளியாக்கி பொது ஜனங்களுக்கு அவர்களிடம் இருக்கும் பயத்தையும் பயத்தினுல், ஏற்பட்ட மரியாதையையும் ஒழிக்கவேண்டும் என்பதே முக்கிய காரியமாகும். இந்தக் காரியத்தை ஒவ்வொரு ஜில்லாவிலும் செய்து வருவதுதான் சுயமரியாதைத் தொண்டின் முக்கிய தத்துவமாகும்.

ஆதலால் தஞ்சை ஜில்லா வாசிபர்கள் அவர்கள் மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தைக் காரியத்தில் நடத்திக் கொடுப்பார்கள் என்றே கருதுகிறோம்.

அந்தப்படி இவர்கள் நடத்திக் காட்டி விட்டார்கள் என்பதற்கு அத்தாட்சி என்னவென்றால் இனி வரப்போகும் தேர்தல்களில் செல்வவான்களின் நிலை என்ன ஆகின்றது என்பதேயாகும்.

போலீஸ் யோக்கியதை.

உப்புசத்தியாக்கிரக சட்டமறுப்பு காலங்களில் இருந்து போலீசாருக்கு ஒரு புதிய யோக்கியதை ஏற்பட்டுவிட்டது. அதாவது போலீசு எவ்வளவு அக்கிரமமாகவும், அயோக்கியத்தனமாகவும் நடந்துகொண்டாலும் அதற்கு எவ்வித கேள்வியும், கேழ்ப்பாடும் கிடையாது என்பதாகும். போலீசு இலாக்காத் தலைமை அதிகாரிகளுக்கும் நிர்வாக தலைவர்களுக்கும் சட்டசபை அங்கத்தினர்கள் கேட்ட கேள்விகளாலும், தேசிய பத்திரிகைகள் வைத வசவுகளாலும், பொது ஜனங்கள் மண்ணை வாரித்தூற்றி "சாபம்" கொடுத்துசபித்ததாலும், புத்தியும் நாணயமும், யோக்கியப்பொருப்பும் காப்புக்காச்சி மறந்துப் போய்விட்டதுடன் அவர்களது தோல் காண்டாமிருகத் தோலுக்கு சமமாய்போய்விட்டது. இனி எந்தக் காரணத்தை முன்னிட்டும் போலீசு இலாக்காவை திருத்தவோ, அவர்களுக்கு நல்ல புத்தி வரும்படி செய்யவோ யாராலும் முடியாது என்கின்ற பதவியை அது அடைந்து வருவதாகத் தெரியவருகின்றது. இது அந்த இலாக்காவுக்கு ஒரு கௌரவம்தான் என்றாலும் நம்மைப் பொருத்தவரை இனி நம்மால் போலீசு இலாக்காவைத் திருத்த முடியாவிட்டாலும் போலீசு இலாக்காவினுல் நாமாவது திருத்துப்பாடடைந்து இனிமேல் இப்படிப்பட்ட விஷயங்கள் நம் கண்ணில் தென்படாமலும், காதில் கேட்கப்படாமலும் உள்ள நிலையை அடையவேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம். ஏனெனில்,

சமீப காலத்துக்குள் இரண்டு இடங்களில் போலீசு அட்டூழியம் ஏற்பட்டு விட்டது.

ஒன்றுகாரைக்குடியில்ஒருநாட்டுக்கோட்டை நகரத்து வாலிபரையும் மற்றும் இரு தோழர்களையும் தெருவில் நடக்கும் போது அடித்து துன்புறுத்தி அரஸ்ட் செய்தது.

இரண்டு நீடாமங்கலத்தில் தோழர் கே. ராமையாவையும் மற்றஇருநண்பர்களையும்தெருவில் நடக்கும் போது ஒரு நண்பரை யார் அடிக்கிறார்என்றுஒருவர் தலை நிமிர்ந்து பார்த்ததற்காக அடித்து துன்புறுத்தி அரஸ்ட் செய்து மூன்றுநாள் தண்டித்து கொடுமைப்படுத்தியது ஆகிய காரியங்களுக்கும் மற்றும் அவர்கள் குடிகாரன், வெறிகாரன் போலும் கீழ்மக்கள் என்பவர்கள் போலும் வைவதும் நடந்து கொள்ளுவதுமான காரியங்களைப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

சுயமரியாதைக்காரர்கள் எந்த இடத்திலாவதுஇதுவரைபோலீசு அல்லது நீதிநிர்வாக இலாகா உத்திரவுகளை மீறியோ அல்லது சட்டம் என்பதற்கு விரோதமான காரியங்களைச் செய்தோ இருந்தால் இவ்வித காரியங்களைப்பற்றி பேசவோ, எழுதவோ ஒருநாளும் வெளிவர மாட்டோம். அனுவசியமாய் பார்ப்பனர்கள் இடம் கூலி பெறவும் அகஸ்மாத்தாய் தங்கள் அயோக்கியத்தனமான நடவடிக்கைகளும் முட்டாள்த்தனமான நடவடிக்கைகளும் . பிரசங்கத்தில் வெளியாய்விட்டதாகக்கருதிக்கொண்டும் இந்தப்படி நடந்து கொண்டால்அதன் எல்லை முழுவதையும் பார்த்து விட வேண்டும் என்றும் அந்த இலாக்காவின் யோக்கியதையை வெளிப்படுத்தி விட வேண்டும் என்பது தான் நமது கருத்து.

ஆர். கே. ஷண்முகத்துக்கு வரவேற்பு.

சுயமரியாதை ஸ்தாபனத்தலைவரும், இந்திய சட்டசபைத்தலைவருமான கோவை தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களுக்கு சென்னை கார்ப்பரேஷன் தலைவர் தோழர் குமாரராஜா, முத்தையா செட்டியார் அவர்கள் 20—4—33 ந்தேதி ஒரு விருந்து நடத்துவார்.

தோழர் ஈ. வெ. ராமசாமி திருவாங்கூர் சுற்றுப் பிரயாணம்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் திருவாங்கூர் சுற்றுப் பிரயாணம் பல அசந்தர்ப்பங்களால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. நாகை, நீடாமங்கலம், மன்னார்குடி, தஞ்சை, திருச்சி, ஆகிய ஊர் சுற்றுப்பிரயாணங்களில் இருந்து 13-ந்தேதி இரவு ஈரோடு வந்து சேர்ந்தார். 15-4-33ந்தேதி இரவு மதுரை மகாநாட்டுக்கு புறப்படுகிறார். 18 ந்தேதி ஈரோடு வரக்கூடும்.

கிளைச்சங்கங்களுக்கு வேண்டுகோள்.

சுயமரியாதை இயக்கக்கொள்கைகள் கொண்ட கிளைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரூபாய் ஸ்டாம்பு அனுப்புவித்தால் குடி அரசு பதிப்பக புத்தகங்கள் இலவசமாய் புக் போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும். இந்த ஒரு ரூபாய் என்பது சராசரி ஸ்டாம்பு செலவுக்கு ஆகும்.

லாலுகுடி.

லாலுகுடியில் ஆதிதிராவிட கிறிஸ்தவர்கள் மகாநாடு அடுத்த மாத முதல் வாரத்தில் நடைபெறும். தோழர் ஈ. வெ. ரா. அங்கு செல்லக் கூடும்.

அடுத்தவாரம்.

அடுத்தவார இதழில் "போல்ஷ்விசம் அல்லது பொதுவுடமை" என்றகட்டுரையும், காரல் மார்க்சின் சரித்திரமும் வெளிவரும்.

இராமசாமிக்கு வரவேற்பு.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் திருவாங்கூர் நாகர்கோவிலுக்கு விஜயம் செய்யும்போது நாகர்கோவில் முனிசிபாலிட்டியார் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுப்பதென்று தீர்மானித்திருக்கிறார்கள் என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

வட ஆற்காடு ஜில்லா சு. ம. மகாநாடு.

அடுத்த மேமாதம்7-ந்தேதிவட ஆற்காடு ஜில்லாமுதலாவதுசு. ம. மகாநாடு நடைபெறும். தோழர் நீலாவதி அம்மையார் மகாநாட்டைத் துவக்குவார். மற்ற விபரம் பின்னுல் தெரிவிக்கப்படும், என்று காரியதரிசி தோழர், வி. பார்த்தசாரதி எழுதுகிறார்,

கொச்சி சுயமரியாதை மகாநாடு.

இம்மாதம் 14, 15 ந்தேதிகளில் கொச்சி ராஜ்ஜியம் சு. ம. மகாநாடானது இம்மாத கடைசி வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டு விட்டது. அங்கு தீயர் மகாநாடு ஒன்று பம்பாய் தோழர் அம்பட்கார் தலைமையிலும் சுயமரியாதை மகாநாடு ஈ. வெ. ரா. தலைமையிலும் நடத்த ஏற்பாடாகிஇருப்பதாய் கொச்சி வக்கீல் வி. கே. கிருஷ்ணன்குட்டி பி. ஏ. பி. எல்., எழுதுகிறார்.

வரவேற்புப்பத்திரங்கள்.

தோழர்கள் ஈ. வெ. இராமசாமி அவர்கட்கும், கே. முத்துசாமிவல்லத்தரசு அவர்கட்கும், நீலாவதி அம்மையாரவர்கட்கும் முறையே நாகைக்கடுத்த மஞ்சக்கொல்லை சலவைத்தொழிலாளர்கள் சார்பாகவும், தஞ்சை ஆதிதிராவிட மகாஜன சங்கத்தார் சார்பாகவும் வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன

தோழர் சித்தையன்.

சேலம் சுயமரியாதைச் சங்கக் காரியதரிசி தோழர் எ. சித்தையன் அவர்கள் சென்ற ஒருவாரமாக கைமாதவன் என்னும் சிலந்தியால் கஷ்டப்பட்டு சென்ற 12—4—33-ந்தேதி ஆப்ரேஷன் செய்திருக்கிறாரென்றும் இது சமயம் சிறிது சுகமாயிருப்பதாகவும் ஒரு நிருபர் எழுதுகிறார்.

திருத்துரைப்பூண்டியில் சுயமரியாதைப் பொதுக் கூட்டம்

சமதர்ம தோழர்கள் விஜயம்.

மன்னார்குடியிலிருந்து 12-1-33 புதன்கிழமை காலை 10மணிக்கு தோழர்கள் தருமலிங்கம், என். பி. காளியப்பன், ப. சீவானந்தம், ராம. சுப்பையா, ராம. பெரிச்சியப்பா, அ. பொன்னம்பலம் முதலியவர்கள் திருத்துரைப்பூண்டிக்கு விஜயம் செய்தார்கள். அவர்களை திருத்துரைப்பூண்டி சுயமரியாதைச் சங்கத்தார் நன்கு வரவேற்று உபசாரம் செய்தார்கள்.

மாலை பொதுக்கூட்டம்.

திருத்துரைப்பூண்டி கடைவீதிக் கருகாமையிலுள்ள முன்னியாற்றில் மாலை 5-30 மணிக்கு முத்துப்பேட்டை தோழர் தருமலிங்கம் அவர்கள் தலைமையில் ஒரு சுயமரியாதைப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்தும் பெண்களும், ஆண்களும், வாலிபர்களும், விவசாயிகளும், தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், மாணவர்களுமாக சுமார் 1000பேர்களுக்குமேலாகவே பெருந்திரளான மக்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர் அவர்கள் முன்னுரை கூறிய பின்னர் தோழர் திருச்சிவாசு அவர்கள் சமதர்மகீதங்கள் பாடியமர்ந்தார். அதன் பின்னர் நாகை தோழர் காளியப்பன், கோட்டையூர் தோழர் ப. சீவானந்தம், பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் 'சுயமரியாதை இயக்கம்'' ''சமதர்மம்'' ''பொதுவுடமை'' என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள்.

தலைவர்அவர்கள்உணர்ச்சி ததும்ப மிக்க ஆவேசத்துடன் தமது முடிவுரையைக் கூறியமர்ந்தார். தோழர் உத்திராபதி அவர்கள் நன்றி கூறினார். இரவு 8-30 மணிக்கு கூட்டம் முடிந்தது.

தோழர்கள் ராம. சுப்பையா, ராம. பெரிச்சியப்பா, ப. சீவானந்தம், அ. பொன்னம்பலம் ஆகியநால்வரும் 13-1-33 காலை திருத்துரைப்பூண்டியிலிருந்து அரந்தாங்கி மார்க்கமாக காரைக்குடி சென்றார்கள்.

சென்னையில் ஆர். கே. ஷண்முகத்திற்கு வரவேற்பு.

இந்திய சட்டசபை தலைவர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். அவர்கள் சென்னைக்கு வரும்போது சென்னை கார்ப்பரேஷனில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தோழர் முத்துசாமி வல்லத்தரசு புதுக்கோட்டை விஜயம்.

ஆடம்பர வரவேற்பு

நாகை மகாநாட்டிற்குப்பின் 13வ செவ்வாய்கிழமை தோழர் வல்லத்தரசு புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தார். அவர் சிறைப்படுத்தப்பட்டு நாடுகடத்தப்பட்ட பின் முதல் தடவையாக இப்பொழுது தான் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தார். அதுசமயம் தோழர்கள் அவரை குதூகலத்துடன் வரவேற்று உபசரித்தனர். அன்று மாலை ஒரு தேனீர் விருந்து நடந்தது. பிறகு ஒருபொதுக்கூட்டத்தில் முத்துசாமி வல்லத்தரசு பேசினார். இவரது வருகையால் புதுக்கோட்டை இளைஞர்களுக்கு ஒருபுத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

தோழர் வல்லத்தரசு அவர்களின் புதிய விலாசம்

இதுவரை சென்னையிலிருந்த கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல். அவர்கள் புதுக்கோட்டை செல்வதால் இனிமேல் அவருக்குக் கடிதம் எழுதும் தோழர்கள் கீழ்கண்டவிலாசத்திற்கெழுத விரும்புகிறோம்.

K. முத்துசாமி வல்லத்தரசு
B. A. B. L, M. L. C.
''சிவகாமு விலாஸ்''
புதிய அரண்மனை ஹைரோடு,
புதுக்கோட்டை

ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கம்.

கண்டனக்கூட்டம்.

சென்ற 14-4-33ந்-தேதி மாலை 6மணிக்கு ஷை சங்கக்கட்டிடத்தில் சங்கத்தலைவர் தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். சேலம் தோழர் ஆர். நடேசன் அவர்கள் நீடாமங்கலத்தில் சுயமரியாதைத்தோழர்களான கே. ராமையா, சொக்கலிங்கம் முதலானவர்களை போலீசார் அக்கிரமமாக அடித்து தண்டிக்கப்பட்டதைக் கண்டித்துப்பேசி கீழ்கண்டதீர்மானத்தைப் பிரரேபித்தார்.

1 (அ) சென்ற10-1-33ந்தேதிநீடாமங்கலத்தில் சுயமரியாதைத்தோழர்களான கே. ராமையா, சொக்கலிங்கம் ஆகியவர்களை போலீசார் அக்கிரமமாக அடித்து தப்பு கேஸ் தொடர்ந்து. 3நாள் தண்டிக்கச்செய்ததற்காக நீடாமங்கலம் போலீஸ் செய்கையைக் கண்டிக்கிறது.

(ஆ)இத்தீர்மானத்தைபோலீஸ்மெம்பர், ஜில்லாக்கலெக்டர், ஜில்லாசூப்பிரண்டெண்டு, கவர்னர் ஆகியவர்களுக்கு தெரிவிக்க சங்கத்தலைவருக்கு அதிகாரம் கொடுக்கிறது. இத்தீர்மானத்தை தோழர் ஈ. வெ. இராமசாமி, அ. இரத்தினசபாபதி ஆகிய இருவரும் முறையே ஆமோதித்தும், ஆதரித்தும் பேசினார்கள்.

ராமையாவுக்குப்பாராட்டு.

தலைவர் முடிவுரையில் போலீசார் செய்கையைக்கண்டித்துப்பேசி அடிபட்டு தண்டிக்கப்பட்ட தோழர் கே. ராமையா ஆகியவர்களை பாராட்டுவதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இரண்டு தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேறியது. இத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

(நமது நிருபர்)

மதப்பைத்தியம்.

கத்தோலிக்கர்கள் நடுக்கம்.

ஏப்ரல் மாதம் 9ந்தேதி ஞாயிறன்று சென்னைநகரில் கத்தோலிக்கர்கள் கூட்டம் ஒன்று பிரசன்டேஷன் கான்வென்டு பள்ளிக்கூடத்தில் ''கத்தோலிக்க லீடர்'' என்ற ஆங்கில பத்திரிகையின் ஆசிரியர்ரெவரெண்டு பாதிரி பி. தோமாஸ் தலைமையில் கூடியது. அதன் நோக்கம் சுயமரியாதை இயக்கம் என்ற பேரால் கத்தோலிக்க மதத்திற்கும், குருமார்களுக்கும், போதனைகளுக்கும், விரோதமாகச்செய்யும்அறியாமையானதும், விஷமத்தனமானதுமான பிரசாரத்தைக்குறித்து தங்களது வெறுப்பை தெரிவித்துக் கொள்வதற்கேயாகும்.

அக்கிராசனர், சுயமரியாதை இயக்கம் செய்து வரும் பல திறப்பட்ட பிரசாரங்களையும் அதனால் ஜனசமூகத்திற்கு உண்டாகும் கெடுதிகளைப்பற்றியும் குறிப்பாகஇந்த மாகாணத்தில் அவர்களுடைய மோசமான பிரசாரத்தினால் கத்தோலிக்க மதத்திற்கும், குருமார்களுக்கும் பெரிதும் ஆபத்தை விளைவித்து வருகிறார்கள். சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய ஆயுதமான ''குடி அரசு'' பத்திரிகையை மாகாணத்தில் தப்பு பிரசாரம் செய்து வருவதால் சென்னைகத்தோலிக்கர்கள் எல்லாம் ஷை இயக்கத்தை பரவ வொட்டாமல் தடைப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார். பின்னர் ஆனரரி பிரசிடெண்சி மாஜிஸ்திரேட். எஸ். செல்வராஜ் பி. ஏ, எல். டி, கீழ்கண்டதீர்மானத்தை பிரரேபித்தார்.

சுயமரியாதை கத்தோலிக்க மதத்திற்கும், போதனைகளுக்கும், ஒழுங்கான முறையோடு கூடிய சர்க்காருக்கும், பெருங்கெடுதியை விளைவிப்பனவாக இருப்பதால் சென்னை நகர கத்தோலிக்கர்களடங்கிய இக்கூட்டம் பலமாக கண்டிக்கிறது. சுயமரியாதை இயக்கத்தை தடைப்படுத்துவதற்காக, நகரின் பல பாகங்களிலுள்ள பாதிரிகளும், பக்தர்களும் அடங்கிய ஒருகமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. குடி அரசுபத்திரிகையை இந்த மாகாணத்திலுள்ள கத்தோலிக்கர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் இது சம்பந்தமாக வெளி ஜில்லாக்களிலும் தக்கது செய்யவேண்டுமென்றும் கத்தோலிக்கர்களை கேட்டுக்கொள்வதென்ற மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ''ஹிந்து''

பிழைப்புக்கு வழி.

(பாரதிதாஸன்.)

(கந்தா காருண்யனே—என்ற மெட்டு.)

தேவா ராதனைக்கே—தெய்வ
பூசனைக் கே (தே)

கோவில் கோபுரம் கட்டவே-மத-குருக்கள் வீட்டினிற் கொட்டவே
பாவம் போக்க என்றே—கைகள்
கூப்பி நின்றே (பா)

தாவியே பொருள் தேடியே-இதில்-தந்ததோ சத கோடியே
வீட்டுக் கோர்குருக்கள்—அதன்
மேற் கடவுள் (வீ)

நாட்டுக் கோயிலிற் பஞ்சமோ-இதில்-நடந்த செலவுகள் கொஞ்சமோ
மூட்டை முடி சுமந்தே—நதி
மலை கடந்தே (மூ)

தேட்டம் ஒழித்ததிற் கணக்கில்லை-செய்த-தீர்த்த யாத்திரைக்
கேதெல்லை?
பக்தி மேவலினால்—முத்தி
ஆவலினால் (ப)

இத்தனை நாள் இத்தனை-பேர்-இத்தனை பொருள் போக்கியும்
செத்தால் புதைப்பதற்கே—இங்குச்
செலவுக் கில்லை (செ)

பித்தச் செலவுகள் நீக்குவோம்-நம்-பிழைப்புக்கே அதை ஆக்குவோம்

சுயமரியாதைச்சங்கம் கொளும்பு.

விசேஷப்பொதுக்கூட்டம்.

ஷை சங்கத்தின் ஆதரவின் கீழ் 5-4-33ல் ஓர்விசேஷப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏற்கனவே தலைமை வகிக்க வாக்குறுதி செய்திருந்த தோழர் பி. ஜேசுதாசன் பி.ஏ. அவர்கள் மழையின் அசந்தர்ப்பத்தால் வரக்கூடாமற்போன தன்நிமித்தம், தோழர் என். எஸ். எம். ஆறுமுகம் அவர்கள் தலைமை வகித்தார்கள். முகவுரையில் சுயமரியாதை இயக்கத்தின்லட்சியங்களும், இதுவரை செய்துவந்த வேலைகளையும், இனிமேல் செய்யப்புகும் வேலைத்திட்டங்களையும், தோழர் அ. இராகவன் அவர்கள செய்துவரும் அரிய சேவையும் சுருக்கமாக எடுத்துரைத்தார்கள். அதன்பின், தோழர் ராகவன் "சுயமரியாதையும், மக்கள்கடமையும்" என்பது பற்றி தெளிவாகக்கூறி, "சுயமரியாதை இயக்கத்தாருக்கும், கடவுளுருக்கும் உள்ள சம்மந்தத்தை" மிகவும் எளிய நடையில் யாவரும் உணரும் வண்ணம் பிரசங்கித்தார். பின்னர் அக்கிராசனர் முடிவுரை முடிந்ததும், சங்கக் கௌரவ காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டுகூட்டம் இரவு 12மணிக்கு இனிது கலைந்தது. மழை தூற்றிக்கொண்டிருந்தும் கூட்டத்திற்கு போதிய தோழர்கள் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

(நமது ஒரு நிருபர்)

பெருந்துறை ஐக்கிய தொழிலாளர் சங்கத் திறப்புவிழா.

பெருந்துறை கிராம சீரமைப்பு நிலயத்தின் ஆதரவில் ஐக்கிய தொழிலாளர்சங்கத்தாருக்குஏற்பட்ட முதியோர் கல்விச்சாலையின் திறப்புவிழாவை ஈரோடு எச். ஏ. பாப்லி அவர்கள் நடத்தி வைத்தார். ஈரோடு டிப்டிகலெக்டர் தோழர். துரைராஜ் அவர்கள் தலைமை வகித்தார்.

[ஒரு நிருபர்]

சுயமரியாதை இளைஞர் மன்றம் சென்னை.

ஷை மன்றத்தின் வாராந்திரக்கூட்டம் 9-4-33 ஞாயிற்றுக்கிழமைபகல் 2மணிக்கு, மன்றத்தின் காரியாலயத்தில் தோழர் ஜி. பொன்னுரங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் பி. எஸ். சம்பந்தம், கெ. கெங்காதரன், நி. தங்கராஜ், எஸ். பிரகாசம், டி. சச்சிதானந்தம், டி. சம்பந்தம், கே. கிருஷ்ணசாமி, பி. ராதாகிருஷ்ணன் முதலியோர் 'இந்தியாவும், அடிமைத்தன்மையும்" என்பது பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள்,

[ஒரு நிருபர்]

ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கம்.

ஷை சங்கத்தின் வாராந்திரக்கூட்டம் 9-4-33ந்தேதி மாலை 6மணிக்கு தோழர் என். கரிவரதசாமி அவர்கள் தலைமையில் சங்க ஹாலில் நடைபெற்றது. சங்க அங்கத்தினர்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தார்கள். "சுயமரியாதை இயக்கமும், வாலிபர்கடமையும்" என்பது பற்றி தோழர்கள் ஆர். அன்னபூரணி சென்டிரல் பிரஸ் சொந்தக்காரர் ரத்தினசாமி, அஜீஸ், ஈஸ்வரன் ஆகியவர்கள் பேசினார்கள்.

பின் தலைவர் முடிவுரையுடன் காரியதரிசி தோழர் எச். பாஷா அவர்கள்வந்தனோபசாரம்கூறப்பட்டு இரவு 8மணிக்குக் கூட்டம் கலைந்தது.

(நமது ஒரு நிருபர்)

சேலம்.

பஞ்சாயத்து போர்டுக்கு கடத்தூர் தோழர் பெ. பா. வெங்கடசாமி செட்டியார் அவர்கள் ஏகமனதுடன் பிரசிடெண்டாக தெரிந்தெடுக்கப்பட்டார் (ஒரு நிருபர்)

மதிப்புரைகள்.

"காந்தி மலர்"

"காந்திமலர்" என்னும் ஆண்டு மலர் சென்னை காந்தி ஆபீசாரால் வெளிப்படுத்தப்பட்டது ஒன்றுநமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதில் அரசியல், விஞ்ஞானம், சோவியத் சேதி, வேடிக்கை பொம்மைகள், சில பிரமுகர்கள் ஜீவிய சரித்திரம் முதலிய கட்டுரைகள் பல அறிஞர்களால் எழுதப்பட்டவைகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

விலை அணா 2.

விலாசம்:—

காந்தி ஆபீஸ், சென்னை.

"தசகன்னியர் சரிதம்"

தசகன்னியர் சரிதம் என்னும் ஒரு சிறு நாடகநூல் தமிழ் வித்வான் தோழர். கே. ஜே. வேதமுத்து அவர்களால் இயற்றப் பெற்று நமதுபார்வைக்கு அனுப்பப்பட்டது. அது கிறிஸ்துவ வேதம் புதிய ஏற்பாட்டில் ஏசு கிறிஸ்துவால் எடுத்துக் காட்டப் பட்ட ஒரு உவமை என்பதை ஆதாரமாய்க்கொண்டு இயற்றப்பட்ட நாடகமாகும் இதன் கருத்து முயற்சி உடையோர் இகழ்ச்சியடையார் என்பதாகும். நல்ல வசனங்களும். நல்லவர்ண மெட்டு பாட்டுகளும் கொண்டு சிறுவர் சிறுமியர் நடிக்கத் தகுந்த சிறு நாடகம்.

விலை. அணா $2\frac{1}{2}$

K. J. வேதமுத்து.

லண்டன் மிஷின். போதனா முறை பாடசாலை தமிழ்ப்பண்டிதர்.

ஈரோடு.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

வைத்தவன் தண்ணீர் ஊற்றுகிறான்! இட்டமுடன் என் தலைமையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனும் செத்துவிட்டானோ? என்று பிரசங்கத்தைத் தொடங்குவேன். "தயவு செய்து இந்தமாதிரி போதனை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டாம்" என்று ஏஜண்ட் மன்றாடிவிட்டுப் போய்ச் சேர்வார்.

கடவுளின் மற்றொரு பெரிய உபயோகம் என்னவென்றால், அவருடைய பெயரால் பொய்யையும் மெய்யாக்கி விடலா மென்பதே. முக்கியமாக, கோர்ட்டுகளில் பொய்சாட்சி சொல்வோருக்கு பகவானுடைய திருநாமம் இன்றியமையாத சாதனமாயிருக்கிறது. உண்மையில் கடவுள் பேரால்லன்றித் தற்காலக் கோர்ட்டுகளில் பொய்யே சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் அது சாக்ஷியாக ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

"ஆனந்தவிகடன்"

கொளும்புக்கு ஏஜண்டு தேவை.

நமது பத்திரிகை விற்பதற்கு செல்வாக்குள்ள ஏஜண்டு தேவை. விபரத்திற்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

மாதப்பூர் கிராம பஞ்சாயத்து கோர்ட்டு.

விபாஜ்பம் நெ. 1/33.

வாதி:—பாப்பபோயன்.

பிரதிவாதிகள்:—பல்லடம் தாலூகா மாதப்பூரிலிருக்கும் சின்னபோயன் என்றழைக்கும் கருப்பபோயன் 1, ஷையூர் ரங்கபோயன் மகன் கருப்பபோயன் 2.

ஷை நெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் தொடரப்பட்ட விபாஜ்யமானது 28—4—33உ போடப்பட்டிருக்கிறது. ஷைதேதியில் காலை 10 மணிக்கு பிரதிவாதிகள் ஆஜராகத்தவரினால் ஒரு தலைப்பக்ஷமாய் தீர்ப்பு செய்யப்படும்.

கோவிந்தசாமி கௌண்டர்,
பஞ்சாயத்து கோர்ட்டு
பிரசிடெண்டு, மாதப்பூர்.

சுயமரியாதை தத்துவ கீதங்கள்.

கடம்பக்குளம் தோழர் நாராயணன் பாடியது. நல்ல கௌரவமான பாட்டுகள், பாரதியார் மெட்டுகள். தோழர் ஈ. வெ. ராமசாமி படத்துடன் கூடியது. நல்ல காகிதம், நல்ல அச்சு,எளிய நடை விலை அணா. 0—4—0.

விலாசம்:—

குடி அரசு புத்தகாலயம்,ஈரோடு.

சுகானந்த பானச்சூரணம்.

தெக்ஷணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலையில் தயார் செய்யும் சுகானந்த பானச்சூரணம் காபி பானத்திற்குப் பதிலாகத் தயார் செய்தது. அநேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ளது. காபியின் மணம் கலந்துளது. இரத்த சுத்தி, ஞாபகசக்தி, வேலையில் சுறுசுறுப்பு முதலியவைதரவல்லது.

காபிபானத்திற்குப்பதிலாக அநேகர் வேண்டுதலின் பேரில் தயாரிக்கப்பெற்ற இச்சூரணம் காப்பித்தூளைப்போல் கொதி தண்ணீரில் போட்டு கஷாயமெடுத்து பாலுடன் கலந்தாவது அல்லது தனிப்பாலை காயவைத்து அதில் ஒரு தேக்கரண்டி அளவு சூரணம் போட்டு சர்க்கரை கூட்டிக்கலந்து பருகிவரின் வெட்டைச்சூடு, நீரழிவு, நீர்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம் பலஹீனம் முதலான அநேக வியாதிகளைக்கண்டிக்கும்.

காபி, டீ, கொக்கோ முதலான பானத்திற்குப் பதிலாக எமது "சுகானந்த பானச்சூரணம்" ஒன்றே பொருத்தமாயுளது. காலை மாலை இரண்டு நேரங்களிலும் மற்றும் தேவையான நேரங்களிலும் உபயோகிக்கலாம். இன்றே ஒரு டப்பி வாங்கி உபயோகித்து உண்மையையுணருங்கள்.

விலை டப்பா 1க்கு 0—6—0.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. ஏஜண்டுகள் முன்பணம் டிபாசிட் கட்டவேண்டும். வி. பி. சார்ஜ் வேறு. மலாய் நாட்டு ஆர்டர்கட்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

எமது வைத்தியசாலையில் எல்லா வியாதிகளுக்கும் எந்த நேரத்திலும் மருந்துகள் கிடைக்கும். இங்ஙனம்,

நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)
தெக்ஷிணாமூர்த்தி தமிழ்வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், ராமநாதபுரம் ஜில்லா.

அனுப்புபாளையத்தில் தோழர் ஈ. வெ. இராமசாமியின் சொற்பொழிவு.

:)o(:

"தொழிலாளர் நிலைமை."

(2—4—33 தேதியின் தொடர்ச்சி)

நமது கவனத்தை அரசாங்கத்தாரும் வேறு ஏதாவது ஒரு வழியைக்காட்டித் திருப்பி விடுவார்கள். ஆனால் உண்மையில் முதலாளிகளின் ஆதிக்கத்திற்கும், அன்புக்கும் விரோதமில்லாமலே தான் அரசாங்கத்தார் நடந்துகொள்ளுவார்கள். அப்படிக்கில்லாவிட்டால் அரசனுக்கும், அவனுடைய சிம்பந்திகளுக்கும் உலைவைக்க உடனே முதலாளி வர்க்கம் வேலை செய்ய ஆரம்பித்துவிடும். உண்மையில் தொழிலாளிகளுக்கு தீங்கு இழைத்துக்கொண்டிருப்பது முதலாளி வர்க்கம்தான்என்பதை மக்கள் அறியமுடியாமல் பலதேச பக்தர்கள் என்பவர்கள் முதலாளிகளிடம் கூலி பெற்றுக்கொண்டு நம்மை சர்க்கார் பக்கம் திருப்பிவிட்டு விடுகிறார்கள். இப்போதும் இந்நாட்டில் உள்ள கஷ்டத்திற்கு காரணம் சர்க்கார் என்று தான் நீங்கள் கருதுகிறீர்களே தவிர முதலாளிகள் என்று நீங்கள் கருதுவதில்லை. சர்க்காரால் தொழிலாளிக்கு அதிக நஷ்டமில்லை.

இத்தேசத்திற்கு வெளிநாட்டு சர்க்கார் வருமுன் தொழிலாளிகள் எல்லாரும் எந்தவிதமான தொழில் செய்பவராக இருந்தாலும் அவர்களது சோற்றுக்கு மட்டும் கணக்குப்பார்த்து கூலி கொடுக்கப்பட்டு வந்தது. மாதம் மாதம் சாப்பாடுமட்டும்தான் போட்டு தினம்24 மணியில் 20மணி நேரம் வரை மாடுகளைப்போல் வேலை வாங்கி வந்தார்கள். அதிலும் இந்திய சுதேச அரசர்கள் அரசாண்ட காலத்தில் மக்களை ஆடுமாடுகளைப் போல பட்டியிலடைத்து வைத்துத் தான் வற்புறுத்திவேலை வாங்கினார்கள். அதற்கு முன் அரசாண்ட இராமன், கிருஷ்ணன் என்பவர்களின் காலத்திலோ தொழிலாளர்களின் நிலைமையைக்கேட்கவேண்டியதில்லை. மனுதர்ம முறை தவறாமல்தான் வேலை வாங்கி இருப்பார்கள் என்பதில் என்ன சந்தேகம். காளிக்கும், கருப்பனுக்கும் மனிதர்களைப்பலிகொடுப்பார்கள். அக்காலத்திலும் தொழிலாளர்கள் நிலை மிக மோசமாகவேதான் இருந்துவந்ததற்கு ஆதாரமுண்டு. அன்னியர் அரசு வேண்டாமென்றால் அதை விடக்கொடுமையான அரசு வருணாச்சிரம அரசு என்பது. ஆகவே அது சுதேசி அரசானாலும், காந்தி அரசானாலும், நமக்கு வேண்டியதில்லை. எந்த அரசாங்கம் இந்நாட்டில் ஏற்பட்டாலும் மேல் கீழ் ஜாதி முதலாளி, தொழிலாளி பிரிவு ஆகிய வேற்றுமை நிலை ஒழிக்கப்படும்வரை நாம்முட்டிக்கொள்ளவேண்டியது தான். உயிரையும் விடும்படியான கிளர்ச்சி செய்ய வேண்டியதுதான். மேனாடுகளில் அன்னிய அரசு, ராஜா அரசு, ஆகியவை இல்லாத சுதேச அரசு, குடி அரசு நாடுகள் பல இருக்கின்றன. ஆயினும் அவைபேருக்குத் தான் ஜனங்கள் ஆட்சி என்பது தவிர அரசாட்சி செலுத்துவது ஆதிக்கம் வகிப்பது எல்லாம் பணக்காரக்கூட்டம் தான். அங்கு இன்று லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான தொழிலாளிகள் பட்டினிதான் கிடந்து வாடுகிறார்கள். உலகத்தில் குபேரநாடு என்று சொல்லப்படும் அமெரிக்காவின் யோக்கியதைப் பற்றி வெளியில் சொல்லவேண்டியதில்லை. அங்குதான் வேலையில்லாத்திண்டாட்டம் இன்னும் அதிகமாக இருக்கிறது. 1½ மக்களுக்கு வேலையில்லை, பட்டினி தான் இருக்கிறது. அங்கு வேறு நாட்டான் வந்து அரசாளவில்லை. ஒரு அரசன் இருந்து அரசாளவில்லை. உள்ளூர்க்காரன்—சொந்தக்காரன்-குடிகள்தான் அரசாளுகிறான். அப்படியிருந்தும் தொழிலாளியின் நிலையானது ஏன் இவ்வளவு கேவலமாக வந்திருக்கிறது என்பதை கவனித்தால் காரணம் விளங்காமல் போகாது. இந்தியாவில்தான் "வெள்ளைக்காரன் அரசாளுகிறான் இதனால் வேலை இல்லை கஷ்டம், பஞ்சம்," என்று குறை கூறப்படுகிறது. அவசர சட்டங்கள், அடக்கு முறைகள் என்று அலறப்படுகிறது. ஆனாலும் ஆங்கில அரசாட்சியிலும் அல்லது இனி வரப்போகும் காந்தி அரசாட்சியிலும், இங்குள்ள தொழிலாளிகளுக்கு என்ன பயன்ஏற்படும் கருப்பன்அரசாண்டால்இன்னும் ஒரு50 சங்கராச்சாரியும் ஊருக்கு 10 மடமும் 20 கோவிலும் ஏற்பட்டு இன்றும் மக்களை கொள்ளையடிக்கப்பட்டு மக்களை ஒன்றுபடவிடாமல் சாதிக்கு சாதி சட்டம்போட்டு நசுக்குவதைத்தவிர வேறு என்ன வழிபிறக்கும்? என்பது இதுவரை சுயராஜ்யம் கேட்கும் தேசியவாதிகள், தேசபக்தர்கள் மகாத்மாக்கள் சொல்வதிலிருந்தும், எழுதுவதிலிருந்தும் தெரியவில்லையா? ஆங்கில ஆட்சியிலேனும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதாக ஏதோ 100-க்கு 4, 2 அனுகூலங்கள் ஏற்பாடு செய்ததாக, செய்வதாக சொல்லப்படுகிறது. கொள்ளை, திருட்டு, ஜாதிமுறை இவைகள் தடுக்கப்படுவதற்கு கடுமையான சட்டங்கள் கையாளப்படுகிறது துவேஷமிருக்கக்கூடாதுஎன்று சொல்லிக்கொள்ளப்படுகிறது.

ஆயினும் இப்போதுதான் சங்கராச்சாரி இங்கு தங்கப்பல்லாக்கு போட்டு மனிதன்மேல் சவாரி செய்கிறான். பார்ப்பானே பகற்கொள்ளையடிப்பதுபோன்று அவனுக்குத் துணையாக வருகிறான். பாதிரிகளோ மக்கள் அறிவைக்கெடுத்து மோட்சத்திற்கு அனுப்ப உபதேசிக்கின்றனர். முல்லாக்கள், புரோகிதர்கள் என்பவர்களின் கொடுமையிலிருந்து மக்களை மீட்க வழியைக் காணோம். காட்டுமிராண்டிதனமாகவே எல்லா மதக்காரர்களாலும் உற்சவம் பண்டிகைகள் கொண்டாடப்பட்டும் நரபலிகூட கொடுப்பதும் சரி என்று மக்கள் மனதில் பதிந்திருக்கும் எண்ணத்தையும் மாற்றும் முறையில் எதுவும் கவலை எடுத்துக் கொள்ளக்காணோம்.

ஆனால் சுயராஜ்யம் என்றும் மதம் என்றும்அதுவும்மதஒழுக்கம்வருணாச்சிரமம், தவராமல் சுயராஜ்யம் வேண்டும் என்றும் கேட்கின்றார்கள் அவர்களது கோரிக்கைப்படி சுயராஜ்யம் வந்துவிட்டால் அதில் தொழிலாளர்கள் நிலைமை தீண்டப்படாதார் நிலைமை, தாழ்த்தப்பட்ட பார்ப்பனரல்லாதார் நிலைமை என்ன ஆகும் என்று சொல்லவும் வேண்டுமோ?

எந்த ராஜாஎந்ததேசத்திலானாலும் இந்தியாவிலானாலும் ஆண்டாலும் இங்கு பாடுபடுபவன் நாளெல்லாம் பாடுபட்டு மடியவும் சோம்பேறி இருந்து தின்கவும்தான் இருக்கிறதே ஒழிய வேறு வழி என்னவென்று கேட்டால் உடனே பதில் சொல்லாது மழுப்பிவிட்டு எல்லாம் சுயராஜ்ஜியம் வந்தால் சரியாகப்போய் விடும் என்பான். சுயராஜ்யத்தில் எப்படி சரியாகப்போய்விடும் என்று கேட்டால் அரசாங்கம் செய்வது தான் தப்பு இந்நாட்டில் அன்னிய அரசாங்கம் இருப்பதுதான் இத்தனைக்கும் காரணம் என்று அரசாங்கத்தை ஒழிக்க வரும்படிதூண்டுவான். ஆனால் அரசாங்கத்தை எதிர்க்கும்படி காட்டிவிட்டு அவன் மட்டும் ஜட்ஜியாகவோ, வக்கீலாகவோ மாதம் 4000, 5000 சம்பளம் வாங்கிக்கொண்டு தன் பிள்ளை குட்டிபங்துக்களுக்கும் அரசாங்கத்திலே அதிகாரம் வாங்கிக் கொடுத்து தைரியம் ஏற்படுத்திக் கொள்வான் அன்னிய பாஷைவிரோதம் அடிமைப்புத்தியை வளர்க்கும் என்றும் இனி பள்ளிக்கூடங்களுக்கு செல்லாதீர்கள் என்றும் உங்களுக்கு உபதேசம் செய்ய ஆரம்பிப்பார்கள். ஆனால் தமது குழந்தைகளை மட்டும் எம். ஏ., பி. ஏ., படிக்கவைத்து மேல் படிப்புக்குச் சீமைக்கு அனுப்பி அங்கிருந்தே உத்தியோகத்தோடு வந்துசேர வழிசெய்து கொள்வான். தொழிலாளியின் மக்கள் அவன் சொல்வதையே சரி என நம்பி நாளெல்லாம் பாடுபட்டு முட்டாள்களாக, முதுகெலும்பு ஒடிய வேலை செய்து மீதமிருக்கும் 2, 1 ரூபாயும் சங்கராச்சாரிக்கும், மாரியம்மனுக்கும் கொட்டிவிட்டு மோட்சத்திற்கு போக வழி கேட்கார்கள். தனது செல்வாக்கு இன்றும் ஆயிரக்கணக்கான வருடங்களாக இருப்பதற்கும் தனது சூழ்ச்சிகள் மறைக்கப்படுவதற்கும் தொழிலாளர்களின் விழிப்பை மடக்கிவிடுவதற்கும்தான் முதலாளி அன்னிய அரசாங்கத்தை சுட்டிக் காட்டுகிறான். முதலாளிகளின் கூலிகளின் தான் சுயராஜியம் பேசுகிறவர்கள். தொழிலாளித்துவம் இங்கு நிலைத்திருப்பதற்குக் காரணம் இது தான் என்று அவனுக்கு நன்றாகத்தெரியும்.

வெளிநாட்டிலிருந்து துணி வந்து இந்தியாவில் விற்றாலும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்து வெளிநாட்டில் விற்றாலும் லாபம் யாருக்கு கொள்ளை லாபம் சம்பாதிப்பது முதலாளிக் கூட்டம்தானே. தொழிலாளி அவன் தேவைக்குத் தகுந்ததைச் செய்து கொடுக்கவேண்டியது அன்றி இவன் அடையும் ஊதியம் ஏதாவது உண்டா? மத்திலிருக்கும் தரகனுக்கு கிடைக்கும் லாபம்கூட தொழிலாளி-உற்பத்தி செய்கிறவன்-நெசவுக்காரன் ஆகியவனுக்குக் கிடைப்பது இல்லை.

(தொடரும்)

'புரட்சி ஓங்குக!, பொது உடைமை-தோணுக!!"

கோவையில் கதர் கண்காக்ஷி.

கோயமுத்தூரில் கதர் கண்காக்ஷி 12-4-33ந் தேதியிலிருந்து 20-4-33ந் தேதிவரை கோவை டவுன் ஹாலில் நடைபெறு மென்றும், ஷை கண்காக்ஷியை தோழர் டாக்டர் சுப்பராயன் 12-4-33ல் திறந்துவைப்பாரென்றும் கண் காக்ஷி தலைவர் தோழர். சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார். தெரிவிக்கிறார்.

மரணம்.

செங்குந்த குலாபிமானியும், திருவோத்தூர் தோழர் ம. தி. பாநுகவி சுவாமிகளின் பிரதமமாணவரும் திருநாவுக்கரசு மலாய் டிரஸ்டியும் மடத்து ஸ்ரீபாநுகவி மாணவர் கழகத்தலைவரும் ஸ்ரீபாநுகவி தமிழ்க்கல்லூரி உபதலைவருமாயிருந்த தோழர் ஏ. கணபதி முதலியார் அவர்கள் 19-2-33தேதியன்று காலை திடீரெனஉண்டான மாரடைப்பினல் மரணமடைந்தார். (ஒரு நிருபர்)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது கொள்கை, இன்னு செய்தார்க்கு நன்னயம்புரிதலே எமது கடமை. கொடுமைகளை யொழிப்பதிலேதான் எம் கருத்திருக்கும், குறைபாடுகளை யொழிப்பதே எம் போராட்டம். ஆண்களுடனும், பெண்களுடனும் நட்புக்கொள்ளுகிறோம். அமைதியை நாட்டும் நூதன புரட்சிக்கொடியை உயர்த்தமாட்டான் எனினும் தீமையைத்தடுக்க முயற்சிக்காது போவானுகில் அவன் தன் கொள்கைக்கு மாறுக நடந்தவனுவான். இனி நாம் தாமதிக்கமுடியாது. நாங்கள் கொடியைப் பறக்கவிடுகிறோம் இப்பணியில் எங்கள் ஆற்றலுள்ளவரை அக்கொடியை நாங்கள் தாழ்த்தமாட்டோம். நாங்கள் சமரசத்திற்கிணங்கோம், எங்கள் கோரிக்கை வீண்போகாது''

பழமையை யொழிக்க சுயமரியாதைக்காரர்கள் புரட்சியை வரவேற்கின்றனர். எனினும், தாம் அடையும் பயன் பலாத்காரமற்ற முறையை அடிப்படையாகக்கொண்ட சமாதானமுறைகளைக் கொண்டே எய்தவேண்டுமென அவர்கள் விரும்பி வற்புறுத்துகிறார்கள். ''பலவகை வகுப்பினரும், மதத்தினரும், அரசியல் போக்குடையவர்களும், இயற்கைக் கட்டுதிட்டங்களு முடைய பரந்த நாடாகிய இந்தியாவிலே தனிப்பட்ட அரசியல் துறையில் ஒரு பலாத்காரமான புரட்சியைக்கிளப்பும் முறையில் எத்தகைய நலனும் விளையாது. இங்ஙனம் செய்வது முட்டாள்தனமாகும்'' ''சமூதாய நேர்மை'' என்னும் தன் நூலில் அமெரிக்க சமுதாய வாதியான ஆசிரியர் ஸ்காட்நியரிங் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்:- ஒரு பெரிய வகுப்பினருள் சமூக சூழல்களை நீக்க பொதுஜன அபிப்பிராயத்தை கையாண்டு சட்டம் அமைப்பது சரி. பல வகுப்பார்களடங்கிய ஒரு பெரிய சமூகத்தில் பொதுஜன அபிப்பிராயம் சிறிதளவு கஷ்டத்தை நிவர்த்திக்க உதவலாம். ஆனால் நிரந்திரமாக விடுதலை ஏற்படவேண்டுமானுல் பொதுஜன அபிப்பிராயத்தை நிராகரித்தும்கூட சட்டம் செய்யவேண்டியதுதான் உசிதம். நீதிபெருவதற்கான சட்டபூர்வமான இம்முறையைச் சுயமரியாதைக்காரர்கள் வெகுவாக வரவேற்கிறார்கள். என்னும், இது ஒரு பரீக்ஷார்த்த முறைதான். இது ஜெயம் பெற்றுத்தானுக வேண்டும், இல்லாவிட்டால் வேறு வழியில்லை. நாட்டிலே கோரமான குழப்பநிலை ஏற்படக்கூடாதென்பதே சுயமரியாதைக்காரர்களின்போக்கு. இந்நிலை வாராது தடுத்துவிடலாம். தற்போதைய உணர்ச்சிக்கு விட்டுக்கொடுக்கும் உணர்ச்சியும், நல்லெண்ணமும் தான் தேவை. இந்த உண்மையை காங்கிரசும், மதங்களும், அரசும் உணரவில்லை. இதை யுணர்ந்ததின் பயனுகவே சுயமரியாதைக்காரர்கள் யேற்கூறியகொள்கையை வகுத்திருக்கிறார்கள். ''மதத்தினரும் காங்கிரசும் எய்த முடியாத இன்பத்தையும், விடுதலையையும் நாட்டின் பொருட்டு சுயமரியாதை இயக்கம்பெறும்'' என தோழர் எம். ஆர். ஜெயகர் ஈரோட்டில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டுத்தலைமையுரையில் கூறியுள்ள நம்பிக்கைகளை ஈடேற்ற முயற்சிப்பது ஒவ்வொரு சுயமரியாதைக்காரரின் கடமையாகும்.

சமதர்மக்கக்ஷி.

தற்கால நிலமைக்கேற்ற முறையில், சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை விருத்திசெய்துகொள்ளவும், சங்கத்தின் பிற்கால வேலைக்கானதோர் தக்க திட்டம் வகுக்கவும் சுயமரியாதை இயக்கத்தொண்டர்களைக் கலந்து முடிவுகட்டவேண்டி ஈரோட்டில் சென்ற வருஷம் டிசம்பர்மாதம் 28,29ம்தேதிகளில்தொண்டர்கள் மகாநாடொன்று நடைபெற்றது. கீழ்கண்டமுறையில் சங்கத்தின் அரசியல் திட்டத்தை நடத்துவிக்க வேண்டி, சுயமரியாதை இயக்கத்தின் ஒரு பகுதியாக சமதர்மக்கட்சி என்னும் பெரிய கட்சியொன்றை நிருவ வேண்டுமென தோழர். எம். சிங்காரவேலு பி. ஏ., பி. எல்., ஒரு பிரரேபணையை மகாநாட்டின்முன் சமர்ப்பித்தார்.

1. கொள்ளையும், கொடுமையுமுள்ள முதலாளி ஆதிக்கத்திலிருந்து நாட்டையும், பொது ஜனங்களையும் விடுவித்தல்.

2. தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தச்செத்துக்களிருக்கக்கூடாது எல்லாச் சொத்துகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் சர்க்காரே சொந்தக்காரர்களாயிருக்க வேண்டும்.

3. சர்க்காரின் ஆதிக்கத்திலும், மேற்பார்வையிலும் இந்தியத் தொழிலாளரைக் கொண்டு இந்தியக் கைத்தொழில்களுக்கு ஆதரவளித்து தீவிரமானதோர் கைத்தொழில் திட்டத்தை நடத்துவிக்க வேண்டும்.

4. தொழிலாளிக்கும் விவசாயிக்கும் வேலைநேரங்களைக்குறைத்து, லாபத்தில் பங்குபெறச்செய்து ஏற்றவிடுதி வசதிகள் அமைத்துக்கொடுத்து அவர்கள் வாழ்க்கை நிலையை மேம் பாடுறச்செய்யவேண்டும்.

5. அநாதைகளையும், பலவீனர்களையும்அவர்களை யொத்தவர்களையும் சர்க்கார் காப்பாற்றவேண்டும்.

6. மேற்கூறிய முறைகளில் சித்தியுற வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படவேண்டும்; சட்டசபைகளையும், பிரதிநிதித்வ பொதுஸ்தாபனங்களையும் தேர்தல்மூலம் கைப்பற்றவேண்டும்.

7. எல்லா ஸ்தாபனங்களையும் பொதுஜன நலத்திற்குரியதாக்கி மதத்தையும், முதலாளித்வத்தையும் சட்டபூர்வமாக ஒழிக்க வேண்டும்.

இதுபற்றி எல்லா சுயமரியாதைக்காரர்களும் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் சாதகபாதகங்களையும் இந்த ஆலோசனையை எவ்வளவுதூரம் அமுல் நடத்தக்கூடுமென்பது பற்றியும், அதனால் நலன் விளையுமா தீமைவிளையுமா என்பது பற்றியும் நீங்களனைவரும் ஆராய்ச்சி செய்திருப்பீர்களெனக் கருதுகிறேன். எனினும் இப்பணிக்குப் பெரும் மூலதனமும், அமைப்பும் தன்னல மற்றத்தொண்டர்கள் குழாமும், இவையனைத்தினும் முக்கியமான தியாக மனோ உறுதியும், திறமையுமுள்ள வழிகாட்டியும் தேவை. இந்த ஆலோசனை தொகுவாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, சமீபத்தில் நடைபெறப்போகும் அடுத்த மாகாண சுயமரியாதை மகாநாட்டில் தெளிவான தீவிர அரசியல் நீதியொன்று வகுக்கப்படுமென நேர்மையுடன் எதிர்பார்க்கலாம்.

தனித்தனியாக இந்த ஆலோசனையை ஆராய்ந்துபார்த்தால் மிகவும் உபயோகப்படக்கூடியதாகவும், சந்தர்ப்பத்திற்கேற்றதும், நல்லெண்ணத்துடனமைந்ததாகவும் தெரிகிறது. ஆனால் அத்திட்டத்தை நிறைவேற்றத் தொகுக்கப்பட்டுள்ள முறைகளை அமுல் நடத்துவது இயலாததாகவே தோன்றுகிறது. முதலாளிக்கும், ஏதேச்சாதிகாரிக்கும் மதமே போராதரவளிக்கிறது. மதமும், குருக்களும்ஒழிந்த அதே நிமிஷம்கொள்ளையும் கொடுமையும் ஒழிகின்றன. முதலாளித்வம் ஒழிந்தால், ஏதேச்சாதிகாரம் தனித்தியங்க இயலுமா? முதலாளித்வத்தை ஒழித்தால் மதத்திற்குமேலும் பெரும் மோசம் வரும் பிரிட்டிஷ் ஏதேச்சாதிகாரி முதலாளித்வத்தை யொழிக்க முற்படுவார்களென எதிர்பார்க்க முடியாது. மதத்தை முழுதும்காப்பாற்றினாலல்லது பிரிட்டிஷ் ஆதிக்கம் நடைபெறமுடியாது. இந்தியத் தொழிலாளர்களைக்கொண்டு சர்க்கார் இந்தியக்கைத்தொழில்களை முழுதும் விருத்திசெய்து, இந்திய மக்களனைவரும் ஒரே ஏதேச்சை நாட்டுமக்களாக ஒன்றுபட்டால் இந்தியாவில் பிரிட்டிஷ் சாமான்கள் விற்பனையின்றி போவது மட்டுமன்றி, தாமாகவே ஆங்கிலேயர் இந்தியாவை விட்டுப்போய் விடுவார்கள். அந்த நிலையேற்படும்வரை காலம் கஷ்டமாகத்தான் இருக்கும். தற்போதுள்ள நிலையைக்குறித்தும், தமக்கு வரவிருக்கும் தொல்லைகளைக்குறித்தும், குருக்களும், ஏதேச்சாதிகாரிகளும் முதலாளிகளும் நன்குணர்திருக்கிறார்கள். தம் சக்திகளையெல்லாம் திரட்டுகிறார்கள். தம் உன்னதப்பதவியைத்தாக்கத்தக்கது, எது வாயினும் அதை முளையிலேயே கிள்ளிஎறியத்தயாராகவிருக்கின்றனர். தம் சௌகரியங்களிலும், சாதனங்களிலும் ஒரு சிறிதும் அவர்கள் விட்டுக்கொடுக்கத்தயாராயில்லை.

தோழர்களே! நீங்கள் இங்கே பயிர்ச்சிபெறும்பொருட்டுவரவில்லை, நீங்கள் கொள்ளையாடப்படமாட்டீர்கள். இனி ஏற்படப்போகும் சமதர்மகட்சியைக்குறித்துதீர்க்கமாகஎத்தகைய அபிப்பிராயத்தையும் நான் கூறப்போவதில்லை. ஆனால், இது மட்டும் நான் உங்களுக்கு உறுதி கூறுவேன். நம் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டத்தைத்தவிர வேறு எத்தகைய திட்டமும் இத்துணை உன்னதமானதாகவும், நடைமுறைக்கேற்றதாகவும் பலாத்காரமின்றி, சமாதானமுறை அடிப்படையாகக்கொண்டு சட்ட பூர்வகமான முறையில் வகுக்கமுடியாது. இந்தத்திட்டம் பரிக்ஷாகாலம் மிகவும் கஷ்டமானதாகவே யிருக்கும். தொழிலாளிகள் நிலை ஓங்கி மிளிரும் நாள் சமீபத்திலிருக்கின்றதெனக் கருதுவதற்கான அறிகுறிகள் நாள்தோறும் பெருகிக்கொண்டிருக்கின்றன. முதலாளிகளுக்கும், மதஸ்தர்களுக்கும், அரசியலாளர்களுக்கும் அசௌகரிய மேற்படுத்தாமல் தொழிலாளியும் விவசாயியும் பட்டினியாக கஷ்டப்படும் தன்மை சிறிதும் இனியேல் இருக்கமுடியாது. முக்கியஸ்தர்கள் ஒருவருக்கொருவர் போராடுவதை விடுத்து ஒன்றுபடவேண்டிய சமயம் வந்துவிட்டது. மேற்கூறிய சமதர்மத்திட்டத்தைக்கொண்டு பலாத்காரமற்ற முறையில் சமூகத்தை புனருத்தாரணம் செய்யவேண்டுமென்ற சுயமரியாதைத்காரர்களின் எண்ணம் ஈடேறு முன்பாக, தமக்கு ஏற்படப்போகும் தொல்லைகளின்று தம்மை காத்துக் கொள்ள வேண்டி அக்கறை உள்ளவர்கள் தம்மை ஒன்று படுத்திக் கொள்ளச் செய்யும் முயற்சியால், சமூகத்தலைகளை இருக்கவும் செய்வார்கள். இடையறாது தொல்லைகளுக்குட்படுத்தப்படுத்தப்படும் பூமியின் பொறுமையையொத்திருக்கிறது. சமூகத்தின் நிலை வெகு நாட்களுக்குப் பிறகாயினும் கூட ஒருநாள் திடீரென பூமி கலக்க முற்றுக்கிளம்புகிறது- ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சுமத்தப்பட்டிருந்த குப்பை கூளங்கள் பூமியின் அதிர்ச்சியினால் வெகுதூரத்திற்கப்பால் எறியப்படுகின்றன. மக்கள் வாழ்கையிலும் இது முற்றும் உண்மையாவே யிருக்கிறது. தன்னுடைய வெற்றியையும், தோல்வியையும், பொருட்படுத்தாது ஜனசமூகத்தில் ஏற்படக்கூடிய அதிர்ச்சிகளை நீக்கவேண்டியது சுயமரியாதைக்காரர்களுடைய கடமையாகும்.

தோழர்களே! சுயமரியாதைக்காரர்களைக்குறித்தும், அவர்கள் வேலையைக்குறித்தும் ஒரேஒரு விஷயம் கூறவேண்டியது பாக்கி யிருக்கிறது. நீங்கள் எந்தக் கொடிக்கீழ் செல்லினும் சரி. மேலேகுறிப்பிட்ட வழியில் அரசியல் போக்குகளை அனுசரித்த திட்டமென்ற யோசனைகளை சுயமரியாதைக்காரர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை பார்க்கவேண்டும். சுயமரியாதைக்காரர்களுக்குள்ளேயே இந்த வழியான அரசியல் யோசனையில் அனேக மறுப்புகள் இருக்க வசதிகளிருக்கின்றன. சமீ

பத்தில் இந்த இயக்க வளர்ச்சியை முன்னிட்டு கூடப்போகும் மாகாண மகாநாட்டில்இந்தப்பிரச்சினை ஸ்திரமாக ஏற்படுத்த முயற்சிப்பார்கள். சுயமரியாதைக்காரர்கள் சமுதாயத்துறையில் செய்யும் முயற்சியில் எவ்வளவு வெற்றியுண்டோ அதன் பேரில்தான் ராஜீயத்துறையின் வெற்றி பொறுத்திருக்கிறது. கொடியமுறைகளுடன் தான் உங்கள் போராட்டமே தவிர நபர்களுடனன்று என்னும் உண்மையை மறந்துவிடக்கூடாது. உங்களுடைய பணியின் நோக்கம் பொதுஜன முன்னேற்றமாகயிருக்கவேண்டும். இதுவரைச் செய்து வந்ததுபோல் இனியும் இந்தக்கருத்துக்களைப் பரவச்செய்ய வேண்டியது ஓர் முக்கியமான வேலை. பலதிறப்பட்டவர்களையும் ஒன்றுபடுத்துக. பயன் தானுகவே ஏற்படும். வேலை தானுகவே நடைபெறும். நன்கு ஆராய்ந்து தெளிவான முறையைக்கொண்டு செல்க! தேசிய புனருத்தாரணத்திற் கென போர் முனை புகும்போது சமாதானமென்னும் கேவல உணர்ச்சிக்கு ஆளாகக் கூடாது. உங்களுடைய பணிக்குத் தடையாகசமூகஸ்தாபனமோ, மதஸ்தாபனமோ, அரசியல்ஸ்தாபனமோ குறுக்கிடுமானுல், அது தானுகவே சக்தியற்று ஒழிந்து விடும். உங்களுடைய உண்மையான நோக்கத்தையும், நேர்மையான உழைப்பையும் பொருத்துத் தான் இந்திய சமூகத்தின் பிற்காலவாழ்க்கையின், நலமோ, தீமையோ அமையும் என்பதைத் தவிர வேறெதுவும் நான் உங்களுக்குக்கூற வேண்டியதில்லை.

தோழர்களே! நான் கூறியவைகளைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்தமைப்பற்றி உங்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். இன்று மகாநாட்டில் தீர்மானங்களும், நிகழ வேண்டியிருப்பாதால் பாக்கி விஷயங்களை எனது முடிவுரையில் சொல்கிறேன்.

தலைவர் உரை முடிந்ததும் தோழர்கள் ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், கே. வி. அழகர்சாமி முதலியவர்கள் "நமது கடமை" என்பதுபற்றி முறையே இரவு 9-30 மணிவரை சொற்பொழிவாற்றினுர்கள். அத்துடன் இரவு போஜனத்துக்காக மகாநாடு கலைந்தது.

இரவு 10 மணிக்கு விஷயாலோசனைக்கமிட்டி கூட்டம்.

தோழர் எஸ். முருகேசம் அவர்கள் இல்லத்தில் தோழர் முத்துசாமி வல்லத்தரசு தலைமையில் விஷயாலோசனைக்கூட்டம் ஆரம்பித்து பல தீர்மானங்கள் விவாதத்தினிடையே முடிவு செய்யப்பட்டன.

9—4—33 காலை 9-மணிக்கு மகாநாடு ஆரம்பித்து அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

நிறைவேறிய தீர்மானங்கள்.

1. (அ) நமது இயக்கத்திற்கு தூண்போலிருந்து உறுதியுடனும், தைரியத்துடனும் உழைத்துவந்த தோழர் சிவகெங்கை எஸ். ராமச்சந்திரன் அவர்கள் மரணத்தைக்குறித்து இம்மகாநாடு தனது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

(ஆ) சட்டசபையில் வெகுநாளாக உழைத்து வந்தவரும்,பொது நலக் காரியங்களில் ஈடுபட்டு தைரியமாய் சீர்திருத்த முயற்சிகளில் கலந்துழைத்தவருமான தோழர் பி. எஸ். கேசவபிள்ளை அவர்கள் மரணத்தைக் குறித்து இம்மகாநாடு வருத்தத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. சுயமரியாதை இயக்க ஸ்தாபனத்தின் தலைவரும், நமது இயக்கத்திற்கு பலவித ஆதரவளித்து வருபவருமான தோழர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ. அவர்கள் இந்திய சட்ட சபைக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து இம்மகாநாடு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னவரை மனமாரப்பாராட்டுகிறது.

மேற்கண்ட இரண்டு தீர்மானங்கள் மகாநாட்டின் தலைவரால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியன.

3. விருதுநகர் மாகாணச் சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

பிரேரேபித்தவர்—எஸ். நீலாவதி
ஆமோதித்தவர்—அழகிரிசாமி.
ஏகமனதாக நிறைவேறியது.

4. ஈரோடு வேலைத்திட்டக்கமிட்டிக்கூட்டத்தில் வகுக்கப்பட்ட சுயமரியாதை இயக்க லட்சியத்தையும், வேலைத்திட்டத்தையும் மாகாண மகாநாட்டிற்கு இம்மகாநாடு சிபார்சு செய்கிறது.

பிரேரேபித்தவர்—ஈ. வெ. ராமசாமி
ஆமோதித்தவர்—டி. பி. ஆறுமுகம்
குறிப்பு,—இத்தீர்மானத்தைப் பிரரேபித்து பேசிய பிரசங்கம் அடுத்த இதழில் வெளிவரும்.

தோழர் ஆளவந்தான் என்றவர் இத்தீர்மானத்தை ஒத்துக்கொண்டாலும் கால நிலையில் கூடாதென்று எதிர்த்தார். அவருடைய எதிர்ப்பிற்கு தோழர் ஈ. வெ. ராமசாமி பதில் சொல்லியதும் தீர்மானம் நிறைவேறியது.

5. காப்பி கிளப்புகளில் ஆதித்திராவிடர்களை அனுமதிக்காமல் இருப்பதை இம்மகாநாடு கண்டிக்கிறது. ஒவ்வொரு முனிசிபாலிடிகளிலும், காப்பி கிளப்புகளிலும் ஆதிதிராவிடர்களை அனுமதிக்கவேண்டும். அப்படி இல்லாத கிளப்புகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதை ரத்து செய்ய வேண்டும் என்று இம்மகாநாடு தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு முனிசிபாலிட்டிகளையும் கேட்டுக்கொள்கிறது.

பிரரேபித்தவர்—கே. முருகேசன்
ஆமோதித்தவர்—டி. எஸ். ராமலிங்கம்

6. சர்க்காரின் மதநடு நிலைமைக் கொள்கையை இம்மகாநாடானது மனித சமூக முற்போக்கையும், சாந்தியையும், பகுத்தறிவையும் உத்தேசித்து பலமாய்க்கண்டிக்கிறது.

இனி எந்த காரணம்கொண்டும் மதநடுநிலைமை என்கின்ற சாக்கை சொல்லிக்கொண்டு மக்கள் சமூகத்தை மிருகப்பிராயத்தில் வைத்துக் கொண்டிராமல் பகுத்தறிவிற்கும், சமதர்மத்திற்கும், முற்போக்குக்கும் அவசியமான மாறுதல்களை உடனே செய்யவேண்டுமென்று இம்மகாநாடு வலியுறுத்துகிறது.

பிரரேபித்தவர்—அ. ரத்தினசபாபதி.
ஆமோதித்தவர்—ப. ஜீவானந்தம்.
ஏகமனதாய் நிறைவேறியது.

காரைக்குடியில் சமூகசீர்திருத்தப் பிரசாரம் செய்த தோழர்கள் ப. ஜீவானந்தம், சுப. ராமசுப்பையா, கணபதி ஆகியவர்களை போலீசார் அக்கிரமமாகப் பிரவேசித்து அடித்து துன்புறுத்தி அவமானப்படுத்தியதை இம்மகாநாடு வலிமையாய் கண்டிப்பதுடன் மேலதிகாரிகள் இதன் அக்கிரமத்தை விசாரித்து இனி இந்தப்படி நடக்காமல் இருக்கும்படி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இம் மகாநாடு வற்புறுத்துகின்றது.

பிரரேபித்தவர் அ. பொன்னம்பலனுர்
ஆமோதித்தவர்—கே. வி. அழகிரிசாமி
ஏகமனதாக நிறைவேறியது.

8. ஸ்தாபித்தகாலமுதல் (18—11—28)ஆதிதிராவிடர்களின் சமூகமுன்னேற்றத்திற்காகப் பல துறைகளிலும் உழைத்துவரும் நாகை தாலூகா 67 நெம் கூத்தூர் வட்டத்திலுள்ள வைக்கம் வீரர் இலவச வாசக சாலைக்கு அடியில்குறிப்பிட்ட ஸ்தலத்தை கட்டிடம் அமைக்க அடமானம் செய்துகொடுக்க வேணுமென்று நாகை தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டார் கவர்ண்மெண்டாரைக்கேட்டுக் கொண்டும் அடமானம் செய்ய சென்னை ரிவின்யூ டிபார்ட்மெண்டார் மனுதளிக்கும் விஷயமாய் இம்மகாநாடு வருந்துவதோடு ரிசர்வே 31 ல் 5-புஞ்சைசத்தருசும் பூமி சுருபத்தில் பாழுங்குட்டையாய் சுகாதாரத்திற்கு கெடுதலாக இருந்து வருகிற புறம்போக்கு எட்டு செண்டு ஸ்தலத்தை வாசகசாலை அமைக்க அடமானம் செய்து கொடுக்கும்படி சென்னை சர்க்காரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

பிரரேபித்தவர்-எஸ். முத்துகிருஷ்ணன்.
ஆமோதித்தவர்—ஏ. சிவராமசாமி.
ஏகமனதாக நிறைவேறியது.

ஈரோடு வேலைத்திட்டக் கமிட்டிக் கூட்டத்தில் வகுக்கப்பட்ட சுயமரியாதை இயக்க லட்சியத்தையும், வேலைத்திட்டத்தையும் சீக்கிரத்தில் ஒரு மாகாண மகாநாட்டைக் கூட்டுவித்து அதில் ஓர் முடிவான திட்டத்தை வகித்திட இம்மகாநாடு சுயமரியாதை இயக்க ஸ்தாபகரை வேண்டிக்கொள்கிறது.

பிரரேபித்தவர்-என். பி. காளியப்பன்
ஆமோதித்தவர்— சி. நடராஜன்
ஏகமனதாக நிறைவேறியது.

10. கலப்பு மணங்களையும், விதவை மணங்களையும் இன்னும் பிரபலமாய் நடத்திவருவதற்கு ஒரு தனி ஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டுமென்று இம்மகாநாடு சிபார்சு செய்கிறது.

பிரரேபித்தவர்—எஸ். நீலாவதி
ஆமோதித்தவர்—ராஜாம்பாள்
ஏகமனதாக நிறைவேறியது.

11. வாடகை பஸ் சொந்தக்காரர்கள் ஆதிதிராவிட பிரயாணிகளை பஸ்களில் ஏற்றிக்கொள்ள மறுக்கின்ற கொடுமையை இம்மகாநாடு பலமாகக்கண்டித்து வெறுப்பதுடன் கலெக்டர் அவர்களையும், ஜில்லா போர்டு பிரசிடெண்ட் அவர்களையும் இதை கவனித்து தக்கது செய்வதுடன் இக்கொடுமையை அகற்றுவதற்காக மறுக்கும் பஸ்களுக்கு உள்ள லைசென்சை கான்சல் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறது.

தலைவரால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

12. சென்னை மாகாணத்தில் தஞ்சை ஜில்லாவை ஒரு "மாடல்ஏரியாவாக" (பகுதியாக) எடுத்துக்கொண்டு சுயமரியாதைஇயக்கஜில்லா,தாலூகா கிராமங்களை ஏற்படுத்தி நமது வேலைத்திட்டத்திற்கண்ட துறைகளிலும் வேலை செய்து காண்பிக்க ஒரு கமிட்டி நியமிக்க இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

தலைவரால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

13. இவ்வியக்கம் இதுவரை செய்துவந்ததேபோல் சமூக சீர்திருத்தவேலைகளை மாத்திரம் செய்து வரும் ஒரு தனி ஸ்தாபனமாகவும் அரசியல் துறையில் வேலை செய்ய ஓர் தனி ஸ்தாபனமாகதனித்தனியே ஒன்றையொன்றை பாதிக்காதவண்ணம் ஏற்படுத்தவேண்டுமென்று சமீபத்தில் கூடும் நமது மாகாண மகாநாட்டில் தீர்மானிக்கும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

தலைவரால் பிரரேபிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

அகில இந்தியா டிரேட் மார்க் ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி.
(Govt Rgd)

உங்களுடைய டிரேட் மார்க்குகள், பெயர்கள், காப்பிரைட் முதலியவைகளை பிறர் உபயோகித்து உங்களுடைய நற்பெயரின் பயன்களையும் லாபங்களையும் அன்னியர் அடையாமல் இருக்கும் பொருட்டு 1908ம் வருஷத்திய XVI நெம்பர் ஆக்டுப்படி இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள். முழு விபரங்களுக்கு எழுதவும்.

ஏஜெண்டுகள்:—
கே. எல். ஜி. குப்தா அண் கோ.,
கடைவீதி, ஈரோடு.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

போரும் யுத்தத்தை அவர் அறிவித்து விட்டார். அன்றிரவே அவர் கச்சிறு யுத்த அரங்கத்திற்குச் சென்று அங்குப் படையெடுத்து வரக்காத்துக்கொண்டிருந்த "கோஷாக்" பட்டாளத்தை எதிர்த்து அதைச் சிதைவுற அடித்தார். அந்தப் பட்டணத்தில் தளகர்த்தர் "காஸ்ரோல்" சரணுகதியடைந்தார். கிராஸ்கி ஓடி ஒளிந்தார். இவ்வாறு போல்ஷவிக் இயக்கத்தின் விரோதிகள் அடக்கப்பட்டனர்.

நவம்பர் மாதம் 1ந்தேதிதலைநகரில் நடந்த புரட்சி யுத்தம் தேச முழுவதிலும் பரவிவிட்டது. எங்குபார்த்தாலும் கலகங்களை நடந்தன. ஒவ்வொரிடத்திலும் சோவியத்காரர்களே வெற்றி பெற்று அதிகாரத்துடன் விளங்குகிறார்கள். அவர்கள் முதலாளிகளுக்கு விரோதமாய் தொழிலாளர்களுக்காகப் போராடுவதாய்க் கூறிவந்தார்கள். அவர்களுடைய கோஷம் "தொழிலாளர் சோவியத்திற்கு வெற்றி என்பதாக இருந்தது அவர்கள் சிகப்புக்கொடியை ஏந்தி நின்றார்கள். அவர்களுடைய சேனைக்குச் சிகப்புச்சேனையென்று பெயர். இந்த சேனையின் உதவியாலும் தொழிலாளர் கூட்டுறவினாலும் போல்ஷ்விக்கர்கள் ருஷ்யா முழுவதிலும் சிகரில் வெற்றியடைந்தார்கள். போல்ஷ் விக்கர்களுடைய புரட்சிக்கு மூலாதாரமாய் இருந்தது "கார்ல் மார்க்ஸ்' என்ற ஜர்மன் ஞானியின் பொதுவுடமைக்கொள்கையாகும். அவர்களுடைய நோக்கம் ருஷ்யாவிலுள்ள முதலாளி வர்க்கத்தை மட்டும் அழிப்பது அன்று. உலகத்திலுள்ள முதலாளி வர்க்கத்தையே இருந்த இடம் தெரியாமல் நசுக்கிவிடவேண்டுமென்பதே. வெகுநாட்களாக முதலாளிகளுடைய கொடுமை ஒழிந்து, ஏழைகளுடைய நிரந்தரமான, சமமான, பொருளாதார ஆதிக்கத்தை அடையச் செய்யவேண்டுமென்று காணப்பட்டுவந்த கனவு ருஷ்யாவில் நிறைவேறி விட்டது. புதிய கொள்கையுடன், புதிதாய் அமைக்கப்பட்ட ருஷ்ய சோவியத் அரசாங்கம் வெற்றி பெற்ற பின்பும் தன்னுடைய விரோதிகளை முற்றிலும் அடக்க மூன்று வருட காலம் ஆயிற்று.

சோவியத் அரசாங்கத்தின் வேலை.

நவம்பர் மாதம் 7, 8 தேதிகளில் கூடிய "பிட்ரோகிராட் காங்கிரஸ் மகாசபை" இரவு பகலாய் விழித்திருந்து பின் கண்ட தீர்மானங்களைச் செய்தது. "போல்ஷ்விக் மத்தியக் கமிட்டியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு கவுன்சிலினிடமே, அரசாங்கத்தின் சக்தி முழுமையும் இருக்கவேண்டும். அந்த அரசாங்கத்திற்கு லெனின் பிரதமமந்திரியாயும், டிராஸ்கிஅன்னிய நாட்டு மந்திரியாயும் இருக்க வேண்டும். சோவியத் அரசாங்கத்தின் முதல் சட்டம் நவம்பர் மாதம் 8ந்தேதி செய்யப்பட்டது. அதன்படி நிலங்களில் வேலை செய்துவந்த தொழிலாளிகளுக்கே அவை சொந்தமாய் இருக்கவேண்டுமென்றும் அவர்கள் எவ்வித வரியோ, கட்டணமோ செலுத்த வேண்டியதில்லை" என்று தீர்மானிக்கப்பட்டது. இரண்டு மாத காலங்களில் தொழிற்சாலைகளை வைத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

ஐரோப்பிய யுத்தத்திலிருந்து ருஷ்யா விலகிக்கொள்ள சமாதானம் செய்யவேண்டியது பாக்கியிருந்தது. அது நவம்பர் மாதம் 9ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. டிராஸ்கி யுத்தம் செய்த எல்லா தேசத்தாருக்கும், கம்பியில்லாத தந்தி மூலம் உடனே ஒரு சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு செய்தியனுப்பினர். இதை எதிர்த்து ருஷ்ய சேனாதிபதியான "ஜனரல் டுகோனின்" என்பவரைக் கைவசப்படுத்திக்கொண்டு அவரை தேசத்துரோகம் செய்யும்படி தூண்டினார்கள். இதையறிந்த சோவியத் அரசாங்கம், அவரை நீக்கி விட்டு "கிரிலேன்கோ" என்பவரை அவருடைய ஸ்தானத்தில் நியமித்தார்கள். நீக்கப்பட்ட "டுகோனின்" சில சிப்பாய்களால் துண்டு துண்டாய்க் கிழித்தெரியப்பட்டார். இதிலிருந்து சிப்பாய்கள் லெனினை ஒப்பற்ற தலைவராய் ஏற்றுக்கொண்டார்கள் என்பது தெளிவாயிற்று. பின்னால் ஜெர்மனி, ருஷ்யாவோடு சமாதானம் செய்து கொண்டது. சோவித் அரசாங்கத்தின் முக்கிய விரோதிகள் மத்திய வகுப்பார்கள். அவர்களுடைய கலகத்தை லெனின் மிகுந்த சாமார்த்தியத்துடன் அடக்கி வந்தார். "பிட்ரோகிராட்டிலிருந்த பெருஞ் செல்வர்கள் அவரோடு ஒத்துழைக்க மறுத்தார்கள். உடனே அவர் பாங்கிகள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாய் இருக்கக்கூடாதென்றும், அவை சர்க்காருக்கே சொந்தம் என்றும் ஒரு சட்டம் செய்துவிட்டார். மற்றொரு சட்டத்தால் தொழிற்சாலைகளை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கிவிட்டார். 1918ம் வருடம் மே மாதம் சர்க்கார் உற்பத்தியைக் கவனித்து மேல் பார்ப்பதற்கு ஒரு சர்க்கார் கௌன்சில் அமைக்கப்பட்டது. அடுத்த மாதம் எண்ணை உற்பத்திக்கும், அப்படியே செய்யப்பட்டது. பின்னால் காலடவில், நூல் உற்பத்தி, தீக்குச்சி புகையிலை, தேயிலை முதலியவற்றின் பொருட்சாலைகளெல்லாம், சர்க்காருக்குச்சொந்தமாக்கப்பட்டன. இவ்வாறு செய்யப்பட்டு வந்ததில் 1916ம் வருடம் ஜூன் மாதம் 28 தேதிவரை பத்து லக்ஷம் ரூபிள் (ரூபிள் என்பது ருஷ்ய நாணயம்) மதிப்புள்ள தொழிற்சாலைகளும் வர்த்தக ஸ்தாபனங்களும் சர்க்காரின் பொதுவுடமை ஆக்கப்பட்டன.

மனிதனைப் பிறந்து கொடுமை பூண்டு ஒழுகிக்கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை, கஷ்டமாக்கி, வதைத்து வந்த ஜார் மன்னன் ஹிமயமலை வீழ்ந்ததுபோல் திடீரென்று வீழ்ந்து விட்டான் அல்லவா? சிறையில் வைக்கப்பட்டிருந்த அவனும் அவனுடைய குடும்பத்தாரும் 1916 வருடம் ஜூலை மாதம் 18ம் தேதி கொல்லப்பட்டார்கள். சாதாரணக்குற்றவாளிகளுக்காவது ஒரு விசாரணையுண்டு. இந்தக் குடும்பத்தாருக்கு அதுவுமில்லாமல் போயிற்று. சோவியத் அரசாங்கம் இது சம்பந்தமாகச் செய்த தீர்மானம்:— "ஜாரும், ஜாரினியும், அவருடைய மகனும், நான்கு புத்திரர்களும் மரண தண்டனை விதிக்கப்படுகிறார்கள்" அவர்களுடைய பிரேதங்கள் ஆடைகள் கழற்றப்பட்டு பெட்டிகளில் வைத்துப்புதைக்கப்பட்டன வென்றும், அவர்களுடைய உடைகளும், நகைகளும் எறிக்கப்பட்டன வென்றும் சொல்லப்படுகிறது.

ஐக்கிய ருஷ்ய அபேதவாதக் குடியரசு.

1917ம் வருடம் முதல் ஏற்பட்ட குடியரசு மாகாணங்கள் ஒன்றுக்கொன்று விசேஷ சம்மந்தமில்லாமல் இருந்தன. இதைநிவர்த்திசெய்ய1922ம் வருடம்பொதுவுடமைக் கட்சிக்காரியதரிசியான "ஸ்டாலின்" என்பவரை ஒரு சமஷ்டித்திட்டம் தயாரிக்கும்படி அரசாங்கத்தார் வேண்டிக்கொண்டனர். பின்னால் அவர் தயாரித்த திட்டப்படி அரசாங்கத்திற்கு "ஐக்கிய ருஷ்ய அபேதவாதச் சோவியத் குடியரசு" என்ற பெயர் 1923ம் வருடம் ஜூலைமாதம் 6ம் தேதி சூட்டப்பட்டது. இந்தக் சோவியத் அரசாங்கத்தின்மாகாணங்களுக்கு முக்கியமான எல்லா சுதந்திரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை விலகிக் கொள்ள வேண்டுமென்று இஷ்டப்பட்டால் விலகிக் கொள்ள உரிமையுண்டு. மத்திய அரசாங்கம், யுத்தம், கப்பல்படை, அன்னிய நாட்டு விஷயங்கள், வர்த்தகம், போக்கு வரத்து, தபால் தந்தி முதலியவற்றை மட்டும்தன் வசம் வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த அரசாங்கத்தையும் ஆட்டுவிப்பதே ருஷ்யப் பொதுவுடமைக் கட்சி என்பது கவனிக்கத்தக்க விஷயமாகும். எல்லா மாகாணங்களையும் ஒன்று சேர்த்து ஐக்கியமாக இருக்கும்படி செய்வதும் இக்கட்சியே யாகும்.

ருஷ்யாவின் புதிய அரசாங்கத்தை மற்ற நாடுகள் வெகுகாலம் ஒப்புக்கொள்ள மனமில்லாமல் மறுத்து வந்தன. ஆனால் பின்னால் அவ்வரசாங்கத்தின் வல்லமையை அறிந்து இப்பொழுது முக்கியமான நாடுகள் எல்லாம் அதை ஒப்புக்கொண்டு விட்டன. பிரிட்டன் 1924ம் வருடம் பிப்ரவரி மாதம் 1ம் தேதி அதை ஒப்புக்கொண்டது. பிரான்ஸ், இத்தாலி, ஜர்மனி முதலிய நாடுகளும் ஏற்றுக்கொண்டன, முடிவில் 1925ம் வருடம் ஜனவரி மாதம் 1ம் தேதி ஜப்பானும் ஒப்புக்கொண்டது.

பாதுகாப்பு.

மிக விரைவாய் முன்னேறி, எங்கும் காணாத புதுமையாய் ஆச்சரியகரமான ஒரு அரசாங்கத்தை ருஷ்யாவில் ஸ்தாபித்துவிட்ட தலைவர்கள், அதன் பாதுகாப்பிற்குத் திறமை மிக்கதோர் இராணுவம் இன்றியமையாததென்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். சோவியத் அரசாங்கத்திற்கு உலகிலுள்ள பல நாடுகளும், முதலாளிமார்களும். விரோதிகளாய் இருக்கின்றனர் அதை முளையிலேயே கிள்ளி விட வேண்டுமென்ற வைராக்கியத்துடனுழைத்த ஐரோப்பிய நாடுகள் ஒன்றிரண்டல்ல. அவைகட்டி விட்ட பொய்யும், புழுகும் கணக்கிலடங்காதவை. அவை செய்த சூழ்ச்சியும் வம்பும் கொஞ்சமல்ல, இன்றைக்குத்திடீரென்று யுகம் புரண்டு ஒரு பெரிய அக்கினி ருஷ்யாவை எரித்துவிட்டால் அதைக்கண்டு சந்தோஷிக்காத ஐரோப்பிய நாடே இருக்காது.

ஆனால், "ருஷ்யர்கள் சுவர்க்கத்திற்குப் போனாலும் அங்கேயும் தேவர்களுடன் பொதுவுடமை வேண்டுவார்கள்" என்பதில் சந்தேகமில்லை. பொதுஉடமை அவர்களுடைய ரத்தத்திலும் "ஆன்மா" விலுங்கூட ஊரிப்போய் விட்டது "ஜார்" மன்னன் காலின் கீழ்பட்ட இம்சையை அவர்களே அறிவார்கள். பாதுகாப்பிற்காக ருஷியாவில் இரண்டு சேனைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று நிரந்தரமாயுள்ளது. மற்றது அடிக்கடி உபயோகத்திற்கு புதியதாய்ச் சேர்க்கப்பட்டது 1925ம் வருடம் சேனையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன வருஷந்தோறும் 10 லக்ஷம் மனிதர்களுக்கு ராணுவபயிற்சி கொடுக்கப்படுகிறது. பட்டாள அதிகாரம் முழுவதும், தொழிளாளர்கள் கையிலேயே உள்ளது. ருஷியாவில் ஆணும் பெண்ணும், கட்டாயம் ராணுவப்பயிர்ச்சி பெறவேண்டும் என்று விதி செய்யப்பட்டிருக்கிறது. சிப்பாய்களுக்கு புதிய, துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டு, நவீன யுத்தமுறைகளில் மிகுந்த பயிற்சி கொடுக்கப்படுகிறது, தற்போது ருஷிய சேனையிலும், கடற்படையிலும் சுமார் 562000 (ஐந்துலக்ஷத்து அறுபத்தூராயிரம்) பேர்கள் இடைவிடாமல் சேவை செய்வதாகக்கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் எல்லைப்புரபாது காப்பிற்கு தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற 500 வருடகாலமாக ருஷ்யாவைப்பல வெளிநாட்டார்கள் எதிர்த்துப் பார்த்தும் இது வரை ஒருவராலும் அதை ஜெயிக்க முடியாமலிருக்கிறது. அப்படியிருந்த போதிலும், ருஷ்ய சோவியத் அரசாங்கம் ஏராளமான படையை வைத்துப் பரிபாலித்து வருகிறது.

(தொடரும்)

ANANGARANGABATIKA

(Enjoyment Pill)

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY

and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of tailure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

"SAILASRAM" (K)

Chandanpur,

(Khulna) E. B. R.

உங்கள்.

கண்ணையும்

காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta

The Rational Books Publishing Society Ltd.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட

3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்க முன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ. 2½ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு: — விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,

43, கச்சேரி வீதி, ஈரோடு.

ரூபாய் 3—12—0 க்கு மூன்று உத்திரவாதமுள்ள கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

நமது கடிகாரங்கள் போலியானதென்று நிரூபிப்பவர்களுக்கு ரூபாய் 1000 இனாம்.

ஆட்டோ சுகந்தராஜ் (இலந்து பூத்த புஷ்பங்களின் சத்து) உங்களுடைய மனதை ரம்மியமான வாசனையோடு 24 மணி நேரம் வரையில் வசீகரிக்கச் செய்யும் விலை 0-3-0. படைமருந்து 24 மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு விலை 0-3-0. ஷை 2 தினுசுகள் சேர்ந்தாவது தனித்தனியாவது 24 புட்டிகள் அல்லது டப்பிகள் ரூபாய் 3-12-0 க்கு ஆர்டர் செய்தால் பிளேடோடு கூடிய சேப்டி சவரக்கத்தி, சோப், கண்ணாடி, பிரஷ், சீப்பும், பவுண்டன் பேனா, கைகுட்டை, பாக்கெட் விசிரி, சிறந்த டைம்பீஸ், அல்லது ரயில்வே லீவர் பாக்கெட் கெடியாரம் கெமிகல் பவுன் மோதிரம், மணிப்பர்ஸ், பிஸ்டல், பாட்டரி லாம்ப் கூலிங்கிளாஸ் ஒரு ஜதை வெள்ளை கான்வாஸ்பூட்ஸ் அல்லது 30 கலர் பிலிமோடு கட்டிய பயாஸ்கோப் மிஷின், லீவர் கை கெடியாரம், ஒவ்வொரு கடியாரமும் 10-வருடம் உத்தரவாதம். விருப்பமுள்ளவர்களுக்கு காலெண்டர் கேட்லாக் இனாமாக அனுப்பப்படும். பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம்.

Bharat Union Trading Co.,

Post Box No. 2394, See 20, Calcutta.

தீராத வெட்டை நோய்க்கு உத்திரவாதம்.

11-நாட்களில் குணமாகும். 22 மாத்திரை கொண்ட மருந்து பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:-- நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)

தெக்ஷணமூர்த்தி தமிழ் வைத்தியசாலை,

திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா)

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
5.	விசாலாட்சி அல்லது கட்டறுத்த காரிகை ...	0—4—0
6.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை	0—6—0
7.	மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0
	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0

The crux of the Indian Problem
By Dr. P A R A N J P Y E (in English.)

விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

டாக்டர் சிங்காரம் அவர்களின் மஹா சந்தனாதித்தைலம்.

(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்குஇத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்	பீனிசம்
கண் சிவப்பு	தலை மயக்கம்
கண்ணில் நீர்வடிதல்	தலைப் பொடுகு
கண் அரிப்பு	சொரி சிரங்கு
கண் பார்வைக்குறைவு	தலைமயிர் உதிர்தல்
கண் கூச்சம்	நாள்பட்ட தலை நோய்
கண்ணில் பீளை சாருதல்	முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.
மேக நீர், வெள்ளெழுத்து	
ஒருத்தலை நோய்	
கை கால் எரிச்சல்	
மூலச்சூடு	
அஸ்திகாங்கை	
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்	பத்தியமில்லை.
காது நோய், காது மந்தம்	24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0
மண்டை இடி	12 ,, ,, ரூ. 2-2-0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

பண்டிட் ஆனந்தரின், அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துகொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியததாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவ்தாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ன அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுயமரியாதை இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முதலிய எல்லா தலைவர்களது படமும் 6½ x 4¼ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 0—12—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 12—8—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் [illegible] சைஸில் உள்ள படம் ரூ 0—12—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். முன்பணமில்லாது ஆர்டரை கவனிக்கப்படமாட்டாது.

விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்கார்த்தெரு,
ஈரோடு.

குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.
விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.
இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்டது. இதன் விலை அணா. 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி.
முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.
இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.
இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.
இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம்.
இதன் விலை அணா 0—3—0 .

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.
இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.
இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.
விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?
இதன் விலை அணா 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.
இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?
விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.
விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.
விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.
விலை அணா 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஈ. வெ. இராமசாமி.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல்நாட்டு, அதாவது ரஷியா, பிரான்ஸ், ஜெர்மனி, டர்க்கி, கிரீஸ் கொழும்பு முதலிய இடங்களில் நமது இயக்க சம்பந்தமான தலைவர்களுடன் உட்கார்ந்து எடுத்த போட்டோக்கள் கீழ்க்கண்ட சைஸ் பிரகாரம் விலைக்கு விற்கப்படும்.

6½ x 4¾ தோழர்கள் ஈ. வெ. ரா. நாகம்மையாரும், ஈ. வெ. ராமசாமி அவர்களும் சேர்ந்திருக்கக்கூடிய தனிக்காப்பி

1க்கு 0-8.0
ஷை 8½ x 6½ சயிஸ்1க்கு 0-12-0
ஐரோப்பாவில் எடுத்த
6½ x 4¾ சயிஸ் தனிப் போட்டோ burst 1க்கு 0-8-0
15 x 12 என்லார்ஜ் மெண்டு ஷை காப்பி 1க்கு 10.0-0
23 x 17 ,, ,, 17.0-0

தனிக்காப்பி வேண்டுபவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6-4-0 ரூ. வீதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

விலாசம்:—
நியூஸ்டார் போட்டோஸ் டுடியோ,
ஸ்டேஷன் ரோட்,
கோயமுத்தூர்.

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் இடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம் —
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

சுயமரியாதை தங்கரத்தினத் தெம்பாங்கு.

இது விருதுநகர் 3வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை ரூ. 0-1-0
,, 12க்குத் தபாற் செலவுள்பட ,, 0-12-0
,, 100க்கு ,, ,, 5-4-0

தனிப்பிரதி வேண்டுவோர் 0-1-6 அணா ஸ்டாம்பு அனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கல்வார்பட்டி.
காசிபாளையம் போஸ்டு,
[திண்டுக்கல் வழி]

கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப் பட்டது.